கம்பராமாயணம்

கிட்கிந்தா காண்டம்

(சுருக்கம்)

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1929

ரெஜிஸ்தர் செய்தது]

[விலை 13 அணா

2. கம்பராமாயணத்தை முற்றும் கற்றுணர விரும்பும் தமிழ் மாணவர்களும், 'ஸ்கூல் பைனல்' (School Final) பரிக்ஷைக்குப் பயிலும், 4, 5, 6-ஆம் பாரங்களில் (Forms) வாசிக்கும் சிறுவர்களும் கம்பருடைய கவிநயங்களை ஒருவாறு உணர்ந்துகொள்ளும் வண்ணம் ஒவ்வொரு காண்டத்தையும் சுருக்கமாகத் தொகுத்து, கதைப்போக்கு விளங்குமாறு உரையிடையிட்டு வெளியிடவேண்டும் என்னும் நோக்கத்துடன், இரண்டுமூன்று வருடங்கட்குமுன் பாலகாண்டமும், அயோத்தியாகாண்டமும், ஆரணிய காண்டமும் வெளியிட்டேன். நான்காவது காண்டமாகிய கிட்கிந்தா காண்டம் இப்போது வெளிவந்திருக்கின்றது. இப் புத்தகத்தைப் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர்கள் 4, 5, 6-ஆம் பாரங் கட்குப் பாடமாக அமைப்பின் மாணவர்கள் தமிழ் மொழியில் அபிவிருத்தி யடைவார்க ளென்பது திண்ணம். ஏனைய காண்டங்களும் இவ்வாறே விரைவில் வெளிவரும்.

3. மாணவர்கள் தாமே இந் நூலைப் படித்துணர வேண்டும் என்னும் நோக்கத்துடன் குறிப்புரையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

பதிப்பாசிரியன்.

கம்பராமாயணம்

(சுருக்கம்)

கிட்கிந்தா காண்டம்

பூமகள் கொழுநனும், புருடோத்தமனும், திருமகள் நாயகனும், உலகமுண்ட பெருவாயனும், கடல்நிற வண்ணனுமாகிய திருநெடுமால், திருவிளையாட்டாக எடுத்த அவதாரங்கள் பத்தனுள் இராமாவதாரம் ஒன்று. அவ்வவதாரத்தில் அத்திருநெடுமால் கோசலநாட்டின்கண்ணதாகிய திருவயோத்தியில் சக்கரவர்த்தித் திருமகனாய் அவதாரஞ்செய்து, தான் அணிந்திருந்த சங்கமும், சக்கரமும், பள்ளியாகிய பாயலும் தன் இளையவர்களாய் வந்து அடி பரவும்வண்ணம் அமர்ந்திருந்தனன். அவ்வாறமர்ந்த இராமன், இலக்குவன், பரதன்,

சத்துருக்கனன் என்னும் நால்வரில், இராமனும் இலக்குவனும் நெய்குழலூறும் இழையேபோல் இணைபிரியாமல் திரிவாராயினர்; பரதனும் இளவலும் ஒரு நொடிப்போதும் பிரியாமல் மருவி வாழ்வாராயினர். இவ்வாறு இச்சிறுவர்கள் நால்வரும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவரும் நாளில் ஒரு நாள் தவச்சிரேட்டராகிய கோசிக முனிவர் அயோத்தியை அடைந்து, தாம் தருவனத்துள் இயற்றும் தவவேள்விக்கு இடையூறு புரியும் நிருதர்களை விலக்குதற்குக் கரிய செம்மலாகிய இராமனைத் தருதி என்று உயிர் ஈர்க்கும் கொடுங் கூற்றெனத் தயரதனை வேண்டினர். அது கேட்ட மன்னர் மன்னவன், கண்ணிலான் பெற்றிழந்தான் எனக் கடுந்துயர் உழந்து முனிபுங்கவனை நோக்கி, 'தவச்சிரேட்டரே, பணி இதுவாயின் இராமன் சிறுவன், நிருதர் பெரியர், அவர் செய்யும் இடையூற்றுக்கு இடையூறகப் பெருவேள்வியை யானே காப்பேன்; எழுந்தருள்க' என்று விடையிறுத்தவளவில், கோசிக முனிவர்க்கு அளவிலாக் கோபம் உதித்தது. விசுவாமித்திர முனிவர்க்கு உதித்த கோபத்தைக் கண்ட வசிட்ட முனிவர் கோசிக முனிக்குச் சமாதானம் கூறிக் கரிய செம்மலைக் கோசிக முனிவருடன் அனுப்புமாறு தயரதனுக்கு நற்புத்தி புகட்டினர். குருவின் வாசகங் கேட்ட கொற்றவன் 'திருவின் கேள்வனைக் கொணர்மின்,' என்றனன். என்றலும், அறிவின் உம்பரான் அருகு சார்ந்தனன். அவ்வாறு சார்ந்த நம்பியைத் தயரதன் தம்பி தன்னோடும் முந்தை நான்மறை முனிக்குக்காட்டி, 'எந்தையே, இவர்க்கு நற்றந்தை நீ, தனித்தாயும் நீ, இவர்களைக் கையடைபாகத் தந்தனன், இயைந்த செய்க' என்றனன். நவைக்கண் நீங்கினான்

அவ் விரு மைந்தரையும் அழைத்துக்கொண்டு, இயற்கையின் முன் எடுத்த சிற்றத்தை விடுத்துத் தயாதனை இனிது வாழ்த்தி, 'மேல் அடுத்த வேள்வி போய் முடித்தும் நாம்' என்று நடத்தன் மேயினன். முனிவர்பெருமானது வேள்வியை முற்றுவிக்கச் செல்லும் இராம லக்குவர்கட்குத் தாடகை என்னும் அரக்கி வழியில் எதிர்ப்பட்டனள். சீராமன், முனிவர் கட்டளையை மேற்கொண்டு தாடகையை வதைத்து மேலே சென்று, அம் முனிவர்பெருமானது வேள்வியை முற்றுவித்தனன். பின்னர், சனகன் செய்யும் பெரு வேள்வியைக் காண எழுந்த முனிபுங்கவர், சீராமன், இலக்குவன் ஆகிய இருவருடன் மிதிலையை நோக்கிச் செல்லுகையில், சீராமன், வழியில் கருங் கல்லாய்க் கிடந்த அகலிகை சாபத்தை நீக்கி, அவளை பண்டைய வண்ணத்தளாம்படி செய்தனன். பின்னர், மூவரும் மிதிலையை எய்தி, சனகன் புரியும் பெரு வேள்வியைக் கண்டு, சால மகிழ்வெய்தினர். பின்னர், சீராமன் வில்லிறுத்துச் சிதையை மணம் புரிந்து தந்தையுடன் அயோத்திக்கு மீளுங்கால் எதிர்ப்பட்ட பரசுராமனது வில்லை இறுத்து, அயோத்திக்கு மீண்டமையும், பிறவும் பால காண்டத்தாற் பெற்றும்.

அயோத்திக்கு மீண்ட தயாதன் தன் அருமந்த புதல்வனாய காகுத்தற்கு முடி புனைந்து, அரசு பாரத்தை அவன் பியல் மிசைச் சுமத்தித் தான் அந்தமில் இன்பத்து அழிவில் வீடாம் நிரதிசய இன்பத்தைப் பெறுவான் விரும்பினன். நிரதிசய இன்பத்தை அடைவான் எண்ணிய மன்னர் மன்னன், தன் எண்ணத்தை அமைச்சர் முதலியோர்க்கு அறிவித்துத் தன் குல

குருவாம் வசிட்ட முனிவனை, சிராமற்கு முடி சூட்டற்கு வேண்டிய சகல காரியங்களைச் செய்வான் வேண்டினன். கணித மாந்தர்களும் முடி புனை கடிகைநாள் தெரிந்து அறிவுறுத்தினர். நாளையே இராமன் முடி சூடுவான் என்னும் சுப சேதியைக் கேட்ட கூனியாகிய மந்தரை, கைகேசிபால் ஓடிச் சென்று அவட்குத் துர்ப்புத்தி பல புகட்டி, அவள் அரசன்பால், சீதைசேள்வன் பதினான்கு யாண்டு காடாளவும், பரதன் நாடாளவும் ஆகிய இவ் விரண்டு வரங்களையும் பெற்றுக்கொள்வான் தூண்டினள். மந்தரையின் துர்ப் போதனையால் மதி மயங்கிய கைகே-சியும் தயரதனை அவ் விரண்டு வரங்களையும் தனக்கு அளிக்க வேண்டினள். தயரதன் தன் மனையாட்கு அவள் விரும்பியவண்ணம் அவ் விரண்டு வரங்களையும் தந்து, தான் துயரக் கடலில் ஆழ்ந்தனன். சிராமன், சீதை, இலக்குவன் ஆகிய இருவருடன் கானேகினன். தன் இன் உயிரன்ன புதல்வன் கானேகினன் என்பதைச் செவியி லேற்ற தயரதன் உயிர் துறந்து விண்ணுல கடைந்தனன். அரசற்குச் செயற்பால சரம கிரியை-களைச் செய்யப் புதல்வர் எவரும் அயோத்தியில் இல-ராயினமையின் வசிட்ட முனிவரர், மன்னவன் உடலத்-தைச் சிதைவுறுவண்ணம் தைலத்தில் மாட்டி, பிதா-மகன் வீட்டிற்குச் சென்றிருந்த பரத சத்துருக்கனரை அழைத்து வரும்படி தூதுவரை ஏவினர்.

இஃது இவ்வாறுகக் கானேகிய காகுத்தன் கங்-கையை அடைந்து அதில் சானகியுடன் நீராடி, அங்-குள்ள முனிவர்பால் சில நாள் நல் விருந்தாய் அமர்ந்து, பிறகு குகன் என்னும் வேட்டுவத் தலைவனுடன் நட்புக்-கொண்டு, அவன் துணையால் கங்கையைக் கடந்து, பரத்-

துவாஜ முனிவரனை வணங்கி, யமுனையாற்றைக் கடந்து, சித்திரகூட பர்வதத்தைச் சார்ந்து, இலக்குவன்சமைத்த பன்னசாலையில் தேவருங் கைதொழ வீற்றிருந்தனன். இஃது இங்ஙனமாகத் தன் பிதாமகன் வீட்டினின்றும் அயோத்திக்கு மீண்ட பரதன், தன் அன்னையின் கொடுமையால் தன் தந்தை விண்ணுலகேகியதையும், தன் திருத்தமையன் மைதிலியுடன் கானேகியதையும் உணர்ந்து பெருந்துயர்க்கடலில் அமிழ்ந்தனன். கோசலை முதலியோர் ஆற்றச் சிறிது துயரம் நீங்கித் தன் தந்தைக்குச் செயற்பால சரம கிரியைகளைத் தன் இளவலாகிய சத்துருக்கனனால் முற்றுவித்தனன்; பின் அரசிலா நாடாகிய அயோத்தியை ஆளும்படி தன் திருத்தமையனும் ஸ்ரீராமமூர்த்தியை அழைத்து வருவான் பரதன் தன் தாய்மார் மூவரும், அமைச்சர் முதலியோரும் சூழ்ந்துவரச் சித்திரகூட பர்வதத்தை நோக்கிப் புறப்பட்டனன். புறப்பட்ட பரதன் காட்டில் தன் திருத்தமையன் நண்பனாகிய குகப்பெருமானைச் சந்தித்து நட்புக்கொண்டாடி, அவன் உதவியால் கங்கையாற்றைக் கடந்து சித்திரகூட பர்வதத்தை அடைந்து, தமையனை வணங்கி, அவனணிந்திருந்த பாதுகைகளைப் பெற்று அயோத்திக்கு மீண்டமையும், பிறவும் அயோத்தியா காண்டத்தாற் பெற்றாம்.

சித்திரகூடத்திலிருந்த இரகுநாயகன், நகரமாந்தரும் தம்பியர் இருவரும் தாய்மாரும் தன்மாட்டுள்ள பேரன்பால் இங்கே வந்து தன்னை அடிக்கடி நகரத்திற்கு மீண்டுவர வருத்துவர் என்றெண்ணி, தன் தம்பியும் சீதாபிராட்டியும் பின்வர, சித்திரகூடத்தை விட்டு அகன்று அத்திரிமுனிவர் ஆச்சிரமம் அடைந்தனன்.

அத்திரிமுனிவர் பன்னியாய அநுசூயை, சானகிக்கு அணியும் ஆடையும் அளிக்க அவற்றைப் பெற்று, சரபங்க முனிவர் ஆச்சிரமம்சார்ந்து அவர்க்குப் பரமபதமளித்து, வாலகில்லியமுனிவர்கட்கு அபயம் தந்து, சுதீக்கணமுனிவர் வழிகாட்ட தமிழ் முனிவராகிய அகத்தியமுனிவர் ஆச்சிரமம் அடைந்து, அவரை வணங்கி நின்றனர் சீராமன் முதலிய மூவரும். தன்னை வணங்கிய சீராமற்கு, தென்தமிழ் இயம்பி இசைகொண்ட அகத்திய முனிவர் வில் முதலியன பரிசாகக் கொடுக்க அவற்றை அன்புடன் ஏற்ற சீராமன் அவர்பால் விடைபெற்று தண்டகாரணியத்தை நோக்கிச் செல்லுங்கால், எதிர்ப்பட்ட சடாயு என்னும் கழுகின் வேந்தனுடன் நட்புக் கொண்டு கோதாவரி தீரத்திற் பஞ்சவடியில் ஓர் ஆச்சிரமம் அமைத்து அங்கே தன் தம்பியுடனும் சீதையுடனும் வதிவாஞயினன். பஞ்சவடியின்கண் சீராமன் தங்கியிருக்குங்கால் இலங்கை நகர்க்கரசனாகிய இராவணனது தங்கையாகிய சூர்ப்பணகை என்பாள் அங்குப் போந்து சீராமனது சௌந்தரியத்தை நோக்கி அவன்மாட்டு விருப்பம்கொண்டு அவன் தன்னை மணக்குமாறு பலபட வேண்டினள். சீராமன் பற்பல நீதிகளைப் புகன்று மறுத்தனன். சீராமன் புகன்றவைகளைக் கேட்ட அரக்கி மனம் வெதும்பிச் சீதையைக் கவர்ந்து செல்லின் ஒருகால் சீராமன் தன்னை மணப்பான் என்றெண்ணி அவள் தனித்திருக்கும் சமயம் பார்த்து அவளைத் தூக்கிச் சென்றனள். அதைக்கண்ட இலக்குவன் அவளுடைய மூக்கு முதலிய உறுப்புக்களைக் கொய்தனன். உறுப்பிழந்த சூர்ப்பணகைக்காக அக்காட்டிலுள்ள கரன் முதலிய அரக்கர் பரிந்து போந்து சீராமனுடன் போர்புரிந்து இறந்து பட்டனர். பின்

சூர்ப்பணகை நிகழ்ந்தவைகளை இராவணனிடம் புகல, அவன் சீதைமேல் பெருங்காதல் கொண்டு, பொய்த் தவ வேடந்தாங்கிப் போந்து, மாயையாற் பொன்மா-னுருவங் கொண்டுபோந்த மாரீசன் சூழ்ச்சியால் இராம இலக்குமணரை அப்புறப்படுத்தி, சீதை தனித்திருக்கும் அமயத்து அவளை வஞ்சனையாற் றூக்கிச் சென்றனன். சீதையைத் தூக்கிச்செல்லுமளவில் முன் வந்தெதிர்த்த சடாயுவை வென்று இலங்கையில் அசோகவனத்தில் அரக்கர் நடுவண் சீதையைச் சிறையிடை வைத்தனன் இராவணன். பொன்மான் பின்சென்ற இராம லக்குமணர் திரும்பிப்போந்த காலையில் ஆச்சிரமத்தில் சீதையைக் காணாதவராய்த் திகைத்துத் தேடிச் செல்லுங்கால், இறக்குந் தறுவாயிலிருக்கும் சடாயு என்னும் பெரிய உடையார் வீழ்ந்துகிடந்ததைக் கண்டு அவரால் சீதையின் வரலாற்றைச் சிறிது உணர்ந்து கொண்ட பிறகு, சடாயுவுக்குச் சரமகிரியைகளைச் செய்து, கபந்தனைக் கொன்று, அயோமுகியை வென்று, சபரிக்கு நிரதிசய இன்பம் அளித்தமையும் பிறவும் ஆரணியகாண்டத்தாற் பெற்றாம்.

சபரி என்னும் உத்தமி பரித்தேரோன் மைந்தனாகிய சுக்கிரீவன் இருக்கும் குன்றினுக்குச் செல்லும் நெறி எலாம் நினைந்து பகர்ந்தனள். பிறகு அவள் போகத்-தினில் தன் உடல் துறந்து நிரதிசய இன்பம் அடைந்-ததைக்கண்டு அதிசயம் எய்தி அவள் புகன்ற நெறியே போவான் தலைப்பட்ட சீராமனும் இலக்குவனும் காவும் குன்றும் நதிகளும் கடந்து சென்று, புண்ணியம் உரு-கிற்றன்ன பம்பையாம் பொய்கையைக் கண்ணுற்றனர். அப்பொய்கையானது,

பம்பை

தேன்படி மலரது செங்கண் வெங்கைமாத்
தான்படி கின்றது தெளிவு சான்றது
மீன்படி மேகமும் படிந்து வேலைநீர்
வான்படிந் துலகிடைக் கிடந்த மாண்பது. (1)

ஓதநீ ருலகமு முயிர்கள் யாவையும்
வேதபா ரகரையும் விதிப்ப வேட்டநாள்
சீதம்வீங் குவரியைச் செருக்கு மாறொரு
காதிகா தலன்றரு கடலி னன்னது. (2)

எற்பொரு காகுத்த னிருக்கை யீதெனக்
கிற்பதோர் காட்சிய தெனினுங் கீழுறக்
கற்பக மனையவக் கவிஞர் காட்டிய
சொற்பொரு ளாமெனத் தோன்றல் சான்றது.(3)

களிப்படா மனத்தவன் காணிற் கற்பெனுங்
கிளிப்படா மொழியவள் விழியின் கேளெனத்
துளிப்படா நயனங்க டுளிப்பச் சோருமென்
றொளிப்படா தாயிடை யொளிக்கு மீனது. (4)

ஆரிய முதலிய பதினெண் பாடையிற்
பூரிய ரொருவழி புகுந்த வாமென
ஓர்கில கிளவிக ளொன்றொ டொப்பில
சோர்வில பறவைக டுவன்று கின்றது. (5)

வேறு

அன்ன தாகிய வகன்புனற் பொய்கையை யணுகிக்
கன்னி யன்னமுங் கமலமு முதலிய கண்டான்
தன்னி னீங்கிய தனிரியற் குருகினன் றளர்வான்
உன்னு கல்லுணர் வொடுங்கிடப் புலம்பிட லுற்றான்.

வேறு

பொன்பாற் பொருவும் விரையல்லி
புல்லிப் பொலிந்த பொலந்தாது
தன்பாற் றழுவுங் குழல்வண்டு
தமிழ்ப்பாட் டிசைக்குந் தாமரையே
என்பா லில்லை யப்பாலோ
விருப்பா ரல்லர் விருப்புடைய
உன்பா லில்லை யென்றக்கா
லொளிப்பா ரோடு முறவுண்டோ. (7)

வேறு

என்ற யாவுயிர்க் கின்றவ னேடவிழ்
கொன்றை வாவிப் புறத்திவை கூறியான்
பொன்ற யாதும் புகல்கிலை போலுமால்
வன்ற யாவிலி யென்னவ ருந்தினன். (8)

இவ்வாறாகப் பம்பைப் பொய்கையை நோக்கிச் சீராமன் வருந்துவானாயினன்; அப்போது பரிதி மேற்றிசை யடைவதைக்கண்ட இலக்குவன் தன் திருத்தமைய னாகிய சீராமனை நோக்கி, 'நெடிபோய், ஈண்டு இருப்புனல் தோய்ந்து உன்னிசையென நீண்டவன் கழல்தாழ்' என்றனன். இரகுவீரன் அவ்வழி நின்று அரிதின் எய்திப் புனலாடலை மேயினன். அன்னமாய் அருமறைகள் பாடினன் நீடுநீர் ஆடி முன்னைநூல் நெறிமுறை நேமிதாள் சூடி, முனிவர் தந்தொகுதிசெறி சோலைவாய் வைகினன். அப்போது எரிகதிரும் வைகினன். அந்திப்போது வரவே சானகியாரின் பிரிவை உன்னி வருந்தும் இரகு நாயகன் அவ்விரவெல்லாம் கண்ணுறங்காமலே இருந்த

னன். இரவு நீங்க, கமலமலர்களும் தலையெடுத்தன. கீழ்க் கடலில் சூரியனும் உதயமாயினான்.

காலையே கடிதுவர வேகினார் கடல்கவினு
சோலையேய் மலைதழுவு கானினீ ணெறிதொலைய
ஆலையேய் துழனியக னாடரார் கவியமிழ்து
போலவே யுரைசெய்புன மானைநா டுதல்புரிஞர் (9)

மராமரம்

எய்தினார் சவரிநெடி தேயமால் வரையெளிதின்
னொய்தினே றினரதனி னோன்மைசால் கவியரசு
செய்வதோர் கிலனிவர்க டெவ்வர மெனவெருவி
உய்துநா மெனவிரைவி னேடினான் மலைமுழையின். (10)

காலின்மா மதலையிவர் காண்மினோ கறுவுடைய
வாலியே வலின்வரவி னார்கடாம் வரிசிலையர்
நீலமால் வரையனையர் நீதியாய் நினைதியென
மூலமோர் கிலர்மறுகி யோடினார் முழையதனின். (11)

சிராமனும் இலக்குவனும் வருதலைக்கண்டு வெருண்டு சுக்கிரீவன், தாரன், நீலன், தாமமாருதி முதலியோரொடு மேருமால் வரையை நிகர் பாரமாமலையின் ஒருபாகம் ஓடினன். ஆரமார்பாகிய சிராமனும் இலக்குவனும் தங்கட்கு அம்மலையின் ஆகவேண்டியதனைக் கருதி மேலே நடந்து செல்வாராயினர். இரண்டு வீரர்களும் வருதலைக்கண்ட சூரியன்புதல்வன் இவர்கள் வாலி ஏவலினால் தன்னை வருத்தவரும் பகைவர்கள் என்று மனங்கவன்று பிறகு அவரது வடிவுஞ்செயல்களையும் கண்டு வாலி ஏவலின் வருதல் ஆனவாறலர் என்று தெளிந்தனன். பிறகு மாருதி,

அவ்விடத் தவர்மறுகி யஞ்சிநெஞ் சழியமைதி
வெவ்விடத் தினைமறுகு தேவர்தா னவர்வெருவல்
தவ்விடத் தனியருளு தாழ்சடைக் கடவுளென
இவ்விடத் தினிதிருமி னஞ்சலென் றிடையுதவி. (12)

அஞ்சனைக் கொருசிறுவ னஞ்சனக் கிரியனைய
மஞ்சனைக் குறுகியொரு மாணவப் படிவமொடு
வெஞ்சினத் தொழிலர்தவ மெய்யர்கைச் சிலையரென
நெஞ்சயிர்த் தயன்மறைய நின்றுகற் பினினினையும். (13)

தேவருக் கொருதலைவ ராமுதற் றெவரெனின்
மூவர்மற் றிவரிருவர் மூரிவிற் கரிவரை
யாவரொப் பவருலகின் யாதிவர்க் கரியபொருள்
கேவலத் திவர்நிலைமை தேர்வதெக் கிழமைகொடு. (14)

சிந்தையிற் சிறிதுதுயர் சேர்வுறத் தெருமரலின்
நொந்தயிர்த் தனரனையர் நோய்வுறச் சிறியரலர்
அந்தரத் தமரரலர் மானுடப் படிவர்மயர்
சிந்தனைக் குரியபொரு டேடுதற் கொருநிலையர். (15)

தருமமுந் தகையுமிவர் தனமெனுந் தகையரிவர்
கருமமும் பிறிதொர்பொருள் கருதியன் றதுகருதின்
அருமருந் தனையதிடை யழிவுவந் துளததனை
இருமருங் கினுநெடிது துருவுகின் றனரிவர்கள். (16)

கதமெனும் பொருண்மையிலர் கருணையின் கடலனையர்
இதமெனும் பொருளலதொ ரியல்புணர்ந் திலரிவர்கள்
சதமனஞ் சுறுநிலையர் தருமனஞ் சுறுசரிதர்
மதனனஞ் சுறுவடிவர் மறலியஞ் சுறுவிறலர். (17)

வேறு

என்பன பலவும் பன்னி
 பிருவரை யெய்த நோக்கி
அன்பினை டுருகு கின்ற
 வுள்ளத்த ஞர்வத் தோரை
முன்பிரித் தனையர் தம்மை
 முன்னிஞ னென்ன நின்றான்
தன்பெருங் குணத்தாற் றன்னிற்
 றானல தொப்பி லாதான். (18)

மயின்முதற் பறவை யெல்லா
 மணிநிறத் திவர்கண் மேனி
வெயிலுறற் கிரங்கி மீதா
 விருஞ்சிறைப் பந்தர் வீசி
எயில்வகுத் தெய்து கின்ற
 விண்முகிற் கணங்க ளெங்கும்
பயில்வுறத் திவலை சிந்திப்
 பயப்பயத் தழுவும் பாங்கர். (19)

காயெரி கனலுங் கற்கள்
 கள்ளுடை மலர்க ளேபோல்
தூயசெங் கமல பாதந்
 தோய்தொறுங் குழைந்து தோன்றும்
போயின திசைக டோறு
 மரனொடு புல்லு மெல்லாம்
சாய்வுறுந் தாழ்வ போலிங்
 கிவர்களோ தரும மாவார். (20)

துன்பினைத் துடைத்து மாயத்
தொல்வினை தன்னை நீக்கித்
தென்புலத் தன்றி மீளா
நெறியுய்க்குந் தேவ ரோதாம்,
என்பெனக் குருகு கின்ற
திவர்கின்ற தளவில் காதல்
அன்பினுக் கவதி யில்லை
யடைவென்கொ லறித றேற்றேன். (21)

இவ்வழி யெண்ணி யாண்டவ்
விருவரு மெய்த லோடும்
செவ்வழி யுள்ளத் தானுந்
தெரிவுற வெதிர்சென் றெய்திக்
கவ்வையின் றாக நுங்கள்
வரவெனக் கருணை யோனும்
எவ்வழி நீங்கி யோய்நீ
யாரென வியம்ப லுற்றான். (22)

மஞ்செனத் திரண்ட கோல
மேனிய மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி
நளிரிரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சமொத் தலர்ந்த செய்ய
கண்ணயான் காற்றின் வேந்தற்
கஞ்சனை வயிற்றின் வந்தே
னாமமு மநும னென்றான். (23)

இம்மலை யிருந்து வாழு
மெரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக் கேவல் செய்வேன்
றேவநும் வரவு நோக்கி

விம்மலுற் றனையா னேவ
வினவிய வந்தே னென்றான்
எம்மலைக் குலமுந் தாழ
விசைசுமந் தெழுந்த தோளான். (24)

மாற்றமஃ துரைத்த லோடும்
வரிசிலைக் குரிசின் மைந்தன்
தேற்றமுற் றிவனி னூங்குச்
செவ்வியோ ரின்மை தேறி
ஆற்றலு நிறைவுங் கல்வி
யமைதியு மறிவு மென்ப
வேற்றுமை யிவனோ டில்லை
யாமென விளம்ப லுற்றான். (25)

இல்லாத வுலகத் தெங்கு
மீங்கிவ னிசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்
கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே
யார்கொலிச் சொல்லின் செல்வன்
வில்லார்தோ ளிளைய வீர
விரிஞ்சனோ விடைவல் லானோ. (26)

'நம் எதிரே பிரமசரிய வடிவந்தாங்கித் தோன்றும் இவன் மாணியல்லன், இவ்வுலகத்திற்கெல்லாம் உரையாணி என்னும் ஆற்றலமைந்தவன். இவன் பெருமையை எல்லாம் யான் சிக்கறத் தெளிந்துகொண்டேன். இவன் உண்மை நிலையை நீயே பின்னர்க் காண்பாய்' என்று கமலக்கண்ணனையை சிராமன் தம்பிக்குக் கழறி, அஞ்சனையின் சிறுவனை நோக்கி,

எவ்வழி யிருந்தான் சொற்ற
கவிக்குலத் தரசன் யாங்கள்
அவ்வழி யவனைக் காணு
மருத்தியா லணுக வந்தேம்
இவ்வழி நின்னை யுற்ற
வெமக்குநீ யின்சொ லன்ன
செவ்வழி யுள்ளத் தோனைக்
காட்டுதி தெரிய வென்றான். (27)

'கவிக்குலத் தரசனைக் காண அருத்தி யுடையேம்' என்று சீராமன் கூறியதைக் கேட்ட அனுமன் வீரர் இருவரையும் நோக்கி, 'இவ்வுலகின்கண் உங்களை யொக்கும் வீரர் யாவருளர்? நீங்களே கவிக்குலத்தரசனைக் காணும் பெருவிருப்புடன் இங்குப் போநதீரெனின், அன்னான் தீது அவித்து அமையும்படி செய்த தவம் பெருந்தவமே என்னலாம்' என்று முகமன் கூறி,

இரவிதன் புதல்வன் றன்னை
யிந்திரன் புதல்வ னென்னும்
பரிவிலன் சீறப் போந்து
பருவரற் கொருவ னாகி
அருவியங் குன்றி னென்னோ
டிருந்தன னவன்பாற் செல்வம்
வருவதோ ரமைவின் வந்தீர்
வரையினும் வளர்ந்த தோளீர். (28)

'உலகின்கண்ணே வாழும் ஆன்மாக்கள் உவந்தவற்றை உதவி, வேள்விமுயன்று செய்து மற்றைத் தொல்லறம் நிரம்பவும் செய்யத் தவறினும் அபய தானம் கொடுத்தார் பெறும்பேறு மிகச் சிறந்ததென மேலோர் கூறுவர். நீங்கள் எங்களைக் காக்கவேண்டும் என்று

சொல்லுகிறது உங்கட்கு மிகவும் எளிது; ஏனெனின் நீங்கள் மும்மையேழுலகும் காக்கும் முதல்வராகலின். உம்மைப் புகல்புக்க எங்கட்கு இதனினும் வேறு உறுதி யாதுளது' என்று இத்தகைய வாசகங்களைப் புகன்று,

யாரென விளம்பு கேனு
னெங்குலத் தலைவற் கும்மை
வீரர்நீர் பணித்தி ரென்றான்
மெய்ம்மையின் வேலி போல்வான்
வார்கழ லிளைய வீரன்
மரபுளி வாய்மை யாதும்
சோர்விலன் நிலைமை யெல்லாந்
தெரிவுறச் சொற லுற்றான். (29)

புயறரு மதத்திண் கோட்டுப்
புகர்மலைக் கிறையை யூர்ந்து
மயறரு மவுணர் யாரு
மடிதர வரிவிற் கொண்ட
இயறரும் புலமைச் செங்கோன்
மனுமுதல் யாரு மொவ்வாத்
தயாதன் கனக மாடத்
தடமதி லயோத்தி வேந்தன். (30)

அன்னவன் சிறுவ னாமிவ்
வாண்டகை யன்னை யேவத்
தன்னுடை யுரிமைச் செல்வந்
தம்பிக்குத் தகையி னல்கி
நன்னெடுங் கானஞ் சேர்ந்தா
னைமமு மிராம னென்பான்
இந்நெடுஞ் சிலைவ லானுக்
கேவல்செய் யடியன் யானே. (31)

என்றவன் றோற்ற மாதி
 யிராவண னிழைத்த மாயப்
புன்றொழி லிறுதி யாகப்
 புகுந்துள பொருள்க ளெல்லாம்
ஒன்றுமாண் டொழிவு றாமை
 லுணர்த்தின னுணர்த்தக் கேட்டு
நின்றவக் காலின் மைந்த
 னெடியவ னடியிற் றாழ்ந்தான். (32)

இலக்குவன் புகன்றவைகள் அனைத்தும் கேட்ட அஞ்சனையின் புதல்வன் அவன் மலரடியில் வீழ்ந்து பணிந்தனன். தன் அடியில் வீழ்ந்து வணங்கிய அவனை நோக்கி' இலக்குவன், 'நீர் என் தகாதகாரியம் செய்தனை ?' என்று வினவினன். அனுமன், 'யானும் அரிக்குலத்துள் ஒருவன்' என்றனன். பிறகு,

மின்னுருக் கொண்ட வில்லோர்
 வியப்புற வேத நன்னூல்
பின்னுருக் கொண்ட தென்னும்
 பெருமையாம் பொருளுந் தாழப்
பொன்னுருக் கொண்ட மேரு
 புயத்திற்கு முவமை போதாத்
தன்னுருக் கொண்டு நின்றான்
 றருமத்தின் றனிமை தீர்ப்பான். (33)

கண்டில னுலக மூன்றுங்
 காலினாற் கடந்து கொண்ட
புண்டரீ கக்க ணாழிப்
 புரவலன் பொலங்கொள் சோதி

குண்டல வதன மென்றூற்
கூறலாந் தகைமைத் தன்றே
பண்டைநூற் கதிரோன் சொல்லப்
படித்தனன் படிவ மம்மா. (34)

தாட்படாக் கமல மன்ன
தடங்கணான் றம்பிக் கம்மா
கீட்படா நின்ற நீக்கிக்
கிளர்படா தாகி யென்றும்
நாட்படா மறைக ளாலு
நவைபடா ஞானத் தாலும்
கோட்படாப் பதமே யைய
குரக்குருக் கொண்ட தென்றான். (35)

நல்லன நிமித்தம் பெற்றே
நம்பியைப் பெற்றே நம்பால்
இல்லையே துன்ப மான
தின்பமே யெய்திற் றன்றே
வில்லினா யிவனைப் போலாங்
கவிக்குலக் குரிசில் வீரன்
சொல்லினா லேவல் செய்வா
னவனிலை சொல்லற் பாற்றோ. (36)

என்று இவ்வாறு அகம் உவந்து அழகிய முக மலர்ந்து நின்ற வீரர் இருவரையும் குரக்குச் சீயம் நோக்கி, 'வீரர்களே சிறிதுபோது தாங்கள் இவ்விடத்திலேயே இருங்கள். யான் சென்று எங்கள் அரசனாகிய சுக்கிரீவமகாராசனை இன்னே கொணர்கின்றேன்' என்று விடைபெற்றுச் சென்றது. விடைபெற்றுச் சென்ற அஞ்சனையின் புதல்வன் சுக்கிரீவனை நோக்கி, 'யானும்,

உன் குலமும் இவ்வுலகும் உய்ந்தனம். வாலி யென்னும் அளவிலா வலியினான் உயிர்தெறக் காலன் வந்தணுகினான். நாம் இடர்க்கடல் கடந்தனம்' என்று கூறி ஆலமுண்ட சிவபெருமானைபோல் நடம் புரிந்து அவ் வீரர் பெருமையினைச் சொல்வானாயினான்.

வேறு

மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார்
எண்ணுளா ருளரவர்க் கியலுளா ரிசையுளார்
கண்ணுளா ராயினார் பகையுளார்க் கழிநெடும்
புண்ணுளா ராருயிர்க் கமிழ்தமே போலுளார். (37)

சூழிமால் யானையார் தொழுகழற் றயரதன்
பாழியா லுலகெலா மொருவழிப் படரவாழ்
ஆழியான் மைந்தர்பே ரறிவினா ரழகினார்
ஊழியா ரெளிதினிற் கரசுதந் துதவுவார். (38)

நீதியார் கருணையின் னெறியினார் நெறிவயிற்
பேதியா நிலைமையா ரெவரினும் பெருமையார்
போதியா தளவிலா வுணர்வினார் புகழினார்
காதிசேய் தருகடற் கடவுள்வெம் படையினார். (39)

இவ் விரண்டு வீரர்களில் சிராமன் சூலாயுதத்துடன் தன்னை எதிர்த்த தாடகை என்னும் கொடிய அரக்கி விளிந்து உருள விற்கோலி அக் கொடுமையாள் புதல்வனாகிய சுபாகுவையும் கொன்று தன் காலியற் பொடியினால் நெடிய கற்படிவாய் அமைந்திருந்த அகலிகைக்கு அரியதோர் உருவு அளித்தருளினான். மிதிலை புகுந்த நாளில் எழு சுடர்க் கடவுள்தன் பல்லிறுத்தவனாய பரமசிவனுடைய வலிக்கமைந்த தியம்பகம் என்-

னும் வில்லை இறுத்தருளினன். அளவில்லாத கற்புடைய சிற்றவை பணித்தருளலால் தனக்குரிய, வளையுடைப் புணரிசூழ் மகிதலத் திருவை எல்லாம் இளையவற்கு உதவி இத்தரை எழுந்தருளினன். தெவ்விராவகை தன் மழுவினால் வென்ற அவ் விராமனையும் (பரசுராமனையும்) மாவலி தொலைத்து, இராவணைய வெவ்விராதனையும் துடைத்தருளினன். கரன் முதலிய கருணை அற்றவரையும் துமித்தருளினன். இத்தகைய ஆற்றலமைந்த சீராமன்,

ஆயமா னுகர்தா மூழியா னேயலால்
காயமா னயினன் யாவனே காவலா
நீயமா னோர்தியா னிருதமா ரீசனார்
மாயமா னயினன் மாயமா னயினன். (40)

கவந்தன் என்னும் அரக்கனையும் கொன்று, சவரியின் பிறப்பை நீக்கி இக்குன்றின்கண் எழுந்தருளியிருக்கின்றான். முனிவர்கள் யாவரும் இப் புருடோத்தமனது வரவை நோக்கிப் பல காலம் அருந் தவம் புரிவாராயினர். இவர்கள் கிருபா கடாக்ஷத்தால் வினை எனுஞ் சிறை நீங்கி உயர் பதம் விரவினர் எனையர் என்று யான் உரை செய்வேன்.

மாயையான் மதியிலா நிருதர்கோன் மனைவியைத்
தீயகா னெறியினுய்த் தன்னவட் டேடுவார்
நீயையா தவமிழைத் துடையையா னெடுமனந்
தூயையா வுடையையா லுறவினைத் துணிகுவார். (41)

'இத்தகைய ஆற்றலமைந்த புருடோத்தமனும், அவன் இளையவனான இலக்குவனும் நீ முன் செய்த பெருந் தவத்தினால் நம் மாட்டு கிருபை பாலித்திருக்-

கின்றார்கள். இந்திரன் சிறுவனாகிய வாலிக்கு இறுதி விரைவில் வந்தெய்தும். அப் பெருந்தகையினரைக் கண்டுகளிக்க நீ என்னுடன் போதர வேண்டும்' என்று அஞ்சனையின் புதல்வன் சூரியன் புதல்வற்குப் புகன்றனன். அதனைச் செவியிலேற்ற சுக்கிரீவன் அனுமான் கூறியவைகளை அறிவினால் ஆராய்ந்துணர்ந்து, 'பொன்னையே பொருவுவாய், உன்னை என் இன்னுயிர்த் துணையாகக் கொண்ட எற்கு அரியது எப்பொருள்? புண்ணிய சீலரைக் காண்பான் உம்முடன் போதுகின்றேன்' என்று அனுமானுக்கு விடை பகர்ந்து, அவனுடன் போந்து தன்னையேயனையவனும் காகுத்தன் சரணம் வந்தணுகினான். அணுகிய சுக்கிரீவன்,

கண்டன னென்ப மன்னோ
    கதிரவன் சிறுவன் காமர்
குண்டலந் துறந்த கோல
    வதனமுங் குளிர்ந்த கண்ணும்
புண்டரீ கங்கள் பூத்துப்
    புயறழீஇப் பொலிந்த திங்கள்
மண்டல முதயஞ் செய்த
    மரகதக் கிரிய னானை. (42)

நோக்கினா னெடிது நின்று
    நொடிவருங் கமலத் தண்ணல்
ஆக்கிய வுலக மெல்லா
    மன்றுதொட் டின்று காறும்
பாக்கியம் புரிந்த வெல்லாங்
    குவிந்திரு படிவ மாகி
மேக்குயர் தடந்தோள் பெற்று
    வீரராய் விளைந்த வென்பான். (43)

தேறினை மரர்க் கெல்லாந்
தேவராந் தேவ ரென்றே
மாறியிப் பிறப்பின் வந்தார்
மானுட ராகி மன்னோ
ஆறுகொள் சடிலத் தானு
மயனுமென் றிவர்க ளாதி
வேறுள குழுவை யெல்லா
மானுடம் வென்ற தன்றே. (44)

காகுத்தனைக் கண்ட அளவிலேயே மேற்கூறிய எண்ணங்கள் எல்லாம் உதிக்க, அளவில்லாத காதற்கடலில் மூழ்கிய சூரியன் புதல்வன் அக்கடற்கரை நின்று ஏறிக் கண்ணிணை களிப்ப நோக்கி அநகனைக் குறுகினன். அண்ணலும் அருத்திகூரப் புனைமலர்த் தடக்கை நீட்டிப் போற்றி, 'இனிது இருத்தி' என்றனன். காகுத்தனும், சூரியன் புதல்வனும்,

தவாவலி யரக்க ரென்னுந்
தகாவிருட் பகையைத் தள்ளிக்
குவாலற நிறுத்தற் கேற்ற
காலத்தின் கூட்ட மொத்தார்
அவாமுத லறுத்த சிந்தை
யநகனு மரியின் வேந்தும்
உவாவுற வந்து கூடு
முடுபதி யிரவி யொத்தார். (45)

மேலும் நினைத்ததொரு காரியம் சிறிது நிறைவேறும்படி முற்பிறப்பில் ஈட்டியதவமும் இப்பிறப்பில் செய்த முயற்சியும் ஒன்றோடொன்று இயைந்திருத்தலையும் அரக்கராகிய தீவினையை வேரோடு அழிக்க நல்லா-

சிரிய னிடத்து உபதேசம் பெற்ற கல்வி யறிவும், தத்துவ ஞானமும் சேர்ந்ததையும் ஒத்திருந்தது அவ் விரண்டு வீரரும் கூடிய கூட்டம்,

ஆயதோ ரவதி யின்க
 ணருக்கன்சே யரசை நோக்கித்
தீவினை தீய நோற்று
 ரென்னின்யார் செல்வ நின்னை
நாயக முலகுக் கெல்லா
 மென்னலா நலமிக் கோயை
மேயினன் விதியே நல்கின்
 மேவலா காதென் னென்றான். (46)

மையறு தவத்தின் வந்த
 சவரியிம் மலையி னீவந்
தெய்தனை யிருந்த தன்மை
 யியம்பினள் யாங்க ளுற்ற
கையறு துயர நின்னாற்
 கடப்பது கருதி வந்தேம்
ஐயநீற் றீரு மென்ன
 வரிக்குலத் தரசன் சொல்வான். (47)

'எனக்கு முன் பிறந்தோனாகிய வாலி என்பான் பின் வந்த என்னை, வலிமை யுடைய பெரிய கையை உயர எடுத்துக்கொண்டு இருளுக்கு இருக்கையாகிய இவ் வுலகத்தின் புறத்தின் வரையும் உலகெங்கும் பின் தொடர்ந்து பற்ற, இம் மலையே அரணாக வுடையவனாய் இங்கு வந்து அடைந்து பிழைத்தேன். அரிய உயிரை விடாது வைத்துக்கொண் டிருந்த யான் உன்னையே அடைக்கலம் என்று அடைந்தேன், என்னைக் காத்தலே

தருமம்' என்று சிராமனை நோக்கிச் சுக்கிரீவன் புகன்றனன்.

என்றவக் குரக்கு வேந்தை
இராமனு மிரங்கி நோக்கி
உன்றனக் குரிய வின்ப
துன்பங்க ளுள்ள முன்னாள்
சென்றன போக மேல்வந்
துறுவன தீர்த லின்றி
நின்றன வெனக்கு நிற்கு
நேரென மொழியு நேரா. (48)

மற்றினி யுரைப்ப தென்னே
வானிடை மண்ணி னின்னைச்
செற்றவ ரெம்மைச் செற்றார்
தீயரே யெனினு முன்னோ
டுற்றவ ரெமக்கு முற்றா
ருன்கிளை யெமதென் காதற்
சுற்றமுன் சுற்ற நீயெம்
மின்னுயிர்த் துணைவ னென்றான். (49)

நிருமலனாகிய சிராமபிரான் கூறிய மொழி, எக்குலத்திற் பிறந்தார்க்கும் வேதத்தினுஞ் சிறந்தது என்று கருதி, குரக்குச்சேனை ஆரவாரித்தது. அனுமான் உடம்பை யரும்பிய மயிர்ச் சிலிர்ப்புகள் போர்த்துக்கொண்டன. வானவர் பூமழை பொழிந்தனர், மேகம் மழை பொழிந்தன. அப்போழ்து எழுந்து நின்று இறைவன் பாதத்தில் வணங்கிய அனுமான், 'தூண் போலுந் திரண்ட பெருந் தோளை யுடைய வீரனே, தோழனும், நீயும் நெடுங் காலம் வாழ்க. இப்போழ்தே, நம்மாளி

கையை யடைந்து நம் இருக்கையைக் காணவேண்டும். நங் கருத்து யாது என்றனன்.' அனுமான் கூறியவை களைக் கேட்ட இரகுநாயகரும், அது சாலச் சிறந்தது, என்றனன்.

ஏகின னிரவி சேயு
　　மிருவரு மரிக ளேறும்
ஊகவெஞ் சேனை சூழ்வந்
　　தடியிணை யுவந்து வாழ்த்த
நாகமு நரந்தைக் காவு
　　நளினவா விகளு நண்ணிப்
போகபூ மியையு மேசும்
　　புதுமலர்ச் சோலை புக்கார். (50)

இரகுவீரன் புக்க சோலையானது சந்தன மரங்களும் அகின்மரங்களும் அடர்ந்து, விளங்குகின்றனவாய் பளிங்குக்கற்களினுய வீடுகள் நெருங்கி, அப்பளிக்கறையின் விளக்கத்தால் நீரெழுந்ததுபோறக் காணப்பட்டு, யாவரும் விரும்பும் புதுமையாகிய மலர்த்தடங்களின் இருகரையிலும் அதன்பாங்கரிலும் செறிந்த தெய்வத் தருக்களில், தெய்வத் தன்மையுடைய அரமகளிரது ஊஞ்சல்கள் நான்று அசையப்பெற்ற ஆரவாரத்தை யுடையது. மேலும்,

வேறு

அயர்வில் கேள்விசா லறிஞர் வேலைமுன்
பயில்வில் கல்வியார் பொலிவில் பான்மைபோல்
குயிலு மாமணிக் குழுவு சோதியால்
வெயிலும் வெள்ளிவெண் மதியு மேம்படா. (51)

ஏய வன்னதா மினிய சோலைவாய்
மேய மைந்தரும் கவியின் வேந்தனும்
தூய பூவணைப் பொலிந்து தோன்றினர்
ஆய் வன்பினோ டளவளா வுவார். (52)

கனியுங் கந்தமுங் காயுந் தூயநன்
கினிய யாவையுங் கொணர யாரினும்
புனிதன் மஞ்சனத் தொழில்பு ரிந்துபின்
இனிதி ருந்துநல் விருந்து மாயினான். (53)

இறைவன் அதிதியாகி, மெய்ம்மையான அன்புடன் நோக்கிச் சிந்தித்து சுக்கிரீவனை நோக்கி, 'நல்ல மனையில் பொருந்துதற்குரிய பூவைபோல்வாளாய நின் மனைவியை நீயும் பிரிந்தனையோ' என்றனன். இறைவன் புகன்றமையைக் கேட்ட ஆஞ்சனேயர், எழுந்து நின்று வாய்பொத்திக் கைமலைபோல் நின்று இரண்டு கையையும் குவித்து 'நின்ற நீதியாய்! ஒன்று யான் உனக்கு உரைப்பதுண்டு' என்று பின்வருமாறு கூறுவானாயினன்: 'இறைவனே! நான்கு வேதங்களாகிய குற்றமில்லாத கடற்கு வேலிபோன்ற பழமையாகிய மலைமேலிருப்பவன், உருத்திரமூர்த்தியின் அருளைப் பெற்றவன், வரம்பில்லாத ஆற்றலையுடையவனாகிய வாலி என்பவன் ஒருவன் உளன். அவன் தேவர்கள் பொருட்டு அசுரர் எதிரினின்று மத்தாய்ச் சுழலும் மந்தரமலையின் வடிவந் தேய, சீறும் வன்மையையுடைய வாசுகி என்னும் பாம்பின் உடம்புந்தேய முன்னாளில் வாசுகியைக் கடைகயிறாக்கொண்டு பாற்கடலைக் கடைந்து அமுதங்கொணர்ந்தவன். நிலத்தோடு நீரும், நெருப்போடு காற்றும் எனப்பட்ட கேடுபடாத பூதநான்கினுடையவன்மையையும் உடையவன். அலையோடு கூடிய கடலைச் சூழ்ந்து

கிடந்த நேமிமால் வரையினின்றும் இக்கிட்கிந்தை மலை-யின் மீது தாவுவான். தன்னுடன் போர் செய்வார் கிடைக்கப் பெறின் அவர் பெற்ற நன்மையாகிய வரங்-களில் பாதிப்பங்கைத் தான் பெற்றுக்கொள்வான். என்-ஞான்றும் எண்டிசை எல்லையை எய்தி அட்ட மூர்த்தி-யாகிய சிவனது பாதத்தை வணங்கும் தொழிலை யுடையவன். அவன் வேகத்தின் முன்னர் காற்றுஞ் சென்றெய்தாது. அவன் மருமத்திடை முருகனது வேற்படையும் ஊடுருவிச் செல்லாது. அவன் வால் செல்-லாத இடத்திற்றான் இராவணன் செங்கோல் செல்லும். அவன் பெயர்ந்து செல்வானேல் மேருவே முதலிய மலைகள் வேருடன் நிலை பெயரா நிற்கும். அவன் பெரிய தோள்களால் பெரிய மேகமும் விண்ணுலகும் இரு சுடரும், நாகலோகமும் தூர்க்கப்படும். நிலத்தை யிடந்த ஆதிவராகம் என்னும் பன்றி, முன்னாளில் நீர் கடைந்த பேராமை ஆகிய இவையிற்றின் ஆற்றலுக்கு ஒப்பானவன். இரணியனை மார்பிடந்து சங்கரித்த நரசிங்கமே யெனினும் அவ்வாலியினது மாலை தங்கிய தோளை வெற்றிகொள்ள வன்மையுடையதோ? உலகம் முழுவதையும் அனந்தன் தன் சிரங்கொண்டு கிடந்து தாங்குவான், அதனை வாலி நடந்துகொண்டே தாங்கு-வான். கடல் ஒலிப்பதும், காற்று சரிப்பதும் வலிமையை யுடைய அருக்கர் தேர்மேல் இடைவிடாது செல்லுத-லும் அவ்வாலி நீர்ச்சுழியைப்போலத் தொடர்ந்து சுழற்றுதலாலேயன்றி வேறுவகையின் ஆவனவோ? மேருமலையையும் தள்ளிவிடும் தோள்வலியுள்ள எழு-பத்திரண்டு வெள்ளம் வானர சேனைகட்கு அரசனாக இருக்கின்றனன். அவன் வாழும் இடத்தில் தமக்கு அழிவுவரும் என்று அஞ்சி மேகங்களும் இடிக்கமாட்டா,

வெற்றியையுடைய கொடிய சிங்கங்களும் குகையில் கர்ச் சிக்கமாட்டா, வலியமைந்த கொடிய காற்றும் மெல்லிய இலை உதிரச் சாராது. வாலி வாலினாற் பிணித்து இராவணனைக் கொணர்ந்த காலத்தில் அவன் உதிரஞ் சிந்தாத இடமே கிடையாது. இத்தகைய ஆற்றல் அமைந்த வாலி என்பான் இந்திரனுக்கு மகனாவான். இனிமையாகிய கருணையையுடைய சந்திரன் தழைத்தாலொத்த தன்மையை உடையவன். கூற்றுவனுங் கடத்தற்கரிய ஆண்மையை உடையவன். அவன் இச் சுக்கிரீவனுக்கு முன் தோன்றியவனாவன். இத்தகைய ஆற்றலமைந்த வாலி என்பவன் எங்களுக்கு எல்லாம் அரசனாயிருக்க, இச்சுக்கிரீவன் இளவரசாட்சியை நடத்துங்காலத்தில் மாயாவி என்னும் மின்னலையொத்த நீண்ட பற்களையுடைய அசுரன் வாலியுடன் போர்செய்ய வந்தனன். மாயாவி அவனுடன் போர்செய்து அவன் ஆற்றலுக்கு அஞ்சி ஓடி, இப்பூமண்டலத்தில் இருப்பின் தன் பகைவன் வந்து வருத்துவான் என்னும் எண்ணங் கொண்டவனாய் எட்டுதற்கரிய பிலத் துவாரத்துள் புகுந்து ஓடினன். பகைவன் பயந்து பிலத்துள் புக்கதைக் கண்ட வாலி, தன்பின் வந்தோனாகிய சுக்கிரீவனைப் பார்த்து, 'பயந்தோடிய மாற்றவனைப் பற்றிக்கொணர்வேன். நீ சிறிது போழ்து என் அரசைக் காவல்கொண்டிரு' என்று தானும் பிலத்துட் புக்கனன். பகைவனைத் தேடிச்சென்ற வாலி அவனுடன் போர்செய்து கொண்டே அப்பிலத்துள் இருபத் தெட்டு மாதகாலம் தங்கிவிட்டனன். பிலத்துட்சென்ற தன் தமையன் இருபத்தெட்டு மாதகாலம் மீண்டு வாராமையின் தன் தமையன் கதி யாதாயிற்றோ என்று சுக்கிரீவன் அழுது இரங்குவானாயினன். இவ்வாறு அழுதுவருந்துபவனை நாங்கள்

எல்லோரும் தேற்றி அழைத்து வந்து, 'நீ அரசு செய்' என்று வருந்தி வேண்டினோம். அதற்குச் சுக்கிரீவன், 'நீங்கள் சொல்வது குற்ற முள்ள காரியம்' என்று கூறி 'நான் அப் பிலத்துட் சென்று என் முன்னவனைக் கொன்ற அவுணனைக் கொல்வேன். இன்றேல் என் உயிரை மாய்த்துக்கொள்வேன்' என்று புகன்றனன். அமைச்சர் முதலியோர் அவன் வருத்தத்தைத் தணித்து அரசைக் கைக் கொள்ளுமாறு வேண்டினர். அவனும் ஒருவாறு தெளிந்து அவர் வேண்டுகோட்கு இணங்கி அரசு புரிவா னாயினன். அவன் அரசு புரிந்து வரு நாளில் மாயாவி அப்பிலத்தின் வழியாய் வெளியே வந்து எங்களையும் கொலை செய்வானோ என்னும் பயத்துடன் அநேகமலைகளை எடுத்து அப்பிலத்தின்வழியை அடைத்துச் சுக்கிரீவனைக் கிட்கிந்தை மலைக்கு அழைத்து வந்தோம். பிலத்துட் புக்க வாலி மாயாவியைக் கொன்று களைந்து, பிலத்துவாரத்தை விரைந்துவந்து சேர்ந்து வழியடைக்கப்பட்டிருந்தது கண்டு தன் தம்பியை விளித்தனன். விடைபெறாமையின் தன் வாலினையோச்சி வழியை அடைத்திருந்த குன்றுகளை யெல்லாம் தகர்த்துவிட்டனன். பிறகு, வாலி கிட்கிந்தைக்கு வந்தனன். தமையன் வருவதைக் கண்ட தம்பி எதிர் சென்று,

வணங்கி யண்ணனின் வரவி லாமையான்
உணங்கி யுன்வழிப் படர வுன்னுவேற்
கிணங்க ரின்மையா லிறைவ நும்முடைக்
கணங்கள் காவலுன் கடமை யென்றனர். (54)

ஆணை யஞ்சியிவ் வரசை யெய்திவாழ்
நாணி லாதவென் னவையை நல்குவாய்
பூணு லாவுதோ ளிணைபொ றுயெனக்
கோணி னெடுங் கொடுமை கூறினன். (55)

அடல்க டந்ததோ ளவனை யஞ்சிவெங்
குடல்க லங்கியெங் குலமொ டுங்கமுன்
கடல்க டைந்தவெங் கரத லங்களால்
உடல்க டைந்தன னிவனு லைந்தனன். (56)

இவனு லைந்துலைந் தெழுக டற்புறத்
தவனி யுங்கடந் தெயில டைந்தனன்
கவன மொன்றிலான் கால்க டாவென
அவனி வேலையே ழரியின் வாவினான். (57)

சுக்கிரீவன் உலைந்து இரிந்து ஓடி ஏழு கடலையும் கடந்து அண்டச் சுவரையும் அடைந்தனன். வாலி அங்கேயும்சென்று அவனை வருத்திப் பற்றித் தன் வலிய கையால் எற்றுவான் எடுத்தனன். இவன் அற்றம் பார்த்து பிழைத்துக்கொண்டு இம் மலை யடைந்தான். வாலியும் முனிவ ரிட்ட சாபத்தால் இம் மலைக்கு வர அஞ்சினன். அதனால் சுக்கிரீவனும் உயிர் தாங்கி நிற்கின்றனன். இதுவேயன்றி,

உரிமை யென்றிவற் குரிய தாரமாம்
அருமரு ந்தையு மவன்வி ரும்பினான்
இருமை யுந்துறந் திவனி ருந்தனன்
கருமமிங்கிதே கடவு ளென்றனன். (58)

வேறு

பொய்யி லாதவன் வான்முறை
யிம்மொழி புகல
ஐய னாயிரம் பெயருடை
யமலர்க்கு மமலன்

வைய நுங்கிய வாயிதழ்
துடித்தது மலர்க்கட்
செய்ய தாமரை யாம்பலம்
போதெனச் சிவந்த. (59)

ஈர நீங்கிய சிற்றவை
சொற்றன ளென்ன
ஆரம் வீங்குதோட் டம்பிக்குத்
தன்னர சுரிமைப்
பார மீந்தவன் பரிவில
ஞெருவன்ற னிளையோன்
தாரம் வவ்வின னென்றசொற்
றரிக்குமா றுளதோ. (60)

உலக மேழினோ டேழும்வந்
தவனுயிர்க் குதவ
விலகு மென்னினும் வில்லிடை
வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் றாரமு
முனக்கின்று தருவேன்
புலமை யோயவ னுறைவிடங்
காட்டெனப் புகன்றான். (61)

எழுந்து பேருவ கைக்கடற்
பெருந்திரை யிரைப்ப
அழுந்து துன்பத்துக் கக்கரை
கண்டன னனையான்
விழுந்த தேயினி வாலிதன்
வலியென விரும்பா
மொழிந்த வீரற்கியா மெண்ணுவ
துண்டென மொழிந்தான். (62)

இறைவன் புகன்ற மொழிகளைக் கேட்டுக் களித்த சுக்கிரீவன் அனுமான் முதலிய அமைச்சரோடு ஆராயத்-தொடங்கினான். அக்காலையில் சமீரணன்மகன் தன் அரசனாகிய சுக்கிரீவனைப் பார்த்து, 'அரசே, உன் உள்ளத்தின் எண்ணிய கருத்தினை உணர்ந்து கொண்டேன். அவ்வாலியைக் கொல்லும் ஆற்றல் இவ்வீரனிடத்தில் இல்லை என்று ஐயமுற்றனைபோலும். இனி யான் சொல்வதைக் கடைப்பிடி' என்று புகல்வானாயினான்.

சங்கு சக்கரக் குறியுள
தடக்கையிற் றாளின்
எங்கு மித்தனை யிலக்கணம்
யாவர்க்கு மில்லை
செங்கண் விற்கரத் திராமனத்
திருநெடு மாலே
இங்கு தித்தன னீண்டற
மிருவுதற் கின்னும். (63)

செறுக்கும் வன்றிறற் றிரிபுரந்
தீயெழச் சினவிக்
கறுக்கும் வெஞ்சினக் காலன்றன்
காலமுங் காலால்
அறுக்கும் புங்கவ னண்டபே
ராடகத் தனில்
இறுக்குந் தன்மையும் மாயவற்
கன்றியே யெளிதோ. (64)

என்னை யீன்றவ னிவ்வுல
கியாவையு மீன்றான்
தன்னை யீன்றவற் கடிமைசெய்
தவமஃ தையா

உன்னை யீன்றவெற் குறுபத
　　முளதென வுரைத்தான்
இன்ன தோன்றலே யவனிதற்
　　கேதுவுண் டிறையோய். (65)

துன்பு தோன்றிய பொழுதுடன்
　　றோன்றுவ னெவர்க்கும்
முன்பு தோன்றலை யறிதற்கு
　　முடிவெனென் றியம்ப
அன்பு சான்றென வுரைத்தனை
　　யையவென் யாக்கை
என்பு தோன்றல வுருகின
　　வினிப்பிறி தெவனோ. (66)

'இன்னும் அவ்வீரனது ஆற்றலை அறியவேண்டும் என்னின், ஓர் உபாயஞ் சொல்கின்றேன், கேள்: நாம் போம் வழியில் நிற்கும் மராமரங்கள் ஏழில் ஒன்றில் இவன் பாணம் எய்யின் இவன் ஆற்றலை அறியலாம்' என்று அஞ்சனையின் புதல்வன் புகன்றனன். இதைக் கேட்ட சுக்கிரீவன், 'இதுவே நன்று' என்று மாருதியைத் தழுவிக்கொண்டு சிராமனிடஞ் சென்று,

ஏக வேண்டுமிந் நெறியென
　　வினிதுகொண் டேகி
மாக நீண்டன குறுகிட
　　நிமிர்ந்தன மரங்கள்
ஆக வஞ்சிறோ டாண்டிறொன்
　　றருவிரின் னம்பு
போக மன்றவென் மனத்திடர்
　　போமெனப் புகன்றான். (67)

மறுவி லானது கூறலும்
வானவர்க் கிறைவன்
முறுவல் செய்தவன் முன்னிய
முயற்சியை யுன்னி
எறுழ்வ லித்தடந் தோளினிற்
சிலையைநா ணேற்றி
அறிவி னுலளப் பரியவற்
றருகுசென் றணைந்தான். (68)

சீராமன் மராமரங்களினருகே சென்று அவற்றை நெருங்கி நோக்கினன். அவை,

ஊழி பேரினும் பேர்வில
வுலகங்க ளுலைந்து
தாழுங் காலத்துந் தாழ்வில
தயங்குபேர் மொய்ம்பால்
ஆழி மாநிலந் தாங்கிய
வரும்பெருங் கிரிகள்
ஏழு மாண்டுசென் றொருவழி
நின்றென வியைந்த. (69

கலைகொண் டோங்கிய மதியமுங்
கதிரவன் றானும்
தலைகண் டோடுதற் கருந்தவந்
தொடங்குறுஞ் சாரல்
மலைகண் டோமென்ப தல்லது
மலர்மிசை யயற்கும்
இலைகண் டோமெனத் தெரிப்பருந்
தரத்தன வேழும். (70)

வள்ள லிந்திரன் மைந்தற்குந்
தம்பிக்கும் வயிர்த்த
உள்ள மேயென வொன்றினுன்
றுள்வயிர்ப் புடைய
தெள்ளு நீரிடைக் கிடந்தபார்
சுமக்கின்ற சேடன்
வெள்ளி வெண்படங் குடைந்துகீழ்
போகிய வேர. (71)

ஆய மாமர மனைத்தையு
நோக்கினன் றமலன்
தூய வார்கணை தூரப்பதோ
ராதரந் தோன்றச்
சேய வானமுந் திசைகளுஞ்
செவிடுறத் தேவர்க்
கேய்வி லாததோர் பயம்வரச்
சிலையைநா ணெறிந்தான். (72)

சூரியன் புதல்வன் எய்யும்படி வேண்டிய மராமரங்களைத் தொளைசெய்வான் இரகுவீரன் நாணொலி எழுப்பினன். அந்நாணொலி எவ்வுலகங்களிலும் ஒரு சமமாகப் பரந்தது. சீராமன் அருகே நின்றவர்க்கு அமைந்தது பகர்வது எவ்வாறு? திசையானைகளும் மயக்கமடைந்தன, திசைகளும் திகைத்தன. அவ்வொலி பிரமனுலகத்தும் புகுந்து அப்பதியை அதிரும்படி ஒலித்தது. சீராமன் நாணொலி எழுப்பலும் அமரர் இரிந்து நீங்கினர்; எல்லோரும் கற்பகாலத்து முடிவென்று ஐயுற்றனர். சீராமன்பால் அன்புடைய தம்பியே அயலில் நின்றனன். ஏனையோர் தன்மையைக் கூறத்தொடங்கின் அவர் அவர்கட்குப் பழிவந்தெய்

தும். மாருதி முதலியோர் சீராமன் அம்பு எய்தலைக் காண்டும் என்று அரிதின்வந்து அருகே எய்தி காகுத்தனைப் புகழும்பொழுது வலியமைந்த நீண்ட வில்லின் நாணினை முறையாக வாங்கி அவ்வில்லியும் வெய்ய வாளியை விட்டனன். அது,

ஏழு மாமர முருவிக்கீ ழுலகமென் றிசைக்கும்
ஏழு மூடுபுக் குருவிப்பின் உடனடுத் தியன்ற
ஏழி லாமையான் மீண்டதவ் விராகவன் பகழி
ஏழு கண்டபி னுருவுமா லொழிவதன் றின்னும். (73)

ஏழு வேலையு முலகமே லுயர்ந்தன வேழும்
ஏழு குன்றமு மிருடிக ளெழுவரும் புரவி
ஏழு மங்கையை ரெழுவரு நடுங்கின வென்னை
ஏழு பெற்றதோ விக்கணைக் கிலக்கமென் றெண்ணி.

அன்ன தாயினு மறத்தினுக்
காருயிர்த் துணைவன்
என்னுந் தன்மையை நோக்கினர்
யாவரு மெவையும்
பொன்னின் வார்கழற் புதுநிறத்
தாமரை பூண்டு
சென்னி மேற்கொளூஉ வருக்கன்சே
யிவையிவை செப்பும். (75)

வேறு

வையநீ வானுநீ மற்றுநீ மலரின்மேல்
ஐயனீ யாழிநீ யாழிவா ழமலனீ
செய்யதீ வினைதெறுந் தேவுநீ நாயினேன்
உய்யவந் துதவினா யுலகமுந் துதவினாய். (76)

என்னெனக் கரியதெப் பொருளுமெற் கெளிதலால்
உன்னையித் தலைவிடுத் துதவினர் விதியினர்
அன்னையொப் புடையவுன் னடியருக் கடியன்யான்
மன்னவர்க் கரசவென் றுரைசெய்தான் வசையிலான்.()

நெடிது நாள் வாடினார் தோள் எலாம் வளர, அவ ரெலாம் வாலிக்குக் காலனை இன்று தேடிக் கண்டாம் என்று ஆடிப் பாடி அங்கும் இங்கும் திரிந்து ஓடி உவகை யாகிய கள்ளை யுண்டு அறிவழிந்து இருந்தனர். மாாமரம் ஏழ் தொளை யெய்த எய்தவனாகிய இரகுவீரன் இரசியமுக மலையின் மேலே செல்லுகையில், அண்ட கோளகையும், அதன்கண் உள்ள உலகங்களும் தீயின்-கண் அஞ்ஞான்று சுடப்பட்டது போன்றும், உதிரப் பசை வரண்டாலும் ஆகாய மண்டலம் அளாவுவது மான, துந்துபி என்னும் கடல் நிறத்த அசுரனது எற்புடம்பு அம் மலையின் மேல் மலை யென இருக்கக் கண்டனன். எற்புமலையைக் கண்டதும் இது, ‘தென் திசைக் கிழவனாகிய நமன் ஏறி நடாத்தும் எருமைக் கடாவோ? திசைகளி லிருக்கும் திக்கயங்கள் இறந்து கிடந்தனவோ? முதலையின் என்பு உலர்ந்ததேயோ என்பால் அன்பு கெடாதாய் சொல்’ எனச் சுக்கிரீவனைக் கேட்டனன். சுக்கிரீவன் பின் வருமாறு சொல்வா னாயினன். ‘அங்கே மலையெனத் தோற்றுவது துந்துபி என்னும் பெயரையுடைய அவுணனது உடலம். அவன் விண் மிசை உலவுந் திங்களை எட்ட ஓங்கி எழுகின்ற இரண்டு கொம்பினை யுடையவனாகி, மந்தர மலை யெனப் பருத்தோங்கிய உடலத்தை யுடையவன். அவன் மகா கீர் சிந்திடக் கரு நிறம் அமைந்த திருமாலினைத் தேடுவானாயினன். அங்கே திருமால் வந்து எய்தி, ‘நீ

எய்தியது என் குறித்து?' என்று வினவினர். துந்துபி, 'நீ போரின்கண் என்னோடு போர் செய்ய வா' என்று உரைத்தனன். அதனைக் கேட்ட கரு நிறத்தவன், 'கங்கை தங்கிய அழகிய சடையினையும், கறை தங்கிய கண்டத்தினையு முடைய கடவுளே உங்கள் கொடிய ஆற்றலுக்குத் தக்கவன்' என்று உரைத்தனன். துந்துபி விரைந்து சென்று அக் கடவுளினது கைலை மலையினை முட்டித் தாக்கி எதிர்த்தனன். அக்கறைமிடற்றிறைவன் துந்துபி முன் வந்து, 'நின் குறை யாது?' என்று கேட்க, துந்துபி, 'கேடில்லாத கொடும் போரை எனக்கு உதவுதி?' என்று கூறினன். கைலையங் கடவுள், 'முதன்மையும், வீரத் தன்மையும் போர்த்த நின்னோடு என்னால் போர் செய்தற் கியலுமோ? நீ தேவர்பாற் செல்' என்று ஏவினர். தேவர்கட்கு இறைவனாகிய இந்திரனும், 'நீ பன்னாள் போர் செய்ய விரும்பினை யாயின் மலை வழிச் சென்று வாலி யிடஞ் செல் என்றனன். துந்துபி வாலியி னிடஞ் சென்று அவன் வாழும் மலையினைச் சின்னபின்னப்படுத்தி, 'வானரங்கட்கு அரசனே, எம்பால் போர் செய வருக' என்று விளித்தனன்- என் முன்னவன் அவனுடன் வந்து போர் செய்தனன். தேவர்கள் முதலிய யாவரும் நடுங்கும்படி இருவரும் பன்னிரண்டு மதியம் போர் செய்தனர். வாலி, துந்துபியினுடைய இரண்டு தந்தங்களையும் பறித்து ஒடித்து அவன் தேகத்தை விண்ணில் எற்றினான். அது,

புயல்கடந் திரவிதன் புவிகடந் தயலுளோர்
இயலுமண் டிலமிகந் தெனையவுந் தவிரமேல்
வயிரவன் காதலத் தவன்வலித் தெறியவன்
றுயிரும்விண் படாவிவ் வுடலுமிப் பரிசரோ. (78)

முட்டிவான் முகடுசென் றளவியிம் முடையுடற்
கட்டமால் வரையைவந் துறுதலுங் கருணையான்
இட்டசா பமுமெனக் குதவுமிவ் வியல்பினிற்
பட்டவா முழுவதும் பரிவினு லுரைசெய்தான்.()

கேட்டன னமலனுங் கிளந்த வாறெலாம்
வாட்டொழி லிளவலை யிதனை மைந்தநீ
ஒட்டென வவன்கழல் விரலி னுந்தினன்
மீட்டது விரிஞ்சனு டுற்று மீண்டதே. (80)

இலக்குவன் துந்துபியின் எலும்புக்கூட்டை இடக் காலின் பெருவிரலால் உந்த அது சத்தியலோகஞ் சென்று மீண்டமையைக் கண்ட வானரவீரர்கள் இடியும் நாண ஆர்த்தனர். இராகோத்தமன் சிறிது தூரம் நடந்து ஒரு சோலையிற் றங்கினன். அப்போது சுக்கிரீவன்,

கலன் காண்கை

இவ்வழி யாமியைந் திருந்த தோரிடை
வெவ்வழி யிராவணன் கொணர மேலைநாள்
செவ்வழி நோக்கினின் றேவி யேகொலாம்
கவ்வையி னரற்றினள் கழிந்த சேணுளாள். (81)

உழையரி னுணர்த்துவ துளதென் றுன்னியோ
குழைபொரு கண்ணினுள் குறித்த தோர்ந்திலம்
மழைபொரு கண்ணிணை வாரி யோடுதன்
இழைபொதிந் திட்டனள் யாங்க ளேற்றனம்.(82)

வைத்தன மிவ்வழி வள்ள னின்வயின்
உய்த்தன தந்தபோ துணர்தி யாலெனக்
கைத்தலத் தன்னவை கொணர்ந்து காட்டினன்
நெய்த்தலைப் பால்கலந் தனைய நேயத்தான். (83)

தெரிவுற நோக்கினன் றெரிவை மெய்யணி
எரிகன லெய்திய மெழுகின் யாக்கைபோல்
உருகின னென்கல முயிரிற் கூற்றமாய்ப்
பருகின னென்கலம் பகர்வதென் கொலாம். (84)

குரக்கு வேந்தன் கொணர்ந்து காட்டிய சானகியின் ஆபரணங்களைத் தெரிவுற நோக்கிய காகுத்தற்குச் சீதாபிராட்டியார் அணிந்திருந்த கலன்கள் எல்லாம் அவ்வவ் உறுப்புக்களாகவே தோன்றி அவன் உணர்வைக் கொள்ளைகொண்டன என்பேனே, சுட்டதென்று சொல்வேனே, வேறு என்னவென்று நான் சொல்வது.

மோந்திட நறுமல ராய மொய்ம்பினில்
ஏந்திட வுத்திரீ யத்தை யேய்ந்தன
சாந்தமு மாயொளி தழுவப் போர்த்தலால்
பூந்து கிலாயவப் பூவை பூண்களே. (85)

கலன்களைக் கண்ட இறைவன் கண்களினின்றும் நீர் சுரந்து பாய்ந்தது; திருமேனி முழுவதும் மயிர்ப்புளகம் அரும்பின; தோள்கள் வீங்கின வென்பேனே, வெதும்பின வென்பேனே, இறைவற்கு நிகழ்ந்ததை என் என்று செப்புகேன்; விடங்காந்தாலொப்பதோர் வெப்ப மீக்கொண்டிருப்ப, நெடும்பொழுது அறிவினோடு உயிர்ப்பொழிந்து நின்ற தடம்பெருங் கண்ணனாகிய இறைவனைத் தன்னுடம்பிற் செறிந்த மயிர் சுறுக்கொண்டேறத் தாங்கினன் சுக்கிரீவன். இரகுவீரன் வருந்துவதைக் கண்ட சுக்கிரீவன் ஏங்கிய நெஞ்சினனாய் 'இரங்கி விம்மி, இறைவனே, தீவினையுடையேனாகிய யான் இவ்வணிகலன்களை வருவித்து உமது உயிரை வாங்கினேன்' என்று பகர்ந்ததோ டமையாது, 'அவ-

விராவணன் சானகியாரைச் சத்திய லோகத்திற் சென்று ஒளித்து வைத்திருப்பினும் மயக்கறத்தேடி என் வலி-யையும் காட்டி உமது தேவியாரையும் உதவவல்லேன் ஆதலின் தேவரீர் மனத்துயரகன்று வீற்றிருக்க வேண்டு கின்றேன்' என்று புகன்றனன்.

திருமக ளனையவத் தெய்வக் கற்பினாள்
வெருவரச் செய்துள வெய்ய வன்புயம்
இருபது மீரைந்து தலையு மேவினுன்
ஒருகணைக் காற்றுமோ வுலக மேழுமே. (86)

'தேவரீர் இங்கே எழுந்தருளியிருக்க வேண்டு-கிறேன். பதினான்கு என்றமைந்த உலகங்களையும் வலிந்து புகுந்து இடையே தேடாநின்று அவ்வரக்கனைக் கொன்று இறைவியைக் கொணருங் கைத்தொண்டினைக் காண்பை. நாங்கள் உனக்குக் குற்றேவல் செய்யுந் துணைவராவேம். இங்கு நிற்கும் தம்பியோ கேடுபடாத ஆற்றலையுடையவன், நீ சிறுக நோக்குவதில் என்னும்? மும்மையுலகமும் நின் சொல்லின் முற்படுமோ.'

பெருமையோ ராயினும் பெருமை பேசலார்
கருமமே யல்லது பிறிதென் கண்டது
தருமநீ யல்லது தனித்து வேறுண்டோ
அருமையே துனக்குநின் றவலங் கூர்தியோ. (87)

முளரிமேல் வைகுவான் முருகற் றந்தவத்
தளிரியல் பாகத்தான் தடக்கை யாழியான்
அளவியொன் றுவரோ யன்றி யையமில்
கிளவியாய் தனித்தனிக் கிடைப்ப ரோதுணை. (88)

என்னுடைச் சிறுகுறை முடித்த லீண்டொரீஇப்
பின்னுடைத் தாயினு மாக பேதுறும்
மின்னிடைச் சனகியை மீட்டு மீடுமால்
பொன்னுடைச் சிலையினுய் விரைந்து போவென்ருன்.()

சூரியன்மகன் புகன்றவைகளைக் கேட்ட சிராமன் அருவி சொரியா நின்ற கண்களைத் திறந்து அவனை அன்பினல் நோக்கித் தெளிவுதோன்ற ஒருவகை உணர்வு வரச் சொல்வானுயினுன்.

விலங்கெழிற் றேளினுய் வினையி னேனுமிவ்
விலங்குநற் புவியினி னிருக்க வேயவள்
கலங்கழித் தனளிது கற்பு மேவிய
பொலங்குழைத் தெரிவையர் புரிந்து ளோர்கள்யார். ()

வாணெடுங் கண்ணியென் வரவு நோக்கயான்
தாணெடுங் கிரியொடுந் தடங்க டம்மொடும்
பூணொடும் புலம்பினன் பொழுது போக்கினேன்
நாணெடுஞ் சிலைசுமந் துழல நாணிலேன். (91)

ஆறுடன் செல்பவ ரஞ்சொன் மாதரை
வேறுளார் வலிசெயின் விலக்கி வெஞ்சமத்
தூறுறத் தம்முயி ருகுப்பர் யானெனைத்
தேறின டன்னுயர் தீர்க்க கிற்றிலேன். (92)

கருங்கட றொட்டனர் கங்கை தந்தனர்
பொரும்புலி மானொடு புனலு மூட்டினர்
பெருந்தகை யென்குலத் தரசன் பின்னொரு
திருந்திழை துயரநான் றீர்க்க நோற்றிலேன். (93)

இந்திரற் குரியதோ ரிடுக்கண் டீர்த்திகல்
அந்தகற் கரியபோ ரவுணற் றேய்த்தனன்
எந்தைமற் றவனின்வந் துதித்த யானுளேன்
வெந்துயர்க் கொடும்பழி வில்லிற் றூங்கினேன். (94)

விரும்பெழி லெந்தையார் மெய்ம்மை வீயுமேல்
வரும்பழி யென்றலான் மகுடஞ் சூடலேன்
கரும்பழி சொல்லியைப் பகைஞன் கைக்கொளப்
பெரும்பழி சூடினேன் பிழைத்த தென்னரோ. (95)

என்னநொந் தின்னன பன்னி யீடழிந்
துன்னருந் துயரொடு சோர்கின் றோன்றனைப்
பன்னருங் கதிரவன் புதல்வன் பையுள்பார்த்
தன்னவெந் துயரெனு மளக்கர் நீக்கினான். (96)

கதிரவன் புதல்வன் தேற்றத் தெளிந்த காகுத்தன், 'ஐயனே, நீ ஆற்றிக்கொண்டிருந்தமையால் யான் ஆறினே னல்லாது யான் பிழைத் திருப்பேனோ? எனக்கு வேறொரு உறுதி யுளதோ? இந்த உலகத்து இப் பழி போக இறத்தலையுஞ் செய்வேன்; அதுவும் நின் குறை முடித்தன்றிச் செய்யேன்' என்று மொழிந்தனன். அப் போது அநுமான் இறைவனை நோக்கி, 'மலை போலும் தோளினை யுடையவனே, யான் சொல்லத் தக்கது ஒன் றுண்டு; அதனை நீ உணர்ந்துகேள்' என்று அடிபணிந்-தனன். 'தீய செயலையுடைய வாலியைக் கொன்று ஞாயிற்-றின் மகனாகிய சுக்கிரீவனை அரசனாக்கி நெடும் படை கூட்டினா லன்றி அரக்கர் இருப்பிடம் காண்பது அரிது. அவர் இருக்கை விண்ணகத்ததோ, மண்ணகத்ததோ, மலையிடத்ததோ இவையொழிந்த பெரிய நாகர் வசிக்கும் பாதலத்ததோ அறியக் கடவ தன்று. நமக்கு ஆகூழ்

வந்தவிடத்து அதனை அடைவது உண்மை. அவ்வாக்கர் எவ் வகைப்பட்ட உலகங்களையும் இமைப் பொழுதி னடைவர். அவ்விடங்களில் அவர் வேண்டுவனவற்றை எல்லாம் அடையா நிற்பர். கொடிய வினை எய்தியது போன்று மீள்வர். அவர் இருக்கை ஒருவர் அறியும் பான்மையது அன்று. திருமகளாகிய சானகி இருக்கு மிடத்தை ஒருவழியே படர்ந்து சென்று உலகம் யாவை-யும் தேடுதலே தகுதி. உலகின்கண் வரலாற்று முறை-மையின் அல்லது ஒன்றன் பின் ஒன்றாக தேடி நிற்க வரம் பில்லை, அது அருமையு முள்ளதாம். அதற்கு அளப்-பரிய ஆண்டுகள் வேண்டும். எழுப தாகிய வெள்ளம் என்னும் எண்கொண்ட நமது படை ஊழிக் கடலேபோல உலகம் முழுவதனையும் மூடும், கடனீரைப் பருக வேண்-டினும் பருகும், பிரமன் படைத்த அண்டத்தைக் கீழ்ப் பெயர்த்து எடுத்தாலும் எடுக்கும். கிடைத்த காரியம் எவற்றையும் செய்யும். ஆதலின் அதுவே அமைந்ததா-மென்று நினைந்தனென்' என்று பகர்ந்தனன். இவைக ளனைத்தையும் செவியி லேற்ற சாதுவாகிய திருவின் செல்வனும் சீராமனும் நாம் வாலிபால் போதும் என்று,

வேறு

வெங்க ணாளி யேறு மீளி
மாவும் வேக நாகமும்
சிங்க வேறி ரண்டொ டுந்தி
ரண்ட வன்ன செய்கையார்
தங்கு சால மூல மார்த
மால மேலம் வாழைமாப்
பொங்கு நாக முந்து வன்று
சார லூடு போயினர். (97)

அச்சாரலின்கண்,

மருவி யாடும் வாவி தோறும்
வான யாறு பாயும்வந்
திருவி யார்த டங்கண் மீனி
னேறு பாயு மாறுபோல்
அருவி பாயு மொன்றி னொன்றி
னானை பாயு மேனலில்
குருவி பாயு மோடி மந்தி
கோடு பாயு மாடெலாம். (98)

அன்ன தாய குன்றி னூறு
சென்ற வீர ரைந்தொடைந்
துன்ன லாய யோச னைக்கு
மும்ப ரேறி யிம்பரின்
பொன்னி னூடி ழிந்த தன்ன
வாலி வாழ்பொ ருப்பிடம்
துன்னி னார்கள் செய்வ தென்னை
யென்று நின்று சொல்லுவார். (99)

வாலிவதை

அவ்வி டத்தி ராம னீய
மைத்து வாலி யானதோர்
வெவ்வி டத்தை வந்து போர்வி
ளைக்கு மேல்வை வேறுநின்
றெவ்வி டத்து ணிந்த மைந்த
தென்க ருத்தி தென்றனன்
தெவ்வ டக்கும் வென்றி யானு
நன்றி தென்று சிந்தியா (100)

இறைவன் புகன்றதைக் கேட்ட சுக்கிரீவன் வாலி பாற் சென்று நீரையுடைய அலைகளை எறியும் கடலஞ்ச, கரியமேகம் நாணங்கொள்ள மண்ணுலகத்தவர்களும் விண்ணுலகத்தவர்களும் அச்சமெய்தவும் ஆரவாரித் தனன். மேல்,

இடித்து ரப்பி வந்து போரெ
திர்த்தி யேல டர்பலென்
றடித்த லங்கள் கொட்டி வாய்ம
டித்த டுத்த லங்கரோள்
புடைத்து நின்று ளைத்த பூசல்
புக்க தென்ப மிக்கிடம்
குடிப்ப வங்கு றங்கு வாலி
திண்செ வித்தொ ளைக்கணே. (101)

சுக்கிரீவன் செய்த ஆரவாரம், பாற்கடல் கிடந்ததே போல் அமளியின்மேல் உறங்கும் வாலியினது செவித் தொளையில், யானையினது பிளிற்றோசையைச் சிங்கம் தன் செவியில் ஏற்பதுபோலச் சென்றொலித்தது. வாலி தனக்குத் தோற்றோடிய பின்னவன் மீட்டும் போர்செய வந்தமையை எண்ணிச் சிரித்தனன்; அவ்வோசை திசையின் அப்புறத்திலேயுள்ள பதினன்கு லோகங்களையும் வருத்தியது; ஊழி முடிவின்கண் கொடுமையாகிய அலை எறிகின்ற கடல் கிளர்ந்தாற்போன்ற கொள்கையையுடையவன் பொருக்கென எழுந்திருக்க அக்கிட்கிந்தை மலை அழுந்திவிட்டது. தோளிடத் துண்டாகிய காற்றினாலே அருகே இருந்த பெரிய மலைகள் சிதறின. துறக்க நாடும் வருந்தின. இத்தகைய ஆரவாரத்துடன் போர்க்கெழுந்த வாலி,

வந்தனென் வந்தென னென்ற வாசகம்
இந்திரன் முதற்றிசை யெட்டுங் கேட்டன
சந்திரன் முதலிய தார கைக்குழாம்
சிந்தின மணிமுடிச் சிகரந் தீண்டவே. (102)

போர் செய்வான் எழுந்த இந்திரன் புதல்வன் வீசிய கைகளால் மலைகள் எல்லாம் வேர் பறிந்தன. நமன் கூசி நின்றனன். சுவர்க்கம் குலைந்தது. அப்போது,

ஆயிடைத் தாரையென் றமிழ்திற் றோன்றிய
வேயிடைத் தோளினா ளிடைவி லக்கினாள்
வாயிடைப் புகைவர வாலி கண்வரும்
தீயிடைத் தன்னெடுங் கூந்த றீகின்றாள். (103)

தாரை விலக்குவதைக் கண்ட வாலி, 'நீ என்னைத் தடுக்காதே. விடு விடு, என்னைப் போர்க் கழைத்தவனுடைய உரத்தைப் பிளந்து அவன் உயிரைக் குடித்து மீள்வேன்' என்று பகர்ந்தனன். அதனைக் கேட்ட தாரை, 'அரசனே, உன்னுடைய புயவலிக்குமுன் அஞ்சியோடிய தம்பி இன்று அதிக வல்லமை பெற்று வந்தானல்லன். பெரிய துணை உடையன் ஆதலால் போர்க்கு வந்தனன்' என்றனள். தாரை மொழிந்ததனைக் கேட்ட வாலி, 'அறிவில்லாதவர் என்னை எதிர்ப்பார். எதிர்ப்பாராயின் அவருடைய உடல்வலியும்,பெற்றுள்ள வரங்களும் பாதி என்னுடைய வாகும். நீ துயரற்க' என்று கூறினன்.

அன்னது கேட்டவ ளரச வாயவற்
கின்னுயிர் நட்பமைந் திராம னென்பவன்
உன்னுயிர் கோடலுக் குடன்வந் தானெனத்
துன்னிய வன்பினர் சொல்லினா ரென்றாள். (104)

உழைத்தவல் லிருவினைக் கூறு காண்கிலா
தழைத்தய ருலகினுக் கறத்தி னூறெலாம்
இழைத்தவற் கியல்பல வியம்பி யென்செய்தாய்
பிழைத்தனை பாவியுன் பெண்மையா லென்றான். (105)

இருமையு நோக்குறு மியல்பி னூற்கிது
பெருமையோ வீங்கிதிற் பெறுவ தென்கொலோ
அருமையி னின்றுயி ரளிக்கு மாறுடைத்
தருமமே தவிர்க்குமோ தன்னைத் தானரோ. (106)

ஏற்றபே ருலகெலா மெய்தி யீன்றவள்
மாற்றவ ளேவமற் றவடன் மைந்தனுக்
காற்றரு முவகையா லளித்த வையனைப்
போற்றலை யின்னன புகறற் பாலையோ. (107)

நின்றபே ருலகெலா நெருக்கி நேரினும்
வென்றிவெஞ் சிலையலால் வேறு வேண்டுமோ
தன்றுணை யொருவருந் தன்னின் வேறிலான்
புன்றொழிற் குரங்கொடு புணரு நட்பனோ. (108)

தம்பிய ரல்லது தனக்கு வேறுயிர்
இம்பரி னிலதென வெண்ணி யேய்ந்தவன்
எம்பியும் யானுமுற் றெதிர்ந்த போரினில்
அம்பிடை தொடுக்குமோ வருளி னாழியான். (109)

இத்தகைய மொழிகளை இயம்பித் தாரையைச் சமாதானப்படுத்தி வாலி போருக்கு எழுந்தனன். இரணியன் சுட்டிய தூணில் தோன்றிய நரசிங்கப் பெருமான் நிமிர்ந்து நின்றாற்போல வாலி மலையின் சிகரத்தில் நின்று,

வேறு

ஆர்க்கின்ற பின்னோன் றனைநோக்கினன்
றானு மார்த்தான்
வேர்க்கின்ற வானத் தருமேறு
வெறித்து வீழப்
போர்க்கின்ற தெல்லா வுலகும்பொதிர்
வுற்ற பூசல்
கார்க்குன்ற மன்ன னிலந்தாவிய
காலி தென்ன. (110)

அவ்வேலை யிராமனு மன்புடைத்
தம்பிக் கைய
செவ்வே செலநோக் குதிதானவர்
தேவர் நிற்க
எவ்வேலை யெம்மேரு வெக்காலொடெக்
கால வெந்தீ
வெவ்வே றுலகத் திவன்மேனியை
மானு மென்றான். (111)

வள்ளற் கிளையான் பகர்வானிவன்
றம்முன் வாழ்நாள்
கொள்ளக் கொடுங்கூற் றுவனைக்கொணர்ந்
தான்கு ரங்கின்
எள்ளற் கரும்போரஃ திசைகல
னென்னு மின்னல்
உள்ளத்தி னூன்ற வுணர்வுற்றில
னென்று மென்றான். (112)

ஆற்ருது பின்னும் பகற்வானறத்
தாற முங்கத்
தேற்ருது செய்வார் களைத்தேறுதல்
செவ்வி தன்ருல்
மாற்ரு னெனத்தம் முனைக்கொல்லிய
வந்து நின்ருன்
வேற்ருர் கடிறத் திவன்றஞ்சமென்
வீர வென்ருன். (113)

அத்தா விதுகே ளெனவாரியன்
கூறு வானிப்
பித்தாய விலங்கி னொழுக்கினைப்
பேச லாமோ
எத்தாயர் வயிற்றி னும்பின்பிறந்
தார்க ளெல்லாம்
ஒத்தாற் பரதன் பெரிதுத்தம
ஞைத லுண்டோ. (114)

விற்ருங்கு வெற்பன்ன விலங்கெழிற்
ருேள மெய்ம்மை
உற்ருர் சிலரல் லவரேபல
ரென்ப துண்மை
பெற்ரு ருழைப்பெற்ற பயன்பெறும்
பெற்றி யல்லால்
அற்ருர் நவையென் றலுக்காகுந
ரார்கொ லென்ருன். (115)

வீரத்திறலோராகிய இராமலக்குமணர் இவ்வாறு பேசிக்கொண் டிருக்குங்கால் தேரிற்றிரிவான் மகனும் இந்திரன் செம்மலும் திசையானை ஒன்ருேடொன்று

தாக்கியதெனக் கொடும்போர் புரிந்தனர். இவர் விண் மேலினரோ, நீண்ட மலையின் உச்சி யிடத்தாரோ, மண் மிசையி னுள்ளாரோ, புறத்தே யுள்ள மாதிர வீதியி னுள்ளாரோ என யாவருங் கண்டு அதிசயிக்கும்படி போர் புரிந்தனர்.

அன்ன தன்மைய ராற்றலி
னமர்புரி பொழுதின்
வன்னெ டுந்தடத் திரள்புயத்
தடுதிறல் வாலி
சொன்ன தம்பியைத் தும்பியை
யரிதொலைத் தென்னக்
கொன்ன கங்களிற் கரங்களிற்
குலைந்துக மலைந்தான். (116)

மலைந்த போதினைத் திரவிசே
யையன்மாட் டணுகி
உலைந்த சிந்தையோ டிணங்கினன்
வணங்கிட வுள்ளம்
குலைந்தி டேலுமை வேற்றுமை
தெரிந்திலங் கொடிப்பூ
மிலைந்து செல்கென விடுத்தன
னெதிர்த்தனன் மீட்டும். (117)

இறைவன் பணித்த வண்ணம் சுக்கிரீவன் கொடிப் பூமிலைந்து சென்று வாலி பயங்கொளப் புடைத்து எற்றினன். பலகால் குத்தினன்; வாலி செயிர்த்து நோக்கி, சினத்தொடு சிறுநகை செய்து கதிர்மகன் மயங்கக் கையினுங் காலினும் புடைத்தனன், அடித்-தனன், உதைத்தான். பிறகு,

எடுத்துப் பாரிடை யெற்றுவென்
பற்றியென் றிளவல்
கடித்த லத்தினுங் கழுத்தினுந்
தன்னிரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேற்
கோலொன்று வாங்கித்
தொடுத்து நாணொடு தோளுறுத்
திராகவன் றுரந்தான். (118)

காரும் வார்சுவைக் கதலியின் கனியினைக் கழியச்
சேருஞ் சூசியிற் சென்றது நின்றதென் செப்பின்
நீரு நீர்தரு நெருப்பும்வன் காற்றுங்கீழ் நிமிர்ந்த
பாருஞ் சார்வலி படைத்தவ னுரத்தினைப் பகழி.(119)

தோள்வலியழிந்த தம்பியைப் பாரிடை எற்றுவான் உற்ற போர் வாலி, இராமசரம் படலும் கலங்கி, மேரு வேர் பறிந்ததாமென வீழ்ந்தான். வீழ்ந்தவன் வெற்றி வீரனாகிய இரகுவீரன் விடுத்த கணை உரத்தூடு உற்று அப்புறத்து உருதமுன் தன் உறுவலிக் கரத்தால் பற்றி வாலினும், காலினும் பிணித்து அகப்படுத்தனன். இச் சரம் எய்தவன் ஆர்கொல் என்று அயிர்த்தனன்.

தேவ ரோவென வயிர்க்குமத் தேவரிச் செயலுக்
காவ ரோவவர்க் காற்றலுண் டோவெனு மயலோர்
யாவ ரோவென நகைசெயு மொருவனே யிறைவர்
மூவ ரோடுமொப் பான்செய லாமென மொழியும்.(120)

நேமி தான்கொலோ நீலகண் டன்னெடுஞ் சூலம்
ஆமி தாங்கொலோ வறுமுக னயில்கொலோ வன்றேல்
காம விக்திரன் வச்சிரப் படையுமென் னடுவட்
போமெ னுந்துணை போதுமோ யாதெனப் புழுங்கும். ()

வில்லி னாற்றுரப் பரிதிவ்வெஞ் சரமென வியக்கும்
சொல்லி னானெடு முனிவரோ தூண்டினா ரென்னும்
பல்லி னாற்கடிப் புறும்பல காலுந் தன் னுரத்தைக்
கல்வி யார்ப்பொடு பறிப்பவன் பகழியைக் கண்டான்.

ஓங்க ரும்பெருந் திறலுடை மனத்தின னுரவோன்
வாங்கி னான்மற்றவ் வாளியை யாளிபோல் வாலி
ஆங்கு நோக்கின ரமரரு மவுணரும் பிறரும்
வீங்கி னார்கடோள் வீரரை யார்விய வாதார். (123)

வாசத் தாரவன் மார்பெனு மலைவழங் கருவி
ஓசைச் சோரியை நோக்கின னுடன்பிறப் பென்னும்
பாசத் தாற்பிணிப் புண்டவத் தம்பியும் பசுங்கண்
நேசத் தாரைகள் சொரிதர நெடுநிலஞ் சேர்ந்தான். ()

தான் பறித்த வாளியைப் பருத்த தடக்கையால் பற்றி இறுப்பன் என்று எழுந்து அவ்வாளியிற் பொறித்த நாமத்தை அறிகுவான் நோக்கினன்.

வேறு

மும்மைசா லுலகுக் கெல்லா
    மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்குந்
    தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே யெழுமை நோய்க்கு
    மருந்தினை யிராம னென்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக்
    கண்களிற் றெரியக் கண்டான் (125)

இல்லறந் துறந்த நம்பி
    யெம்மனோர்க் காகத் தங்கள்
வில்லறந் துறந்த வீரன்
    றோன்றலால் வேத நூலில்

சொல்லறந் துறந்தி லாத
  சூரியன் மரபுந் தொல்லை
நல்லறந் துறந்த தென்னா
  நகைவர நாணுட் கொண்டான். (126)

வெள்கிடு மகுடஞ் சாய்க்கும்
  வெடிபடச் சிரிக்கு மீட்டும்
உள்கிடு மிதுவுந் தானோ
  ரோங்கற மோவென் றுன்னும்
முள்கிடுங் குழியிற் புக்க
  மூரிவெங் களிநல் யானை
தொள்கொடுங் கிடந்த தென்னத்
  துயருழந் தழிந்து சோரும். (127)

இறைதிறம் பினனா லென்னே
  யிழிந்துளோ ரியற்கை யென்னை
முறைதிறம் பினனா லென்று
  மொழிகின்ற முகத்தான் முன்னர்
மறைதிறம் பாத வாய்மை
  மன்னர்க்கு முன்னஞ் சொல்லும்
துறைதிறம் பாமற் காப்பத்
  தோன்றினான் வந்து தோன்ற. (128)

கண்ணுற்றான் வாலி நீலக்
  கார்முகில் கமலம் பூத்து
மண்ணுற்று வரிவி லேந்தி
  வருவதே போலு மாலைப்
புண்ணுற்ற தனைய சோரி
  பொறியொடும் பொடிப்ப நோக்கி
எண்ணுற்றா யென்செய் தாயென்
  றேசுவா னியம்ப லுற்றான். (129)

வாய்மையு மரபுங் காத்து
　　மன்னுயிர் துறந்த வள்ளற்
றாயவன் மைந்த னேநீ
　　பாதன்முன் றேன்றி னுபே
தீமைதான் பிறரைக் காத்துத்
　　தான்செய்தாற் றீங்கன் றாமோ
தாய்மையு மன்றி நட்புந்
　　தருமமுந் தழுவி நின்றாய். (130)

குலமிது கல்வி யீது
　　கொற்றமீ துற்று நின்ற
நலமிது புவன மூன்று
　　நாயக முன்ன தன்றே
வலமிதிவ் வுலகந் தாங்கும்
　　வண்மையீ தென்றாற் றிண்மை
அலமரச் செய்ய லாமோ
　　வறிந்திருந் தயர்த்து ளார்போல். (131)

கோவியற் றரும நங்கள்
　　குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணு
　　வுருவத்தா யுடைமை யன்றே
ஆவியைச் சனகன் பெற்ற
　　வன்னத்தை யமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
　　திகைத்தனை போலுஞ் செய்கை. (132)

அரக்கரோ ரழிவு செய்து
　　கழிவரே லதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல
　　மனுநெறி கூறிற் [illegible]ண்டே.

இரக்கமெங் குகுத்தா யென்பா
லெப்பிழை கண்டா யப்பா
பரக்கழி யிதுநீ பூண்டாற்
புகழையார் பரிக்கற் பாலார். (133)

ஒலிகட லுலகந் தன்னி
னூர்தரு குரங்கின் மாடே
கலியது காலம் வந்து
பரந்ததோ கருணை வள்ளால்
மெலியவர் பால தேயோ
வொழுக்கமும் விழுப்பந் தானும்
வலியவ ரிளிவு செய்தாற்
புகழன்றி வசையு முண்டோ. (134)

கூட்டொரு வரையும் வேண்டாக்
கொற்றவ பெற்ற தாதை
பூட்டிய செல்வ மாங்கே
தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமஞ் செய்தா
யெம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமஞ் செய்தாய்
கருமந்தா னிதன்மே லுண்டோ. (135)

அறைகழ லலங்கல் வீர
ராயவர் புரிவ தாண்மைத்
துறையென லாயிற் றன்றே
தொன்மையி னன்னூற் கெல்லாம்
இறைவனீ யென்னைச் செய்த
தீதெனி னிலங்கை வேந்தன்
முறையல செய்தா னென்று
முனிதியோ முனிவி லாதாய். (136)

இருவர்போ ரெதிருங் காலை
யிருவரு நல்லுற் றாரே
ஒருவர்மேற் கருணை தூண்டி
யொருவர்மே லொளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி
வாயம்பு மருமத் தெய்தல்
தருமமோ பிறிதொன் றாமோ
தக்கில தென்னும் பக்கம். (137)

பரதன் முற்றோன்றலாய் விளங்கும் சீராமனே, நீ செய்த காரியம் வீரர்க்குரிய தருமம் அன்று, அறநூல் விதித்த விதி யன்று, உண்மையினுக் குரியதே அன்று, நின்னுலகத்தினுக்கு என் யாக்கை ஒரு சுமையன்று, என்பால் நினக்கு ஏதேனும் பகை யுடைமை இருந்ததும் இன்று, நடு நிலையாக நிற்பதொழிந்து நீ செய்த வண்ணம் யாது?

வேறு

இருமை நோக்கினின் றியாவர்க்கு மொக்கின்ற
அருமை யாற்றலன் றோவறங் காக்கின்ற
பெருமை யென்பதி தென்பிழை பேணல்விட்
டொருமை நீக்கி யொருவற் குதவலே. (138)

செயலைச் செற்ற பகைதெறு வான்றெரிந்
தயலைப் பற்றித் துணையமைந் தாயெனின்
புயலைப் பற்றுமப் பொங்கரி போக்கியோர்
முயலைப் பற்றுவ தென்ன முயற்சியோ. (139)

காரி யன்ற களங்க நிறந் தொன்மை
ஊரி யன்ற மதிக்குள தாமென்ப
சூரி யன்மர புக்குமோர் தொன்மறு
ஆரி யன்பிறந் தாக்கினை யாமரோ. (140)

தூலி யற்கையு நுங்குலத் தூங்கையர்
போலி யற்கையுஞ் சீலமும் போற்றலை
வாலி யைப்படுத் தாயலை மன்னற
வேலி யைப்படுத் தாய்விறல் வீரனே. (141)

தார மற்றொரு வன்கொளத் தன்கையிற்
பார வெஞ்சிலை தாளும் பழுதுற
நேரு மன்று மறைந்து நிராயுதன்
மார்பி னெய்யவோ வில்லிகல் வல்லதே. (142)

என்று தானு மெயிறு பொடிபடத்
தின்று கான்று விழிவழித் தீயுக
வென்றி வாலி யிணைய விளம்பினான்
நின்ற வீரன் நீதி நிகழ்த்தினான். (143)

நெடுங் காலம் பிலத்தின் வழிச் சென்றடைந்தனை அதனின்றும் பெயராராய் என்னுங் கருத்துடன் நீ சென்ற வழி போகத் துணிந்த உம்பியைக் குலத்தில் தோன்றிய ஆண்டின் மூத்தோர் பல்லோரும் குரக்கினத் தலைமை மேற்கொள் எனச் செப்பினர். சுக்கிரீவன், 'என் முன் தோன்றிய வாலியைப் படுத்த அம் மாயாவி என்னும் அவுணன் உறவினொடழியக் கொன்று யானும் முடிவேன், உயிருடன் இருந்து அரசாள்கிலேன், நீங்கள் பகர்ந்தது குற்றமாகிய சொல்' என்று பகர்ந்தனன். மீட்டும் அறிவாற் சிறந்த பெரியோர் நெருக்க அவன் உன் அரசையாண்டனன். பிலத்தினின்று வந்த நின்னை வணங்கி மகிழ்ந்து நின்றனன். நீ சினந்து, உன் தம்பியைக் கொல்லத் தொடங்கினை. அவன், 'நான் உனக்கு அபயம் என் குற்றத்தை உள்ளத்து நினையாதே' என்று கூறி இரக்கவும், நீ சற்றும் இரக்கமில்லாமல் அவ-

லைக் கொல்லத் துணிந்தாய். அவன் இந்தக் கிட்கிந்தை மலையை அடைந்தமையின் அன்றோ பிழைத்தனன்.

ஈர மாவது மிற்பிறப் பாவதும்
வீர மாவதுங் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவது மற்றொரு வன்புணர்
தார மாவதைத் தாங்குந் தருக்கதோ. (144)

மறந்தி றம்பல் வலியமெ ஞமனம்
புறந்தி றம்ப லெளியவர்ப் பொங்குதல்
அறந்தி றம்ப லருங்கடி மங்கையர்
திறந்தி றம்ப றெளிவுடை யோர்க்கெலாம். (145)

தரும மின்ன தெனுந்தகைத் தன்மையும்
இருமை யுந்தெரிந் தெண்ணலை யெண்ணினால்
அருமை யும்பிதன் ஞருயிர்த் தேவியைப்
பெருமை நீக்கினை யெய்தப் பெறுதியோ. (146)

ஆத லானு மவனெனக் காருயிர்க்
காத லானென லானுநிற் கட்டனென்
ஏதி லாரு மெளியரென் றுரையும்
தீது தீர்ப்பதென் சிந்தைக் கருத்தரோ. (147)

பிழைத்த தன்மை யிதுவெனப் பேரெழில்
தழைத்த வீர னுரைசெயத் தக்கிலா
திழைத்த வாலி யியல்பெனக் கித்துணை
விழைத்தி றத்தொழி லென்ன விளம்புவான். ()

சிராமன் கூறியவைகளைக் கேட்ட வாலி,

மணமு மில்லை மறைநெறி வந்தன
குணமு மில்லைக் குலமுதற் கொத்தன
உணர்வு சென்றுழிச் செல்லு மொழுக்கலால்
நிணமு நெய்யு மிணங்கிய நேமியாய் (149)

பெற்றி மற்றிது பெற்றதோர் பெற்றியின்
குற்ற முற்றிலை னீயது கோடியால்
வெற்றி யுற்றதோர் வெற்றியி னுயெனுச்
சொற்ற சொற்றுறைக் குற்றது சொல்லுவான். ()

நலங்கொ டேவரிற் றேன்றி நவையறக்
கலங்க லாவற நன்னெறி காண்டலின்
விலங்க லாமை விளங்கிய தாதலான்
அலங்க லார்க்கி தடுப்பதன் றுமரோ. (151)

பொறியின் யாக்கைய தோபுல னுகிய
அறிவின் மேலதன் றேவறத் தாறுதான்
நெறியி னுேன்மையி னேர்நின் றுணர்ந்தநீ
பெறுதி யோபிழை யுற்றுறு பெற்றிதான். (152)

சிந்தை நல்லறத் தின்வழிச் சேர்தலால்
பைந்தொ டித்திரு வின்பரி வாற்றுவான்
வெந்தொ ழிற்றிறல் வீடுபெற் றெய்திய
எந்தை யும்மெரு வைக்கர சல்லனே. (153)

நன்று தீதென் றியறெரி நல்லறி
வின்றி வாழ்வதன் றேவிலங் கின்னியல்
நின்ற நன்னெறி நீயறி யாநெறி
ஒன்று மின்மையுன் வாய்மை யுணர்த்துமால். ()

தக்க வின்ன தகாதன வின்னவென்
றெக்க வுன்னல ராகி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்க வேலவ் விலங்கும்புத் தேளிரே. (155)

இனைய தாகலி னெக்குலத் தியாவர்க்கும்
வினையி னல்வரு மேன்மையுங் கீழ்மையும்
அனைய தன்மை யறிந்து மழித்தனை
மனையின் மாட்சியென் றான்மனு நீதியான். (156)

வேறு

அவ்வுரை யமையக் கேட்ட
வரிக்குலத் தரசு மாண்ட
செவ்வியோ யனைய தாகச்
செருக்களத் தெதிர்த்தெய் யாதே
வெவ்விய புளினு ரென்ன
விலங்கினை மறைந்து வில்லால்
எவ்விய தென்னை யென்று
னிலக்குவ னியம்ப லுற்றான். (157)

முன்புநின் றம்பி வந்து
சரண்புக முறையி லோயைத்
தென்புலத் துய்ப்ப னென்று
செப்பினன் செருவி னீயும்
அன்பினை யுயிருக் காகி
யடைக்கலம் யானு மென்பாய்
என்பது கருதி யண்ணன்
மறைந்துநின் றெய்த தென்றான். (158)

இலக்குவன் பகர்ந்த விடையினை, குரக்கினத் தரச னான வாலி என்பான் மனத்திற் கொண்டவனாகி, இறைவ னாகிய சீராமன் அறத்தின் பகுதியினை அழித்தல் செய்யான் என்பதை எண்ணி, இறைவனைத் தலையான் வணங்கிச் சொல்வானாயினன்.

தாயென உயிர்க்கு நல்கித்
தருமமுந் தகையுஞ் சால்பும்
நீயென நின்ற நம்பி
நெறியினி னோக்கு நேர்மை
நாயென நின்ற வெம்பா
னவையற வுணர லாமே
தீயன பொறுத்தி யென்றான்
சிறியன சிந்தி யாதான். (159)

இரந்தனன் பின்னு மெந்தை
யாவது மெண்ண றேற்றாக்
குரங்கெனக் கருதி நாயேன்
கூறிய மனத்துக் கொள்ளேல்
அரந்தைவெம் பிறவி வெந்நோய்க்
கருமருந் தனைய வையா
வரந்தரு வள்ளா லொன்று
கேளென மறித்துஞ் சொல்வான். (160)

வேறு

ஏவுகூர் வாளியா லெய்துநா யடியனேன்
ஆவிபோம் வேலைவா யறிவுதந் தருளினாய்
மூவர்நீ முதல்வனீ முற்றுநீ மற்றுநீ
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ. (161)

புரமெலா மெரிசெய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெலா முருவியென் வசையிலா வலிமைசால்
உரமெலா முருவியென் னுயிரெலா நுகருநின்
சரமலாற் பிறிதுவே றுளதரோ தருமமே. (162)

வேறு

மற்றினி யுதவி யுண்டோ
வானினு முயர்ந்த மானக்
கொற்றவ நின்னை யென்னைக்
கொல்லிய கொணர்ந்து தொல்லைச்
சிற்றினக் குரங்கி னோடுந்
திரிவுறச் செய்த செய்கை
வெற்றர செய்தி யெம்பி
வீட்டர செனக்கு விட்டான். (163)

ஓவிய வுருவ நாயே
னுளதொன் றுபெறுவ துன்பால்
பூவிய னறவ மாந்திப்
புந்திவே றுற்ற போது
தீவினை யியற்று மேனு
மெம்பிமேற் சீறி யென்மேல்
ஏவிய பகழி யென்னுங்
கூற்றினை யேவ லென்றான். (164)

இன்னுமொன் றிரப்ப துண்டா
லெம்பியை யும்பி மார்கள்
தன்முனைக் கொல்வித் தானென்
றிகழ்வரேற் றடுத்தி தக்கோய்
முன்னமே மொழிந்தா யன்றே
யிவன்குறை முடிப்ப தைய
பின்னிவன் வினையின் செய்கை
யதனையும் பிழைக்க லாமோ. (165)

மற்றில னெனினு மாய
வரக்கனை வாலிற் பற்றிக்
கொற்றவ நின்கட் டந்து
குரக்கியற் றொழிலுங் காட்டப்
பெற்றிலன் கடந்த சொல்லிற்
பயனிலை பிழைப்ப தின்றி
உற்றது செய்கென் றூது
முரியனிவ் வநும னென்றான். (166)

அநுமனென் பவனை யாழி
யையநின் செய்ய செங்கைத்
தனுவென நினைதி மற்றென்
றம்பிநின் றம்பி யாக
நினைதியோர் துணைவ ரின்றே
ரனையவ ரிலைநீ யீண்டவ்
வனிதையை நாடிக் கோடி
வானினு முயர்ந்த தோளாய். (167)

என்றவற் கியம்பிப் பின்ன
ரிருந்தன னிளவ றன்னை
வன்துணைத் தடக்கை நீட்டி
வாங்கினன் றழுவி மைந்த
ஒன்றுனக் குரைப்ப துண்டா
லுறுதியஃ துணர்ந்து கோடி
குன்றினு முயர்ந்த தோளாய்
வருந்தலை யென்று கூறும். (168)

மறைகளு முனிவர் யாரு
மலர்மிசை யயனு மற்றைத்
துறைகளின் முடிவுஞ் சொல்லுந்
துணிபொரு டிணிவிற் றாக்கி

அறைகழ லிராம ளுகி
யறநெறி நிறுத்த வந்த
இறையொரு சங்கை யின்றி
யெண்ணுதி யெண்ண மிக்கோய். (169)

நிற்கின்ற செல்வம் வேண்டி
நெறிநின்ற வுயிர்க ளெல்லாம்
கற்கின்ற திவன்ற ளுமங்
கருதுவ திவனைக் கண்டாய்
பொற்குன்ற மனைய தோளாய்
பொதுநின்ற தலைமை நோக்கின்
எற்கொன்ற வலியே சாலு
மிதற்கொன்று மேது வேண்டா. (170)

அரசியற் பாரம் பூரித்
தயர்ந்தனை யிகழா தையன்
மரைமலர்ப் பாத நீங்கா
வாழுதி மன்ன ரென்பார்
எரியனற் குரியா ரென்றே
யெண்ணுதி யெண்ணம் யாவும்
புரிதிசிற் றடிமை குற்றம்
பொறுப்பரென் றெண்ண வேண்டா. ()

என்னவித் தகைய வாய
வுறுதிகள் யாவு மேங்கும்
பின்னவற் கியம்பி நின்ற
பேரெழி லானை நோக்கி
மன்னவர்க் கரசன் மைந்த
மற்றிவன் சுற்றத் தோடும்
உன்னடைக் கலமென் றுய்த்தே
யுயர்கர முச்சி வைத்தான். (172)

வாலியின் விருப்பத்தின்படி சுக்கிரீவன் தன் தமையன் குமாரனாகிய அங்கதனை அழைத்து வந்தனன். அவன் போர்க்களத்திற்கு வந்து தன் இன்னுயிரன்ன தாதை இறக்குந் தறுவாயிலிருப்பதனைக் கண்டு கலங்கி அவன்மேல் வீழ்ந்து புலம்பினன். அதனைக் கண்ட வாலி அவனுக்குத் தேறுதல் சொல்லி இது, 'நாயகன் இராமன் செய்த நல்வினைப்பயன்' என்று கழறி,

தோன்றலு மிறத்த றானுந்
துகளறத் துணிந்து நோக்கின்
மூன்றுல கத்தி னோர்க்கு
மூலத்தே முடிந்த வன்றே
யான்றவ முடைமை யாலிவ்
விறுதிவந் திசைந்த தியார்க்குஞ்
சான்றென நின்ற வீரன்
றான்வந்து வீடு தந்தான். (173)

பாலமை தவிர்நீ யென்சொற்
பற்றுதி யாயிற் றன்னின்
மேலொரு பொருளு மில்லா
மெய்ப்பொருள் வில்லுந் தாங்கிக்
கால்தரை தோய நின்று
கட்புலக் குற்ற தம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்திவன் வணங்கு மைந்த. (174)

என்னுயிர்க் கிறுதி செய்தா
னென்பதை யிறையு மெண்ணா
துன்னுயிர்க் குறுதி செய்தி
யிவற்கம ருற்ற துண்டேல்

பொன்னுயிர்த் தொளிரும் பூணாய்
போதுதி நிலைமை நோக்கி
மன்னுயிர்க் குறுதி செய்வான்
மலரடி சுமந்து வாழ்தி. (175)

வாலி இனையவாய உறுதிகள் பலவுஞ் சொல்லி, தன் துணைத் தடக்கையாரத் தநயனைத் தழுவி, ஸ்ரீராமனை நோக்கி,

நெய்யடை நெடுவேற் றானை
நீணிற நிருத ரென்னும்
துய்யடை கனலி யன்ன
தோளினன் றொழிலுந் தூயன்
பொய்யுடை யுள்ளத் தார்க்கும்
புலப்படாப் புலவ மற்றுன்
கையடை யாகு மென்றவ்
ஸ்ரீராமற்குக் காட்டுங் காலை. (176)

தன்னடி தாழ்த லோடுந் தாமரைத் தடங்க ணானும்
பொன்னுடை வாளை நீட்டி நீயிது பொறுத்தி யென்றான்
என்னலு முலக மேழு மேத்தின இறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக் கப்புறத் துலகனானான். (177)

கையவ னெகிழ்த்த லோடுங்
கடுங்கணை கால வாலி
வெய்யமார் பகத்துட் டங்கா
தருவிமேக் குயர மீப்போய்த்

துய்யநீர்க் கடலுட் டோய்ந்து
தூய்பல ரமரர் சூட்ட
ஐயன்வெங் விடாத கொற்றத்
தாவம்வந் தடைந்த தன்றே. (178)

வாலி இறந்துபட்டதைக் கேட்ட அவன் இல்லறக் கிழத்தியாகிய தாரை, போர்க்களங் குறுகி, தன் கணவன் மீது வீழ்ந்து புரண்டு அவன் ஆற்றலைப் பலபடப் புகழ்ந்து நெடிதும் கவன்றனள். அன்னதைக் கண்ட மாருதி, தாரையைத் தோழிமார்களால் அந்தப்புரத்திற்கு அனுப்பிவிட்டு, அங்கதனைக்கொண்டு வாலிக்குச் செயற்பாலதாம், சரமகிரியைகளை முற்றுவித்து, சீராமன்பாற் சென்று நிகழ்ந்தவைகளை எல்லாம் விளம்பினன். சீராமன்,

அரசியல்

அதுகா லத்தி லருட்கு நாயகன்
மதிசா றம்பியை வலலை யேவினன்
கதிரோன் மைந்தனை யைய கைகளான்
விதியான் மோலி மிலைச்சு வாயென. (179)

இறைவன் கட்டளையை ஏற்ற இலக்குவன், மாருதியை நோக்கி முடிபுனைதற் சடங்கினுக்கு வேண்டிய யாவையும் இப்போதே கொணருமாறு விரும்பினன். மாருதியும் மங்கல ஸ்நானஞ் செய்தற்குரிய மங்கலப் பொருள்களும், பொன்மகுடம் முதலியனவும் கொணர்ந்தனன். இலக்குவன்,

மறையோ ராசி வழங்க வானுளோர்
நறைதோய் நாண்மலர் தூவ நன்னெறிக்
கிறையோன் றன்னிளை யோனவ் வேந்தலைத்
துறையோர் நூன்முறை மௌலி சூட்டினன்.

பொன்மா மௌலி புனைந்து பொய்யிலான்
தன்மா னக்கழ ருடும் வேலையின்
நன்மார் பிற்றழு வுற்ற நாயகன்
சொன்னான் முற்றிய சொல்லி னெல்லையூான். ()

வேறு

ஈண்டுநின் றேகி நீநின்
னியல்பமை யிருக்கை யெய்தி
வேண்டுவ மரபி னெண்ணி
விதிமுறை யியற்றி வீர
பூண்டபே ரரசுக் கேற்ற
யாவையும் புரிந்து போரின்
மாண்டவன் மைந்த னோடும்
வாழ்திறற் றிருவின் வைகி. (182)

வாய்மைசா லறிவின் வாய்த்த
மந்திர மாந்த ரோடும்
தீமைதீ ரொழுக்கின் வந்த
திறத்தொழின் மறவ ரோடும்
தூய்மைசால் புணர்ச்சி பேணித்
துகளறு தொழிலை யாகிச்
சேய்மையோ டணிமை யின்றித்
தேவரிற் றெரிய நிற்றி. (183)

புகையுடைத் தென்னி னுண்டு
பொங்கன லங்கென் றுன்னும்
மிகையுடைத் துலக நூலோர்
வினையமும் வேண்டற் பாற்றே

பகையுடைச் சிந்தை யார்க்கும்
பயனுறு பண்பிற் றீரா
நகையுடை முகத்தை யாகி
யின்னுரை நல்கு நாவால். (184)

செய்வன செய்தல் யாண்டுந்
தீயன சிந்தி யாமல்
வைவன வந்த போதும்
வசையில வினிய கூறல்
மெய்சொலல் வழங்கல் யாவு
மேவின வெஃக லின்மை
உய்வன வாக்கித் தம்மோ
டுயர்வன வுவந்து செய்வாய். (185)

சிறியரென் றிகழ்ந்து நோவு
செய்வன செய்யன் மற்றும்
நெறியிகந் தியானோர் தீமை
யிழைத்தலா லுணர்ச்சி நீண்டு
குறியதா மேனி யாய
கூனியாற் குவவுத் தோளாய்
வெறியன வெய்தி நொய்தின்
வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன். (186)

மங்கையர் பொருட்டா லெய்து
மாந்தர்க்கு மரண மென்றல்
சங்கையின் றுணர்தி வாலி
செய்கையாற் சாலு மின்னும்
அங்கவர் திறத்தி னானே
யல்லலும் பழியு மாதல்
எங்களிற் காண்டி யன்றே
யிதனின்வே றுறுதி யுண்டோ. (187)

நாயக னல்ல னம்மை
　　நனிபயந் தெடுத்து நல்கும்
தாயென வினிது பேணித்
　　தாங்குதி தாங்கு வாரை
ஆயது தன்மை யேனு
　　மறம்வரம் பிகவா வண்ணம்
தீயன வந்த போது
　　சுடுதியாற் றீமை யோரை. (188)

இறத்தலும் பிறத்த றானு
　　மென்பன விரண்டும் யாண்டும்
திறத்துளி நோக்கிற் செய்த
　　வினைதரத் தெரிந்த வன்றே
புறத்தினி யுரைப்ப தென்னே
　　பூவின்மேற் புனிதற் கேனும்
அறத்தின திறுதி வாழ்நாட்
　　கறுதியஃ துறுதி யென்ப. (189)

இவைகள் எல்லாம் அரசற்குத் தக்க குணம் என்று கூறுவர் மூதறிஞர்; 'நீ இவைகளை முறைப்படி ஆலோசித்து, அரசுபுரிந்து, மாரிக்காலம் கழிந்த பிறகு உன் சேனையுடன் என்னிடம் வரக்கடவாய்' என்றனன் இரகுவீரன். இறைவன் கூறிய இன்பம் தரும்பும் மொழிகளைக் கேட்ட சூரியன் புதல்வன், 'வள்ளலே, மரங்கள் விளங்கும் அருவியாற்றையுடைய இம்மலை, குரங்கிருக்கும் இருக்கை என்னும் குற்றம் ஒன்று ஒழிய சுவர்க்கலோகத்திற்கு அரசிருக்கை என்னலாம் சிறப்பு வாய்ந்துளது; இறைவனே, உம்மைச் சரண்புக்கு, உமது திருவருட் செல்வத்தைப் பெற்ற நாங்கள், உம்மைப் பிரிந்து அடையுஞ் செல்வம் பிறிதொன்றின்மையின்

யாங்கள் குற்றேவல் செய்ய, வைதேகியாரைத் தேடிச் செல்லுங்காலம் குறுகும் வரையில், இம் மலையின்கண்ணே எழுந்தருளி யிருக்க வேண்டுகின்றேன்' என்று சீராமன் திருவடியில் வீழ்ந்தனன். இறைவனும் அதனைக்கேட்டு இளநகை யரும்பி, 'அரசர்க்குரிய இருக்கை எம்போல் விரதியர் விழைதற்கு ஒவ்வாது. யான் வந்து அவண் இருந்தால் உங்கட்கெல்லாம் எம்மைக் காக்கவே பொழுதுபோம். ஆராய்ந்து இனிது செய்ய வேண்டிய உன் அரசாட்சியாகிய தருமம் நீங்கும்; யான் பதினான்கு ஆண்டளவும் சுடுவனத்திருக்க வென்று கட்டளை யிடப்பெற்றேன்; அரசர் தங்கும் வளப்பத்தையுடைய நகரில் தங்குதல் செய்யேன். சானகி, அரக்கன் வைத்த வேறு சேமத்துளிருப்ப, சீராமன் தன் உயிர் போன்ற துணைவருடன் அளவிடுதற்கரிய இன்பத்தை அடைந்திருந்தான் என்னும் இக்கொடிய சொல் மூவகைப்பட்ட உலகம் முழுதும் முடியுங்காலத்தும் முடிய வல்லதோ! ஆகலின், நீ என் விருப்பப்படி சென்று,

அரசியற் குரிய யாவு
மாற்றுழி யாற்றி யான்ற
திரைசெயற் குரிய சேனைக்
கடலொடுந் திங்க ளொன்றின்
விரசுக வென்பா னின்னை
வேண்டினன் வீர வென்றான்
உரைசெயற் கெளிது மாகி
பரிதுமா மொழுக்கி னின்றான். (190)

இதனைக் கேட்ட சுக்கிரீவன் மீண்டும் மறுமொழி கூறாது இறைவனது குறிப்பறிந்து ஒழுகுதலே மாட்சி

என்று கருதிக் கண்கள் நீர்சொரிய இறைவனை வணங்கிச் சென்றனன். சுக்கிரீவன் சென்ற பிறகு தன் மலரடியை வணங்கி நின்ற அவ்வாலியின் காதலனாகிய அங்கதனை, நீலமேகமன்ன நெடியவன் அருளாற் பார்த்து, 'நீ ஒழுக்கமுடையவனாய் இருக்க வேண்டின், சுக்கிரீவனைச் சிறிய தந்தை என்று எண்ணாமல், முன்னே நின்னைப்பெற்ற தந்தையென்றே எண்ணி, அவன் சொற்படி நட' என்று இத்தகைய நன் மொழிகள் புகன்று, 'அவன் பிறகே செல்' என்றனன். அங்கதனும் திருவடியை வணங்கி விடைபெற்றுச் சென்றனன். பின்னர் மாருதியைப் பார்த்து, 'பேரெழில்வீரனே, நீயும் சென்று அரசனுக்குரிய காரியங்களைச் செய்துவா' என்றனன். மெய்யன்புடையானாகிய மாருதி, 'நாயேன் இங்கே இருந்து, தாம் இடும் சிறிய குற்றேவல்களைச் செய்து வருவல்' என்று இறைவன் கழலிணை வணங்கினான். சீராமன் 'ஆற்றல் முதலிய யாவும் நிரம்பிய ஒருவன் அரசுபுரிந்து வந்த அரசபாரம் இறுதியடைந்து விட்டது. அவ்வரசினை வேறொரு வேந்தன் கைக்கொள்வான் எனில், நன்மையும் தீமையும் ஆங்கு உளவாகும். ஆதலால், ஐயனே, நின்னைப்போன்ற சாலப்பொறையினையுடைய அறிவுடையோரால் அது நிலையினைப் பெறும், ஆதலின் இங்கு நின்றும் அகன்று அவனுக்குரித்தாய அரசினை நிறுத்தி அதன்பின்னர் எனக்குரித்தாய கருமத்தினைச் செய்து முடித்தற்கு ஒத்த சால்பினையுடையார் நின்னின் இல்லை; ஆதலின் அறமே வடிவாகிய நீ, யானே வேண்ட ஆங்குச் செல்' என்றனன். ஆழியான் அருளியவைகளைக் கேட்ட மாருதி இறைவன் மலரடி வணங்கி விடைபெற்றுச் சென்றனன். சீராமனும் இலக்குவனும் வேறொரு மலையை அடைந்தனர்.

ஆரிய னருளிற் போயவ்
வகன்மலை யகத்த னாய
சூரியன் மகனு மானத்
துணைவருங் கிளையுஞ் சுற்றத்
தாரையை வணங்கி யன்னு
டாயெனத் தந்தை முந்தைச்
சீரியன் சொல்லே யென்னச்
செவ்விதி னரசு செய்தான். (191)

வள்ள லுமவனின் றேகி
மதங்கன திருக்கை யாய
வெள்ளவான் குடுமிக் குன்றத்
தொருசிறை மேவி மெய்ம்மை
உள்ளுறு காதற் றம்பி
அன்பினு லமைக்கப் பட்ட
எள்ளலில் சாலை யெய்தி
யினிதினி னிருந்த காலை. (192)

கார்காலம்

மாவியல் வடதிசை நின்று வானவன்
ஓவிய மேயென ஒளிக்க வின்குலாம்
தேவியை நாடிய முந்தித் தென்றிசைக்
கேவிய தூதென விரவி யேகினான். (193)

பையணைப் பஃறலைப் பாந்த ளேந்திய
மொய்ந்நிலத் தகளியின் முழங்கு நீர்நெயின்
வெய்யவன் விளக்கமா மேருப் பொன்றிரி
மையெடுத் தொத்தது மழைத்த வானமே. (194)

கார்காலத்தில் ஆகாயத்தை மறைத்த மேகமானது
ஆலகாலவிடமே போலவும் நெடுங்கடல் போலவும்,

மாதரார் மையுண்ட கண்ணைப் போலவும், அவர்கள் அவிழ்ந்த கூந்தல் போலவும், வஞ்சனை யுள்ள அரக்கர் மேனி போலவும், அவர் செய்கை போலவும், நெஞ்சம் போலவும் இருண்டு விளங்கியது. ஆகாயம் முழுவதும் பரந்து இருண்ட மேகத்தினின்றும் வெளிப்பட்ட மின்னல்கள், திருமால் முதலிய தேவர்களினுடைய ஆபரணங்கள் விரித்து வைத்திருத்தலையும், மலை போல் தீத் தோன்றுதலையும், திசைகள் சிரிப்பதனையும் ஒத்து விளங்கின. அம் மின்னலானது, திசையாகிய கருமான் மேகத்தால் இருண்ட ஆகாயமாகிய கரிக் குவியலில் குளிர்காலத் துளதாம் வாடைக் காற்றாகிய துருத்தி யிட்டு ஊதச் செந்தீ யுமிழும் உலைக்களத்தையும் ஒத்திருந்தது. இவ்வாறு ஆகாயம் எங்கும் பரந்து மின்னி எழுந்த மேகமானது மழை பெய்யத் தொடங்கிற்று. மலையின்மேல் விழும் நீர்த் துளிகள் இந்திர தனுசினின்றும் வீழ்கின்ற பாணமே போன்று வேகத்தால் வீழ்ந்தன, இரவின்கண் மணிகள் சிறந்து தீச்செய்தல் போல மேகத்தினிடைப் பிறந்த இடியாகிய செந்தீக்கள் சிதறின. மேகங்கள்,

> தீர்த்தனுங் கவிகளுஞ் செறிந்து நம்பகை
> பேர்த்தன ரினியெனப் பேசி வானவர்
> ஆர்த்தென வார்த்தன மேக மாய்மலர்
> தூர்த்தன வொத்தன துள்ளி வெள்ளமே. (195)

இவ்வாறு இடித்து ஆரவாரித்த மேகமானது, வில்லேந்திய கையை யுடைய இராவணன் பெண்ணருங்கலமாகிய சானகியாரைக் கவர்ந்து செல்லும்கால் அப் பெண்கள்நாயகம் கண்ணீர் விட்டுக் கதறியழுதது போலக் கார்மழை பெய்தது. இவ்வாறு மழை பெய்தலினால்

விழையுறு பொருடரப் பிரிந்த வேந்தர்வந்
துழையற வுயிருற வுயிர்க்கு மாதரின்
மழையுறு மாழுக மலர்ந்து தோன்றின
குழையுறப் பொலிந்தன வுலவைக் கொம்பெலாம். ()

வேறு

பாடலம் வறுமை கூரப்
பகலவன் பசுமை கூரக்
கோடல்கள் பெருமை கூரக்
குவலயஞ் சிறுமை கூர
ஆடின மயில்கள் பேசா
தடங்கின குயில்க ளன்பாற்
கேடுறத் தளர்ந்தார் போன்றுந்
திருவுறக் கிளர்ந்தார் போன்றும். (197)

நாணிறச் சுரும்பும் வண்டும்
நவமணி யணியிற் சாரத்
தேனுக மலர்ந்து சாய்ந்த
சேயிதழ்க் காந்தட் செம்பூ
வேனிலை வென்ற தம்மா
காரென வியந்து நோக்கி
மானிலக் கிழத்தி கைகண்
மறித்தென போன்ற மன்றே. (198)

நன்னெடுங் காந்தட் போதி
னறைவிரி கடுக்கை மென்பூத்
துன்னிய கோபத் தோடுந்
தோன்றிய தோற்றந் தும்பி

இன்னிசை முரல்வ நோக்கி
யிருநிலப் பெண்கை யேந்திப்
பொன்னொடுங் காசை யீட்டிக்
கொடுப்பதே போன்ற வன்றே. (199)

பல சிறப்புக்களுடன் விளங்கும் சாற்காலத்தைக் கண்ட சீராமன்,

காவி யுங்கருங் குவளையு நெய்தலுங் காயாம்
பூவை யும்பொரு வானவன் புலம்பினன் றளர்வான்
ஆவி யுஞ்சிறி துண்டுகொ லாமென வயிர்த்தான்
தூவி யன்னமன் னுடிறத் திவையிவை சொல்லும். ()

அயிலே விழியார் விளையா ரமிழ்தின்
குயிலே மொழியார்க் கொணராய் கொடியாய்
துயிலே னொருவே னுயிர்சோர் வுணர்வாய்
மயிலே எனைநீ வலியா டுதியோ. (201)

ஒன்றைப் பகராய் குழலுக் குடைவாய்
வன்றைப் புறுநீள் வயிரத் தினையோ
கொன்றைக் கொடியாய் கொணர்கிற் றிலையோ
என்றைக் குறவா கவிருந் தனையே. (202)

வேறு

ஓடைவா னுதலி னூளை
யொளிக்கலா முபாய முன்னி
நாடிமா ரீச னூரோ
ராடக நவ்வி யானார்
வாடையாய்க் கூற்றி னூரு
முருவினை மாற்றி வந்தார்
கேடுசூழ் வார்க்கு வேண்டு
முருக்கொளக் கிடந்த வன்றே. (203)

என்னவித் தகைய பன்னி
யீடழிந் திரங்கு கின்ற
தன்னையொப் பானை நோக்கித்
தகையழிந் தயர்ந்த தம்பி
நின்னையெத் தகைய னாக
நினைந்தனை நெடியோ யென்னாச்
சென்னியிற் சுமந்த கையன்
றேற்றுவான் செப்ப லுற்றான். (204)

கால நீளிது காரு மாரியும்
வந்த தென்ற கவற்சியோ
நீல மேனி யரக்கர் வீர
நினைந்த ழுங்கிய நேர்மையோ
வாலி சேனை மடந்தை வைகிட
நாட வரா விலாமையோ
சால நல்லுணர் கேள்வி வீர
தளர்ந்த தென்னை தவத்தினாய். (205)

காது கொற்ற நினக்க லாது
பிறர்க்கெவ் வாறு கலக்குமோ
வேத னைக்கிட மாதல் வீரம
தன்று பேதமை யாமரோ
போது பிற்பட லுண்டி தோர்பொரு
ளன்றி யின்று புணர்த்தியேல்
யாது னக்கிய லாத தெந்தை
வருந்த லென்ன வியம்பினான். (206)

இலக்குவன் இவ்வாறு தேறுதற் சொற்கள் கூறக் கேட்ட சிராமன் சிறிது அயர்ச்சி நீங்கினான். நோயின் மேல் மற்றுமொரு நோய்வந்ததுபோல மீட்டும் மழை

பெய்யத்தொடங்கியது. அத்தருணத்தில் குளமெல்லாம் நிரம்பின; நீர்நிலைகளில் அலைகள் நெருங்கின, கருங் குயில் வாய் அடங்கின. உயர்ந்த மலைகளுங் குளிர்ந்தன. திசைகள் எல்லாம் மேகங்கள் சூழ்தலால் மறைந்தன. தலைவரைப் பிரிந்த மாதர்கள் வருந்தினர். கடலும் நிறைந்தது; வெப்பமுள்ள சூரியகிரணங்களும் தண்ணிய கிரணமாக விளங்கின. மாலையும் பகலும் அறிவது அரி தாயிற்று. நாரையின் பெடைகள், ஆடவரைப் பிரிந்த மாதரே போலச், சிறை யொடுங்கி உடல் பேராதிருந் தன. நீர்ப்பறவைகள் முழவேபோல் ஒலித்தன. சுரும் பும், ஞிமிறும், வண்டும் தும்பியும் பாட, மயில்கள் மதங்கி யரை ஒத்து நடித்தன. அன்னங்கள் தாமரைத் தவிசை நீங்கி மாமரங்களின் பொதும்பரில் நுழைந்துகொண் டன. இத்தகைய மாரியினால் இருள் பெருக, சானகியார் மேல் வைத்த சிந்தையருந்து இரகுவீரன் நெட்டுயிர்ப் புடையவனாய் இளையவனை நோக்கிச் சொல்வானாயினான்.

தூநிறச் சுடுசரந் தூணி தூக்கிட
வானுறப் பிறங்கிய வயிரத் தோளொடும்
யானுறக் கடவதே யிதுவு மிந்நிலை
வேனிறத் துற்றதொத் துழியும் வீகலேன். ()

ஈண்டுநின் றாக்கர்த மிருக்கை யாமினிக்
காண்டலிற் பற்பல காலங் காண்டுமால்
வேண்டுவ தன்றிது வீர நோய்தெற
மாண்டன னென்பது மாட்சிப் பாலதாம். (208)

தருமமென் றொருபொரு டன்னை யஞ்சியான்
தெருமரு கின்றது செறுநர் தேவரோ
டொருமையின் வந்தன ரேனு முய்கலார்
உருமென வொலிபடு முரவி லோயென்றான். ()

இவ்வாறு சிராமன் மனவருத்தத்துடன் கூறியவைகளைக் கேட்ட இலக்குவன், தமையனை நோக்கி, 'தாம் ஏன் வருந்தவேண்டும்? மழைக்காலமும் கழிவதாயின. நாமும் சீதையைத் தேடுதற்குரிய காலமும் கிட்டி விட்டது.'

ஆகுநர் யாரையுந் துணைவ ராக்கிப்பின்
ஏகுறு நாளிடை யெய்தி யெண்ணுவ
சேகறப் பன்முறை தெருட்டிச் செய்தபின்
வாகையென் றொருபொருள் வழுவற் பாலதோ.

பைந்தொடிக் கிடர்களை பருவம் பையவே
வந்தடுத் துளதினி வருத்த நீங்குவாய்
அந்தணர்க் காமற மரக்கர்க் காகுமோ
சுந்தரத் தனுவலாய் சொல்லுநீ யென்றான். ()

இவ்வாறு இலக்குவன் கூறக் கேட்ட சிராமன், 'இளையவன் கூறியது தக்கதே என்று திருவுளங்கொண்டு இம்மாரிக்காலத்திற்கும் இறுதி உண்டோ' என்று துயர் உழந்தனன். மாரிக்காலமும் இறுதியை அடைந்தது.

மள்கலில் பெருங்கொடை மருவி மண்ணுளோர்
உள்கிய பொருளெலா முதவி யற்றபோ
தெள்கலி லிரவலர்க் கீவ தின்மையால்
வெள்கிய மாந்தரின் வெளுத்த மேகமே. (212)

தீவினை நல்வினை யென்னத் தேற்றிய
பேர்வினைப் பொருடனை யறிந்து பெற்றதோர்
ஆய்வினை மெய்யுணர் வணுக வாசறு
மாயையின் மாய்ந்தது மாரிப் பேரிருள். (213)

மன்னவன் றலைமகன் வருத்த மாற்றுவான்
நன்னெறிப் பருவமு நணுகிற் றாகலால்
பொன்னினை நாடிய போது மென்பபோல்
அன்னமுந் திசைதிசை யகன்ற விண்ணின்வாய். ()

வஞ்சனைத் தீவினை மறந்த மாதவர்
நெஞ்செனத் தெளிந்தன நீர நீர்தொறும்
பஞ்செனச் சிவக்குமென் பாதப் பேதையர்
அஞ்சனக் கண்ணெனப் பிறழ்ந்த வாடன்மீன். ()

மாரிக்காலம் நீங்கிய அளவில் சுக்கிரீவன் தான் சொல்லிய தவணைப்படி வாராமையைக் கண்ட சீராமன் தன் தம்பியாகிய இலக்குவனை நோக்கி,

கிட்கிந்தை

அன்ன கால மகலு மளவினின்
முன்னை வீர னிளவலை மொய்ம்பினோய்
சொன்ன வெல்லையி னூங்குமத் தூங்கிய
மன்னன் வந்தில னென்செய்த வாறரோ. (216)

நன்றி கொன்றரு நட்பினை நாரறுத்
தொன்று மெய்ம்மை சிதைத்துரை பொய்த்துளாற்
கொன்று நீக்குதல் குற்றத்தி னீங்குமால்
சென்று மற்றவன் சிந்தையைத் தேர்குவாய். ()

வெம்பு கண்டகர் விண்புக வேரறுத்
திம்பர் நல்லறஞ் செய்ய வெடுத்தவிற்
கொம்பு முண்டருங் கூற்றமு முண்டுங்கள்
அம்பு முண்டென்று சொல்லுநம் மாணையே. ()

நஞ்ச மன்ன வரைநலிந் தாலது
வஞ்ச மன்று மனுவழக் காதலான்
அஞ்சி யல்லதொன் றூறி வாரவர்
நெஞ்சி னின்று நிலாவ நிறுத்துவாய். (219)

நீதி யாதி நிகழ்த்தினை நின்றது
வேதி யாத பொழுது வெகுண்டிடல்
சாதி யாதவர் சொற்றரத் தக்கனை
போதி யாதியென் றுன்புகழ்ப் பூணினான். (220)

ஆணை சூடி யடிதொழு தாண்டிறை
பாணி யாது படர்வெரிக் பாழ்படாத்
தூணி பூட்டித் தொடுசிலை தொட்டருஞ்
சேணி னீங்கினன் சிந்தையி னீங்கலான். (221)

சீராமன் இட்ட கட்டளையை மேற்கொண்டு இலக்குவன் அவனடி தொழுது வணங்கி மரம் மலை முதலியவைகளை எல்லாம் கடந்து சுக்கிரீவன் அமைத்திருக்கும் பழைய வழியே செல்லாமல், மராமரத்தூடு சென்ற தன் தமையன் வாளியேபோல் விரைந்து சென்றனன். தன் தமையன் தனிவாளியிற் சென்று கிட்கிந்தை மலையைச் சேர்ந்த இலக்குவன் ஒரு மலையினின்று மற்றொரு மலைக்குத் தாவிச் செல்லும் சியமேபோன்று விளங்கினன்.

கண்ட வானரர் காலனைக் கண்டென
மண்டி யோடினர் வாலி மகற்கையா
கொண்ட சீற்றத் திளையோன் குறுகினான்
கண்ட வேகத்தி னாலென்று சாற்றினார். (222)

அன்ன தோன்றலு மாண்டொழி லான்வர
வின்ன தென்றறி வான்மருங் கெய்தினன்
மன்னன் மைந்தன் மனக்கருத் துட்கொளாப்
பொன்னின் வார்கழற் றூதையிற் போயினன். ()

இளைய பெருமாள் மிக்க சினத்துடன் தங்கள் இருப்பிடம் நோக்கி வருவதைக் கண்ட இந்திரன் மகன் மகனாய அங்கதன் அரண்மனைக்குட் சென்று, நளன் இயற்றிய நாயகக் கோயிலுள் மலர்ப் பள்ளியில் பல மாதர்கள் தன் அடி வருடத் துயிலும் தன் சிறிய தந்தையைக்கண்டு துயிலெழுப்பி அவனடி பணிந்து,

எந்தை கேளவ் விராமற் கிளையவன்
சிந்தை புண்ணொடுஞ் சீற்றந் திருமுகம்
தந்த ளிப்பத் தடுப்பரு வேகத்தன்
வந்த னன்னுன் மனக்கருத் தியாதென்றான்.

இவ்வாறு அங்கதன் சொல்லியது கள் உண்டு மயங்கிக்கிடக்கும் சுக்கிரீவன் செவித் தொளையில் ஏறவுமில்லை, அவன் மறுமொழி பகரவும் இல்லை. அதனைக் கண்ட அங்கதன் அநுமானிடம் சென்று அவனை அழைத்துக் கொண்டு தன் தாயாகிய தாரை யிருக்கும் கோயிலை அடைந்து இளையவன் கடுங் கோபத்துடன் வருஞ் செய்கையையும், தன் சிறிய தந்தை தன்னை மறந்து கள்உண்டு களித்து மாதர் கூட்டத்தின் நடுவே துயில்வதையும் புகன்றனன்.

எய்தி மேற்செயத் தக்கதென் னென்றலும்
செய்திர் செய்தற் கருநெடுந் தீயன
நொய்தி னன்னவை நீக்கவு நோக்குதிர்
உய்திர் போலு முதவி[illegible]. (225)

மீட்டு பொன்று விளம்புகின் ருள்படை
கூட்டு மென்றுமைக் கொற்றவன் கூறிய
நாட்டி றம்பினு நாட்டிறம் பும்மெனக்
கேட்டி லீரினிக் காண்டிர் கிடைத்திரால். (226)

வாலி யாருயிர் காலனும் வாங்கவிற்
கோலி வாலிய செல்வங் கொடுத்தவர்
போலு மானும் புறத்திருப் பாரிது
சாலு மானுங்க டன்மையி னோர்க்கெலாம். (227)

தேவி நீங்கவத் தேவரிற் சிரியோன்
ஆவி நீங்கினன் போலயர் வானது
பாவி யாது பருகுதிர் போலுநுங்
காவி நாண்மலர்க் கண்ணியர் காதனீர். (228)

திறம்பி னீர்மெய் சிதைத்தி ருதவியை
நிறம்பொ லீருங்க டவினை நேர்ந்ததால்
மறஞ்செய் வானுறின் மாளுதிர் மற்றினிப்
புறஞ்செய் தாவதெ னென்கின்ற போதின்வாய்.

இவ்வாறு அங்கதன், அனுமான், தாரை ஆகிய மூவரும் ஆலோசித்துக்கொண் டிருக்கும் சமயத்து, தம் அரண்மனையை நோக்கி வேகத்துடன்வரும் இலக்குவனைக் கண்ட வானரவீரர்கள், நீண்ட அரண்மனை வாயிலைத் தாளிட்டு, பெருமலைகளைக் கொடுவந்து அடுக்கிச் சேமித்து வைத்தனர். அதனைக் கண்ட இலக்குவன், 'தம்மைக் காத்துக்கொள்ளவோ கருத்து?' என்று தன் தாமரைத் தாளினால் அக்கதவினை நூக்கினான். இளையவன் சேவடிபட்ட மாத்திரையில், வாயிலும் கதவும், மலையும் பாவம் பற்றொழிந்ததேபோல் பத்து யோசனை அளவு பறந்து ஓடின. வானரவீரர்கள் பயந்தோடினர்.

அன்ன காலையி னுண்டகை யாளியும்
பொன்னி னன்னகர் வீதியிற் புக்கனன்
சொன்ன தாரையைச் சுற்றினர் நின்றவர்
என்ன செய்குவ தெய்தின னென்றனர். (230)

நீரெ லாமய நீங்குமி னோர்ந்தியான்
வீர னுள்ளம் விளக்குவ லென்றலும்
பேர நின்றனர் யாவரும் பேர்கலாத்
தாரை சென்றன டார்குழ லாரொடும். (231)

இளைய பெருமாள் வரும் வழியில் தாரை சேடியர் குழாம் புடைசூழச் சென்று அவர் செல்லும் வழியை மாற்றினாள்

வேறு

தாமரை வதனஞ் சாய்த்துத்
தனுநெடுந் தரையி னூன்றி
மாமியர் குழுவின் வந்தா
ளுமென மைந்த னிற்பப்
பூமியி லணங்க னார்தம்
பொதுவிடைப் புகுந்த பொற்றோட்
டுமன நெடுங்கட் டாரை
நடுங்குவா ளினைய சொன்னாள் (232)

அந்தமில் கால நோற்ற
வாற்றலுண் டாயி னன்றி
இந்திரன் முதலி னோரா
லெய்தலா மியல்பிற் றன்றால்
மைந்தநின் பாதங் கொண்டெம்
மனைவரப் பெற்று வாழ்ந்தேம்
உய்ந்தனம் வினையுந் தீர்ந்தே
முறுதிவே றிதனி னுண்டோ (233)

வெய்தினின் வருத னோக்கி
வெருவுறுஞ் சேனை வீர
செய்திதா னுணர்கி லாது
திருவுளந் தெரித்தி யென்றாள்
ஐயநீ யாழிவேந்த னடியிணை
பிரிக லாதாய்
எய்திய தென்னை யென்று
ளிசையினு மினிய சொல்லாள் (234)

ஆர்கொலோ வுரைசெய் தாரென்
றருள்வரச் சீற்ற மில்லாப்
பார்குலா முழுவெண் டிங்கள்
பகல்வந்த படிவம் போலும்
ஏர்குலா முகத்தி னாளை
யிறைமுக மெடுத்து நோக்கித்
தார்குலா மலங்கன் மார்பன்
றாயரை நினைந்து நைந்தான். (235)

மங்கலவணியை நீத்து, மணியணிதுறந்து, மலர்மாலைமாற்றி வைதவிய நிலையுடன் தோன்றும் தாரையைக்கண்ட வள்ளலாகிய இலக்குவன் கண்கள் நீர்துளிப்ப நின்று,

இனையரா மென்னை யின்ற
விருவரு மென்ன வந்த
நினைவினா னயர்ப்புச் சென்ற
நெஞ்சின னெடிது நின்றான்
வினவினாட் கெதிரோர் மாற்றம்
விளம்பலும் வேண்டு மென்றப்
புனைகுழ லாட்கு வந்த
காரியம் புகல்வ தானான். (236)

சேனையும் யானுந் தேடித்
தேவியைத் தருவ னென்று
மானவற் குரைத்த மாற்ற
மறந்தன னருக்கன் மைந்தன்
ஆனவ னமைதி யல்லை
யறிவென வருளின் வந்தேன்
மேனிலை யனையான் செய்கை
விளைந்தவா விளம்பு கென்றான். (237)

சீறுவா யல்லை யைய
சிறியவர் தீமை செய்தால்
ஆறுவார் நீர லான்மற்
றருள ரயர்ந்தா னல்லன்
வேறுவே றுலக மெங்குந்
தூதரை விடுத்தவ் வேலை
ஊறுமா நோக்கித் தாழ்த்தா
னுதவிமா றுதவி யுண்டோ. (238)

செம்மைசே ருள்ளத் திர்கள்
செய்தபே ருதவி தீரா
வெம்மைசேர் பகையு மாற்றி
யரசுவீற் றிருக்க விட்டீர்
உம்மையே யிகழ்வ ரென்னி
னெளிமையா யொழிவ தொன்றோ
இம்மையே வறுமை யெய்தி
யிருமையு மிழப்ப ரன்றே. (239)

ஆண்டுபோர் வாலி யாற்றன்
மாற்றிய தம்பொன் றானல்
வேண்டுமோ துணைவர் நம்பால்
வில்லினு மிக்க துண்டோ

தெண்டுவார்த் தேடு கின்றீர்
தேவியை யதனைச் செவ்வே
பூண்டுநின் றுய்தற் பாலார்
நுங்கழற் புகுந்து ளோரே. (240)

என்றவ னுரைத்த மாற்றம்
யாவையு மினிது கேட்டு
நன்றுணர் கேள்வி யாள
னருள்வா நாணுட் கொண்டான்
நின்றன னிற்ற லோடு
நீத்தனன் முனிவென் றுன்று
வன்றுணை வயிரத் திண்டோண்
மாருதி மருங்கின் வந்தான். (241)

வந்தடி வணங்கி நின்ற
மாருதி வதன நோக்கி
அந்தமில் கேள்வி நீயு
மயர்த்தனை யாகு மன்றே
முந்திய செய்கை யென்றான்
முனிவினு முனைக்கு மன்பான்
எந்தைகேட் டருளு கென்று
வியம்பின னியம்ப வல்லான். (242)

சிதைவகல் காதற் றாயைத்
தந்தையைக் குருவைத் தெய்வ
பதவியந் தணரை யாவைப்
பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டா
மாற்றலா மாற்றன் மாயா
உதவிகொன் றார்க்கொன் றேனு
மொழிக்கலா முபாய முண்டே. (243)

உதவாம லொருவன் செய்த
வுதவிக்குக் கைம்மா றாக
மதயானை யனைய மைந்த
மற்றுமுண் டாக வற்றோ
சிதையாத செருவி லன்னான்
முன்சென்று செறுநர் மார்பில்
உதையானே லுதையுண் டாவி
யுலையானே லுலகின் மன்னோ. (244)

ஈண்டினி நிற்ற லென்ப
தினியதோ ரியல்பிற் றன்றால்
வேண்டல ரறிவ ரேனுங்
கேண்மைதீர் வினையிற் றாமால்
ஆண்டகை யருளின் மொய்ம்பி
னையநீ ரளித்த செல்வம்
காண்டியா லுன்முன் வந்த
கவிக்குலக் கோனே டென்றான். (245)

மாருதி கூறிய மாற்றங்களைக் கேட்ட இலக்குவன் சீற்றம் விட்டு 'இவர்கள் ஆரியன் ஏவியவைகளை மறந்தவரல்லர்' என்று எண்ணி அனுமானை நோக்கி,

'சானகியார் பிரிவும், மானத் தீயும் சீராமனை வருத்தாநின்றது; அப்பெருமானை யான் ஆற்றிக்கொண்டிருப்பதனுக்கே சால நாள் கழிகின்றனவே. அப்படி நான் ஆற்றுவிட்டால் மும்மையுலகமும் அழிந்துவிடுமே. தேவர்களும் அழிந்து போவரே. தருமமும் அழியுமே விதியினை விலக்க வல்லவர் யாரிருக்கின்றனர்' என்று,

தாழ்வித்தி ரல்லீர் பன்னாட்
டருக்கிய வரக்கர் தம்மை
வாழ்வித்தி ரிமையோர்க் கின்னல்
வருவித்தீர் மரபிற் றீரக்
கேள்வித்தீ யாளர் துன்பங்
கிளர்வித்தீர் பாவந் தன்னை
மூள்வித்தீர் முனியா தானை
முனிவித்தீர் முடிதி ரென்றான். (246)

தோன்றலஃ துரைத்த லோடு
மாருதி தொழுது சொல்லை
ஆன்றநூ லறிஞ போன
பொருண்மனத் தடைப்பா யல்லை
என்றது முடியே மென்னி
னிறத்துமித் திறத்துக் கெல்லாம்
சான்றினி யறனே போந்துன்
றம்முனைச் சார்தி யென்றான். (247)

மாருதி மாற்றங் கேட்ட இலக்குவன் அவனுடன் சுக்கிரீவனைக் காணுமாறு போந்தனன். தாரையும் மகளிர் புடை சூழத் தன் திருமாளிகையை அடைந்தனள். மாருதியும், இலக்குவனும் வருவதனைக் கண்ட அங்கதன் அவர்களை வணங்கி நின்றனன். இலக்குவன் அங்கதனை நோக்கி, 'என் வருகையை உந்தைக்குச் சொல்' என்றனன். அங்கதன் நன்றெனத் தொழுது போனான்.

போனபின் றாதை கோயில்
புக்கவன் பொலங்கொள் பாதம்
தானுறப் பற்றி முற்றுந்
தைவந்து தடக்கை வீர

மானவற் கிளையோன் வந்துன்
வாயிலின் புறத்தான் சீற்றம்
மீனுயர் வேலை மேலும்
பெரிதிது விளைந்த தென்றான். (248)

அங்கதன் கூறவும் சுக்கிரீவன் கள்ளின் வெறி-யாலும், மாதர்கள் நெருக்கத்தாலும் யாதொன்றும் சொல்லாம லிருந்தனன்; மீட்டும் உபசாரஞ் செய்ய அவன் மயக்கந் தெளிந்தனன். அங்கதன் நடந்தவை யனைத்தும் சுக்கிரீவ மகாராசனுக்கு அறிவித்தனன். சுக்கிரீவன், 'எற்கு உரையாது யாது நீர் இயற்றியது? அஃது என் சொல்?' என்றான். அங்கதன்,

உணர்த்தினேன் முன்னர் நீயஃ
துணர்ந்திலை யுணர்விற் றீர்ந்தாய்
புணர்ப்பதொன் றின்மை நோக்கி
மாருதிக் குரைக்கப் போனேன்
இணர்த்தொகை யீன்ற பொற்றா
ரெறுழ்வலத் தடந்தோ ளெந்தாய்
கணத்திடை யவனை நீயுங்
காணுதல் கரும மென்றான். (249)

உறவுண்ட சிந்தை யானு
முரைசெய்வா னொருவர்க் கின்னம்
பெறலுண்டே யவரா லீண்டியான்
பெற்றபே ருதவி யுற்ற
திறலுண்டோ வென்னிற் றீர்வா
னிருந்தபே ரிடரை யெல்லாம
நறவுண்டு மறந்தேன் காண
நாணுவன் மைந்த வென்றான். (250)

ஏயின விதுவ லான்மற்
றேழைமைப் பால தென்னோ
தாயிவண் பனவி யென்னுந்
தெளிவின்றேற் றரும மென்னும்
தீவினை யைந்தி னென்று
மன்றியுந் திருக்கு நீங்கா
மாயையின் மயங்கு கின்றும்
மயக்கின்மேல் மயக்கு வைத்தாம். (251)

தன்னைத்தா னுணரத் தீரும்
தகையறு பிறவி யென்ப
தென்னத்தான் மறையு மற்றைத்
துறைகளு மிசைத்த வெல்லாம்
முன்னைத்தான் றன்னை யோரா
முழுப்பிணி யழுக்கின் மேலே
பின்னைத்தான் பெறுவ தம்மா
நறவுண்டு திகைக்கும் பித்தோ. (252)

அளித்தவ ரஞ்சு நெஞ்சி
னடைந்தவ ரறிவு மூழ்கிக்
குளித்தவ ரின்ப துன்பங்
குடைந்தவர் குடைந்த வேரி
ஒளித்தவ ருண்டு மீண்டிவ்
வுலகெலா முணா வோடிக்
களித்தவ ரெய்தி நின்ற
கதியொன்று கண்ட துண்டோ. (253)

வஞ்சமும் களவும் பொய்யு
மயக்கமு மரபில் கொட்பும்
தஞ்சமென் றாரை நீக்குந்
தன்மையும் களிப்புந் தாக்கும்

கஞ்சமேல லணங்குந் தீருங்
கள்ளினு லருந்தி னுரை
நஞ்சமுங் கொல்வ தல்லா
னரகினை நல்கா தன்றே. (254)

கேட்டன னறவாற் கேடு
வருமெனக் கிடைத்த வச்சொல்
காட்டிய தரும னீதிக்
கல்வியாற் கடந்த தல்லால்
மீட்டினி யுரைப்ப தென்னே
விரைவின்வந் தடைந்த வீரன்
மூட்டிய வெகுளி யானுன்
முடிவதற் கைய முண்டோ. (255)

சுக்கிரீவன் தான் கள் உண்டு மயங்கியமைக்குப் பலபட வருந்தி, 'மதுவையின்னும் யான் விரும்பினேன் என்னின், வீரன் செய்ய தாமரைகளன்ன சேவடி என்னைச் சிதைக்க' என்று ஆணையிட்டவனுய்,

என்றுகொண் டியம்பி யண்ணற்
கெதிர்கொளற் கியைந்த வெல்லாம்
நன்றுகொண் டின்னு நீயே
நணுகென வவனை யேவித்
தன்றுணை தேவி மாருந்
தமரொடுந் தழுவத் தானும்
நின்றன னெடிய வாயிற்
கடைத்தலை நிறைந்த சீரான். (256)

உரைத்தசெஞ் சாந்தும் பூவுஞ்
சுண்ணமும் புகையு மேழின்
நிரைத்தபொற் குடமுந் தீப
சாலமு நிகழ்ந்த முத்தும்

குரைத்தெழு விதானத் தோடு
தொங்கலுங் கொடியுஞ் சங்கும்
இரைத்துமிழ் முரசு முற்று
மியங்கின வீதி யெல்லாம். (257)

இவ்வாறு வீதிகளை அலங்கரித்து அங்கதன் பெயர்த்தும் வந்து இலக்குவனை இணையடி தொழுதனன். இலக்குவன் அடி பணிந்த அங்கதனை நோக்கி, 'எங்கிருந்தான் உங்கோமான்' என்றனன். அங்கதன், 'தம்மை எதிர்கோள் எண்ணிக் கோயில் கடைத்தலை மருங்கி னின்றான்' என்றனன். சூடகத் தொடிக்கை மாதர் சுண்ணமும் தூசும் வீசிக் கவரிக்கற்றைக் காலுற, வெண் திங்கள் விண்ணுற வளர்ந்ததென்ன வெண்குடை விளங்க விற்கரத்தான் முன்னர்க் கவிகுலத் தரசன் வந்தனன். இவ்வகைச் சிறப்புக்களுடன் சுக்கிரீவன் இலக்குவனை எதிர்கொண்டனன்.

வேறு

தோற்றிய வரிக்குலத் தரசைத் தோன்றலும்
எற்றெதிர் நோக்கின னெழுந்த தவ்வழிச்
சீற்றமங் கதுதனைத் தெளிந்த சிந்தையால்
ஆற்றினன் றருமத்தி னமைதி யுன்னுவான்.

சுக்கிரீவன் ஒரு சிங்காதனத்தைக்காட்டி, 'ஐயனே, ஈண்டு தாம் இருக்க வேண்டுகின்றேன்' என்றனன். இலக்குவன், 'திருமகள் தலைவன் புல்லணையிற் சேர எற்கு ஈது உரியதோ?' என்று மனத்தின் உன்னி,

கல்லணை மனத்தினை யுடைக்கை கேசியால்
எல்லணை மணிமுடி துறந்த வெம்பிரான்
புல்லணை வைகயான் பொன்செய் பூத்தொடர்
மெல்லணை வைகவும் வேண்டுமோ வென்றான். ()

இலக்குவன் உரைத்ததைக் கேட்ட இரவியின்புதல்வன் கண்கள் நீர் உகுக்க நின்றனன் விம்மினன். இலக்குவனும் அவ் வரண்மனையில் தரையின்மீது வீற்றிருந்தனன். மைந்தரும் முதியரும் மகளிரும் அழுதகண்ணிராயினர், நொந்தனர், தளர்ந்தனர். சொல்வது யாதும் அறிகிலராயினர். சுக்கிரீவனும் இலக்குவனை நோக்கி, 'மஞ்சன விதி முறை மரபினோடு எஞ்சலில் இன்னமுது அருந்தின் யாமெலாம் இனி உய்ஞ்சனம்' என்றனன். அதைக் கேட்ட இலக்குவன்,

வருத்தமும் பழியுமே வயிறு மீக்கொள
இருத்துமென் றுலெமக் கினிய தியாவதோர்
அருத்தியுண் டாயினு மவலந் தான்றழீஇக்
கருத்துவே றுற்றபி னமிழ்துங் கைக்குமால்.

மூட்டிய பழியெனு முருங்கு தீயவித்
தாட்டினை கங்கைநீ ராசன் தேவியைக்
காட்டினை யெனினெமைக் கடலி னாமு
தூட்டினை யாற்பிறி துயிரு மில்லையால். (261)

பச்சிலை கிழங்குகாய் பரம னுங்கிய
மிச்சிலை நுகர்வதே யன்றி வேறொன்றும்
நச்சிலே னச்சினே னாயி னாயுண்ட
எச்சிலை நுகர்வதே யைய மில்லையால். (262)

அன்றியு மொன்றுள தைய யானினிச்
சென்றனன் கொணர்ந்ததை திருத்தி னாலது
நன்றுணைக் கோமக னுகர்வ தாதலான்
இன்றிறை தாழ்த்தலு மினிதன் றாமென்றான்.

இலக்குவன் புகன்றவைகளைக் கேட்ட சுக்கிரீவன் 'யான் இங்கே தாழ்த்தல் இனிதன்று' என்று புகன்று, 'சீராமபிரான் இடரின்வைக யாம் இன்பத்துள்வைகல் எம்போலிய குரங்குகட்கே அடுத்து' என்று சொல்லி,

எழுந்தனன் பொருக்கென விரவி கான்முளை
விழுந்தகண் ணீரினன் வெறுத்த வாழ்வினன்
அழிந்தயர் சிந்தைய னநுமற் காண்டொன்று
மொழிந்தனன் வான்முறை போதன் முன்னுவான்.

போயின தூதரிற் புகுதுஞ் சேனையை
நீயுடன் கொணருதி நெறிவ லோயென
ஏயின னநுமனை யிருத்தி யீண்டென
நாயக னிருந்துழிக் கடிது நண்ணுவான். (265)

சீராமனைக் காணும் பெருவிருப்பால் எழுந்த சுதிரவன் மகன், அங்கதன் தன் உடன் வரவும், வானரங்கள் முன்னே செல்லவும் தெளிந்த மனமுடைய இலக்குவனைத் தழுவிக்கொண்டும் விரைந்து சென்றனன். இவனை ஒன்பதினுயிரம் வானரசேனை முன்னும் பின்னும் புடை சூழ்ந்தன. உறவினர்களும் மருங்கே செல்வாராயினர். இளையபெருமாள் நடந்து சேறலின் சுக்கிரீவனும் தன் சிவிகை பின்வரத் தானும் நடந்து சென்றனன்.

எய்தினன் மானவ னிருந்த மால்வரை
நொய்தினிற் சேனைபின் பொழிய நோன்கழல்
ஐயவிற் குமரனுந் தானு மங்கதன்
கைதொடர்ந் தயல்செலக் காதன் முன்செல. ()

தனக்குரிய அரசச்செல்வத்தை விட்டு, சீராம பிரானை காணும் பெருவிருப்பாற் சென்ற சுக்கிரீவன் புண்ணியர் தொழும் கழலையுடைய பரதனை போன்று விளங்கினன். சென்ற சுக்கிரீவன்,

பிறிவருந் தம்பியும் பிரியப் பேருல
கிறுதியிற் றனென விருந்த வேந்தலை
அறைமணித் தாரினோ டாரம் பார்தொடச்
செறிமலர்ச் சேவடி முடியிற் றீண்டினான். (267)

தீண்டலு மார்பிடைத் திருவு நோவுற
நீண்டபொற் றடக்கையா னெடிது புல்லினான்
மூண்டெழு வெகுளிபோ யொளிப்ப முன்புபோல்
ஈண்டிய கருணைதந் திருக்கை யேவினான். (268)

அயலினி திருத்திநின் னரசு மானையும்
இயல்பினி னியைந்தவே யினிது வைகுமே
புயல்பொரு தடக்கைநீ புரக்கும் பல்லுயிர்
வெயிலில தேகுடை யெனவி ளம்பினான். (269)

சீராமன் புகன்றவைகளைக் கேட்ட சுக்கிரீவன் இறைவனை நோக்கி, 'இருளுடை உலகினுக்கு இரவி யன்ன நின் அருளுடையேற்கு அவை அரியவோ' என்றனன்.

பின்னரும் விளம்புவான் பெருமை யோய்நின
தின்னரு ளுதவிய செல்வ மெய்தினேன்
மன்னவ நின்பணி மறுத்து வைகியென்
புன்னிலைக் குரக்கியல் புதுக்கி னேனென்றான். ()

'பெரிய திசைகளில் எல்லாம் போய்த்தேடி பிராட்டியார் சென்ற இடத்தை அறியும் ஆற்றல் என்பால்

அமைந்திருந்தும் அதைச் செய்யாமல் சிராமபிரானே, நீ வருந்தியிருக்க யான் இன்பம் நுகர்ந்திருந்தேன்; என்செய்கை இனையனவெனின் இனிமேல் யான் யாது செய்யவல்லேன்' என்று கதிரவன்மகன் புகன்று வருந்தினன். அதைக் கேட்ட இரகுவீரன்,

திருவுறை மார்பனும் தீர்ந்த நேயம்வந்
தொருவரும் காலமுன் னுரிமை யோருரை
தருவினைத் தாகையிற் றாழ்விற் றாகுமோ
பரதனீ யினையன பகரற் பாலையோ. (271)

மேலும் இறைவன் சூரியன்புதல்வனைப் பார்த்து, 'மாருதி எவ்வழி மருவினான்?' என்றனன். சூரியன் புதல்வன், 'அவன் பாவையின் மிக்க சேனையுடன் விரைவில் தோன்றுவான்' என்றனன். 'ஓராயிரங் கோடி தூதர்கள் பெரிய வானரப்படையைத் திரட்டிக் கொணரச் சென்றனர். அநுமான் அச் சேனையின் வரவை நோக்கி நின்றனன். அவை வரக்குறித்த நாளும் குறுகியது. இன்று நாளையில் அச் சேனையுடன் அநுமான் இங்கே வருவான். இறைவனே, என்னுடனே ஒன்பதினாயிரங் கோடி சேனைகள் வந்திருக்கின்றன. ஏனைய சேனையும் நாளை வந்து எய்தும். அவை வந்தபின் செய்யவேண்டியது யாது?' என்றனன் சூரியன்மகன்.

விரும்பிய விராமனும் வீர நிற்கதோர்
அரும்பொரு ளாகுமோ வமைதி நன்றெனப்
பெரும்பக லிறந்தது பெயர்தி நின்படை
பொருந்துழி வாவெனத் தொழுது போயினான்.

அங்கதனையும், 'நீ உன் சிறிய தந்தையுடன் சென்று தங்கியிரு,' என்று இறைவன் அருளித் தானும்

தம்பியும் அவ்விடத்தில் தங்கியிருந்தனன். இளையபெருமாளும் தான் சுக்கிரீவனிடத்துச் சென்றதும் அங்கே நடந்தவைகளும் சிராமற்கு உணர்த்தினன்.

தானைகாண்கை

சுக்கிரீவனுக்கும் அங்கதனுக்கும் விடைகொடுத்து அனுப்பி இறைவன் அங்கே தங்கியிருந்தனன். சூரியனும் உதயமாயினன். சேனைகளும் வந்து சேர்ந்தன. சதவலி, சுடேணன், பனசன், நீலன் முதலியோர் பல்லாயிரங் கோடி சேனைகளுடன் வந்துசேர்ந்தனர். அச்சேனைகள்,

எண்ணி னான்முக னெழுபதி னாயிரர்க் கியலா
உண்ணி னண்டங்க ளோர்பிடி யுண்ணவு முதவா
கண்ணி னோக்குறின் கண்ணுத லானையுங் கடக்கும்
மண்ணின் மேலவாம் வானர சேனையின் வரம்பே. ()

ஒடிக்கு மேல்வட மேருவை வேரொடு மொடிக்கும்
இடிக்கு மேனெடு வானக முகட்டையு மிடிக்கும்
பிடிக்கு மேற்பெருங் காற்றையுங் கூற்றையும் பிடிக்கும்
குடிக்கு மேற்கட லேழையும் வறள்படக் குடிக்கும்.

ஆறு பத்தெழு கோடியாம் வானரர்க் கதிபர்
கூறு திக்கினுக் கப்புறங் குப்புறற் குரியர்
மாறில் கொற்றவ னினைத்தன முடிக்குறும் வலியர்
ஊறு மிப்பெருஞ் சேனைகொண் டெளிதின்வந் துற்றார்.

சதவலி முதலியோர், எழுகடலின் விரிவைப்பார்க்கிலும் விரிவையுடையது என்னும்படி நிறைந்தபடையை உடையவர்களாய் சுக்கிரீவனுடைய பாதங்களில் மலர்களைத் தூவி 'வாழ்க வாழ்க' என்று வாழ்த்துக் கூறி

வணங்கி நின்றனர். சூரியன்மகன் பொருக்கென எழுந்து சென்று சிராமபிரானை அடைந்து, 'நினது சேனைவந்தது' என்று விண்ணப்பஞ் செய்து, 'அதனைப் பார்த்தருள வேண்டும்' என்று விளம்பினன். அதனைக் கேட்ட இரகுவீரன் ஒரு மலையின் சிகரத்தில் எழுந்தருளித் தன் தம்பியோடும் அச்சேனை வெள்ளத்தை நோக்கிச் சீதையைக் கண்டாற்போலவே திருவுள மகிழ்ந்தனன். அதுகண்ட சுக்கிரீவன் மீண்டும் சேனையை அடைந்து அப்படையில் உள்ள வானர சேனைபதிகளை அழைத்துச் சென்று,

மீண்டி ராமனை யடைந்திகல் வென்றிவேல் வீர
காண்டி நீயென வரன்முறை தெரிவுறக் காட்டி
ஆண்டி ருந்தன னார்த்துளைத் தெழுந்ததை யன்றே
ஈண்டு சேனைபா லெறிகட னெறிபடர்ந் ததென்ன.

இத்தகைய சேனைசமுத்திரமானது,

அத்தி யொப்பெனி லன்னவை யளந்தவ ருளரால்
வித்த கர்க்கினி யுரைக்கலா முவமைவே றியாதோ
பத்தி ரட்டிநன் பகலிர வொருவலர் பார்ப்பார்
எத்தி றத்தினு நடுவுகண் டிலர்முடி வெவரோ. (277)

சேனையின் பெருங் கூட்டத்தை இவ்வளவென்று அளவிடற் கருமையைக் கண்ட சிராமன், இலக்குவனை நோக்கி,

அடல்கண் டோங்கிய சேனைக்கு
நாமுநம் மறிவான்
இடைகண் டோமினி முடிவுள
காணுமா றுளதோ

மடல்கொண் டோங்கிய வலங்கலாய்
 மண்ணிடை மாக்கள்
கடல்கண் டோமென்பர் யாவரே
 முடிவுறக் கண்டார். (278)

ஈசன் மேனியை ஈரைந்து
 திசைகளை யிண்டிவ்
வாசில் சேனையை யைம்பெரும்
 பூதத்தை யறிவைப்
பேசும் பேச்சினைச் சமயங்கள்
 பிணக்குறும் பிணக்கை
வாச மாலையாய யாவரே
 முடிவெண்ண வல்லார். (279)

இத்துணைப் பெருஞ் சேனையை இங்கே யிருந்து முழுவதும் நன்ருகப் பார்த்து பிறகு நமது காரியத்தைச் செய்வோமெனில் நீண்ட நாள் செல்லும். 'நாம் செய்யவேண்டிய காரியத்தை விரைந்து செய்வதே உறுதி' என்று சிராமன் பகர்ந்தனன். அதனைக் கேட்ட இளையவன்,

யாவ தெவ்வுல கத்தினி னீங்கிவர்க் கியற்றல்
ஆவ தாகுவ தரியதொன் றுளதென லாமே
தேவ தேவியைத் தேடுவ தென்பது சிறிதால்
பாவந் தோற்றது தருமமே வென்றதிப் படையால் ()

தாங்க நீரெழுந் தாமரை
 நான்முகன் றந்த
வரங்கொள் பேருல கத்தினின்
 மன்னுயி ரெல்லாம்

உரங்கொண் மால்வரை யுயிர்படைத்
தெழுந்தன வொக்கும்
குரங்கின் மாப்படைக் குறையிடப்
படைத்தனன் கொல்லாம். (281)

'இனித் தாமதிப்பதில் பயன்யாது? இனி விரைந்து சீதாபிராட்டியாரைத் தேடுதலே கருமம்' என்று இளையவன் பகர்ந்தனன். இதனைக் கேட்ட நெடியோன் தேரவன் காதலனை நோக்கி,

நாடவிடுதல்

வகையு மானமு மாறெதிர்ந் தாற்றுறும்
பகையு மின்றி நிரைந்து பரந்தெழும்
தகைவில் சேனைக் கறுதி சமைந்ததோர்
தொகையு முண்டுகொ லோவெனச் சொல்லினான். (282)

ஏற்ற வெள்ள மெழுபதி னிற்றவென
ரூற்ற லாள ரறிவின மைத்ததோர்
மாற்ற முண்டது வல்லது மற்றுமோர்
தோற்ற மென்றிதற் கெண்ணுமுன் சொல்வரோ. (283)

இங்கே ஒருசேரத் திரண்டிருக்கும் எழுபது வெள்ளம் சேனைக்கு அறுபத்தேழு கோடி வானரத் தலைவர் உண்டென்றும் அவர்கட்குள் நீலன் என்பவன் மிக்க பராக்கிரமசாலி யாவன் என்றும் கதிரவன்மகன் பகர்ந்தனன்.

என்று ரைத்த வெரிகதிர் மைந்தனை
வென்றி விற்கை யிராமன் விருப்பினால்
நின்றி னிப்பல பேசியென் னோநெறி
சென்றி ழைப்பன சிந்தனை செய்கென்றான். ()

அவனு மண்ண லனுமனை யையநீ
புவன மூன்றுநின் றூதையிற் புக்குழல்
தவன வேகத்தை யோர்கிலே தாழ்த்தனை
கவன மாக்குரங் கின்செயல் காண்டியோ. (285)

சுக்கிரீவன் அநுமானை நோக்கி, 'நீசென்று, பிராட்டியார் இருந்த இடத்தைப் பாதாள லோகத்திலும் பூமியிலும் தேடக் கடவாய். சுவர்க்கலோகத்திற்கும் சென்று தேடவல்ல நினது வேகம் இப்போது வெளிப்படவேண்டும். இராவணனுடைய பெரிய நகரம் தெற்கின்கண் உள்ளது என்று என் அறிவில் தோன்றுகின்றது. மாருதீ, அந்த வலியுள்ள திசைக்குச் சென்று அங்குள்ளாரை வெற்றிகொண்டு கீர்த்திபெறத் தகுந்தவன் நின்னையல்லது வேறு யார் உளர்.'

குடதி சைக்கண் ணிடபன் குபேரன்வாழ்
வடதி சைக்கட் சதவலி வாசவன்
இடதி சைக்கண் வினதன் விறற்றரு
படையொ டுற்றுப் படர்கெனப் பண்ணினான். ()

வெற்றி வானர வெள்ள மிரண்டொடுஞ்
சுற்றி யோடித் துருவி யொருமதி
முற்று றுதமுன் முற்றுதி ரிவ்விடை
கொற்ற வாகையி னீரெனக் கூறினான். (287)

நீவிர் ஈண்டு நின்றும் புறப்பட்டு, அழகிய ஆயிரம் சிகரம் தோன்றுதலால் திருநெடுமாலோ என்று தொழ யாம் விரும்புகின்ற விந்தமலையைச் சேர்ந்து, நருமதையாற்றைச் சார்ந்து, ஏமகூட மலையையடைந்து, அங்குநின்று போய் நுகராவென்னும் பொய்கையைச்

சேர்ந்து, திருமகளாகிய சானகியைப் பெண்ணை நதியில் சில நாள் தேடி விதர்ப்பஞ் சென்று தண்டகாரணியஞ் சேர்ந்து தேடி, அதன் புறத்தேயுள்ள முண்டகத்துறை என்னும் சோலையைச் சார்ந்து அங்குத் தேடி பாண்டு மலையைச் சேருங்கள். பிறகு,

வேறு

முத்தீர்த்துப் பொன்றிரட்டி மணியுருட்டி
முதுநீத்த முன்றி லாயர்
மத்தீர்த்து மானீர்த்து மலையிர்த்து
மானீர்த்து வருவ தியார்க்கும்
புத்தீர்த்திட் டலையாமற் புலவர்நா
டுதவுவது புனித மான
அத்தீர்த்த மகன்கோதா விரியென்ப
ரம்மலையி னருகிற் றம்மா. (288)

கோதாவிரியைக் கடந்து, சண்முகப்பெருமான் வளர்ந்த சுவண நதியைத் தாண்டிச் சூரியகாந்த மலையை யும், சந்திரகாந்த மலையையும் கண்டு நீங்கி,

அரனதிக னுலகளந்த யரியதிக
னென்றுரைக்கு மறிவி லார்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோற்
புகலரிய பண்பிற் றூமால்
சுரநதியி னயலதுவான் றோய்குடுமி
சுடர்த்தொகையைத் தொழுதோர்க் கெல்லாம்
வரனதிகந் தருந்தகைய வருந்ததியா
நெடுமலையை வணங்கி யப்பால். (289)

வடசொற்குந் தென்சொற்கும் வரம்பிற்றாய்
நான்மறையும் மற்றை நூலும்
இடைசொற்ற பொருட்கெல்லா மெல்லையதாய்
நல்லறத்துக் கீறாய் வேறு
புடைசுற்றுந் துணையின்றிப் புகழ்பொதிந்த
மெய்யேபோற் பூத்து நின்ற
உடைசுற்றுந் தண்சார லோங்கியவேங்
கடத்திற்சென் றுறுதிர் மாதோ. (290)

இருவினையு மிடைவிடா வெவ்வினையு
மியற்றாதே யிமையோ ரேத்தும்
திருவினையு மிடுபதந்தேர் சிறுமையையு
முறையொப்பத் தெளிந்து நோக்கிக்
கருவினைய திப்பிறவி யென்றுணர்ந்தங்
கதுகளையுங் கடையின் ஞானத்
தருவினையின் பெரும்பகைஞ ராண்டுளரீண்
டிருந்துமடி வணங்க லாவார். (291)

கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரே
லுங்நெடிய கொடுமை நீங்கி
வீடுறுதி ராதலினான் விலங்குதிரப்
புறத்துநீர் மேவு தொண்டை
நாடுறுதி ருற்றதனை நாடியதற்
பின்னையவை நளிநீர்ப் பொன்னிச்
சேடுறுதண் புனற்றெய்வத் திருநதியி
னிருகரையுஞ் சேர்திர் மாதோ. (292)

துறக்கமுற்றா மனமென்னத் துறைகெழுநீர்ச்
சோணாடு கடந்தாற் றெல்லை
மறக்கமுற்றா ரதனயலே மறைந்துறைவ
ரவ்வழிநீர் வல்லை யேகி

உறக்கமுற்று ரென்னுற்று ரெனுமுணர்வி
னொடுமொதுங்கி மணியா லோங்கற்
பிறக்கமுற்ற மலைநாடு நாடியகன்
தமிழ்நாட்டிற் பெயர்திர் மாதோ. (293)

தென்றமிழ்நாட் டகன்பொதியத் திருமுனிவன்
தமிழ்ச்சங்சஞ் சேரு வீரேல்
என்றுமவ னுறைவிடமா மாதலினு
னம்மலையை யிறைஞ்சி யேகிப்
பொன்றிணிந்த புனல்பெருகும் பொருநையெனுந்
திருநதியின் பொழிய நாகக்
கன்றுவளர் தடஞ்சாரன் மகேந்திரமா
நெடுவரையுங் கடலுங் காண்டிர். (294)

ஆண்டுகடந் தப்புறத்து மெப்புறத்து
மொருதிங்க ளவதி யாகத்
தேண்டியிவண் வந்தடைதிர் விடைகோடிர்
கடிதென்னச் செப்பும் வேலை
நீண்டவனு மாருதியை நிறையருளா
லுறநோக்கி நீதி வல்லோய்
காண்டியெனிற் குறிகேட்டி யெனவேறு
கொண்டிருந்து கழற லுற்றான். (295)

வேறு

பாற்கடற் பிறந்த செய்ய
பவளத்தைப் பஞ்சி யூட்டி
மேற்பட மதியஞ் சூட்டி
விளங்குற நிரைத்த மெய்ய

காற்றகை விரல்க ளைய
கயலமும் பிறவு மெல்லாம்
ஏற்பில வென்ப வன்றி
யிணையடிக் குவமை யுண்டோ (296)

நீமையா வுணர்தி யைய
நிரைவளை மகளிர்க் கெல்லாம்
வாய்மையா லுவமை யாக
மதியறி புலவர் வைத்த
தாமையா மென்ற போது
மல்லன சொல்லி னாலும்
யாமையாழ் மழலை யாடன்
புறவடிக் கிழுக்க மன்றே. (297)

கரும்புகண் டாலு மாலைக்
காம்புகண் டாலு மாலி
அரும்புகண் டாரை சோர
வழுங்குவே னறிவ துண்டோ
சுரும்புகண் டாலுங் கோதை
தோளிணைக் குவமை சொல்ல
இரும்புகண் டனைய நெஞ்ச
மெனக்கில்லை யிசைப்ப தென்னோ. (298)

முன்கையே யொப்ப தொன்று
முண்டுமூன் றுலகத் துள்ளும்
என்கையே யிழுக்க மன்றே
யியம்பினுங் காந்த ளென்றல்
வன்கையாழ் மணிக்கை யென்றல்
மற்றொன்றை யுணர்த்த லன்றி
நங்கையா டக்கை யாமோ
நலத்தின்மே னலமுண் டாமோ. (299)

ஏலக்கொண் டூன்ற பிண்டி
யிளந்தளிர் கிடக்க யாணர்க்
கோலக்கற் பகத்தின் காமர்
குழைபடுங் கமல மென்பூ
நூலொக்கு மருங்கு லாடன்
னூபுரம் புலம்புங் கோலக்
காலுக்குத் தொலையு மென்றாற்
கைக்கொப்பு வைக்க லாமோ. (300)

வெள்ளிய முறுவற் செவ்வாய்
விளங்கிழை யிளம்பொற் கொம்பின்
வள்ளுகிர்க் குவமை நம்மா
மயர்வற வகுக்க லாமோ
எள்ளுதிர் நீரே மூக்கை
யென்றுகொண் டிவறிப் பின்னும்
கிள்ளைகண் முருக்கின் பூவைக்
கிழிக்குமே லுரைக்க லாமோ. (301)

அங்கையு மடியுங் கண்டா •
லாவிக்த னினைதி யம்பொன்
செங்கதிர் சிதறி நீலஞ்
செருக்கிய தெய்வ வாட்கண்
மங்கைதன் கழுத்தை நோக்கின்
வளரிளங் கமுகும் வாரிச்
சங்கமும் நினைதி யாயி
னவையென்று துணிதி தக்கோய். (302)

பவளமுங் கிடையுங் கொவ்வைப்
பழனும்பைங் குமுதப் போதும்
துவள்வில விலவங் கோப
முருக்கென்றித் தொடக்கஞ் சாலத்

தவளமென் றுரைக்கும் வண்ணஞ்
சிவந்துதேன றதும்பு மாகின்
குவளையொண் கண்ணி வண்ண
வாயது குறியு மஃதே. (303)

முல்லையு முருந்து முத்து
முறுவலென் றுரைத்த போது
சொல்லையு மமுதும் பாலுந்
தேனுமென் றுரைக்கத் தோன்றும்
அல்லதொன் றுவதில்லை யமுதிற்கு
முவமை யுண்டோ
வல்லையே லறிந்து சோடி
மாறிலா வாறு சான்றோய். (304)

ஓதியு மென்னுந் தோள்ளைக்
குமிழுமுக் கொக்கு மென்றால்
சோதிசெய் பொன்னு மின்னு
மணியும்போற் றுளங்கித் தோன்று
வதுவு மில்லை வல்லா
ரெழுதுவார்க் கெழுத வொண்ணு
நீதியை நோக்கி நீயே
நினைதியா னெடிது காண்பாய். (305)

வள்ளைகத் திரிகை வாமை
மயிர்வினைக் கருவி யென்னப்
பிள்ளைக ளுரைத்த வொப்பைப்
பெரியவ ருரைக்கிற் பித்தாம்
வெள்ளிவெண் டோடு செய்த
விழுத்தவம் விளைந்த தென்றே
உள்ளுதி யுலகுக் கெல்லா
முவமைக்கு முவமை யுண்டோ. (306)

பெரியவாய்ப் பரவை யொவ்வா
பிறிதொன்று நினைந்து பேச
உரியவா யொருவ ருள்ளத்
தொடுங்குவ வல்ல வுண்மை
தெரியவா யிரக்கா ணுக்கிற்
றேவர்க்குந் தேவ னென்னக்
கரியவாய் வெளிய வாகும்
வாட்டடங் கண்க ளம்மா. (307)

கேளொக்கி னன்றி யொன்று
கிளத்தினாற் கீழ்மைத் தாமால்
கோளொக்கு மென்னி னல்லாற்
குறியொப்பக் கூற லாமோ
வாளொக்கும் வடிக்க ணுடன்
புருவத்துக் குவமை வைப்பின்
தாளொக்க வளர்ந்து நிற்ப
விரண்டில்லை யனங்க சாபம். (308)

நன்னாளு நளின நாணு
நளிரடி நுதலை நாடிப்
பன்னாளும் பன்னி யாற்றா
மதியெனும் பண்ப தாகி
முன்னாளின் முளைவெண் டிங்கண்
முறைநாளுங் குறைவே யாகி
எந்நாளும் வளர்ந்த தெ னி
னிறையொக்கு மியல்பிற் றாமே. (309)

கெண்டலின் குழவி யாம்பல்
குனிசிலை வள்ளை கொற்றக்
கெண்டையொண் டரள மென்றிக்
கேண்மைய கிடந்த திங்கண்

மண்டிலம் வதன மென்று
வைத்தனன் விதியே நீயப்
புண்டரி கத்தை யுற்ற
பொழுதது பொருந்தித் தேர்வாய். (310)

காரினைக் கழித்துக் கட்டிக்
கள்ளினோ டாவி யூட்டிப்
பேரிருட் பிழம்பு தோய்த்து
நெறிவுறீஇப் பிறங்கு கற்றைச்
சோர்குழற் றொகுதி யென்று
சும்மைசெய் தனைய தம்மா
நேர்மையைப் பருமை செய்த
நிறைநறுங் கூந்த லீத்தம். (311)

புல்லிதழ் கமலத் தெய்வப்
பூவிற்கு முண்டு பொற்பின்
எல்லைசூழ் மதிக்கு முண்டாங்
களங்கமென் றுரைக்கு மேதம்
அல்லவுஞ் சிறிது குற்ற
மகன்றில வன்ன மன்ன
நல்லிய லாளுக் கெல்லா
நலனன்றிப் பிறிதுண் டாமோ. (312)

குழல்படைத் தியாழைச் செய்து
குயிலொடு கிளியுங் கூட்டி
மழலையும் பிறவுந் தந்து
வடித்தகைம் மலரின் மேலான்
இழைபொரு மிடையி னாட
னின்சொற்க ளியையச் செய்தான்
பிழையில வுவமை காட்டப்
பெற்றிலன் பெறுங்கொ லின்னும். (313)

வானின்ற வுலக மூன்றும்
வரம்பின்றி வளர்ந்த வேனும்
நானின்ற சுவைமற் றென்றே
வமிழ்தன்றி நல்ல தில்லை
மீனின்ற கண்ணி னுடன்
மென்மொழிக் குவமை வேண்டின்
தேனென்றே வமிழ்த மொன்றே
வவைசெவிக் கின்பஞ் செய்யா. (314)

பூவரு மழலை யன்னம்
புனைமடப் பிடியென் றின்ன
தேவரு மருளத் தக்க
செலவின வெனினுந் தேறேன்
பாவரு கிழமைத் தொன்மைப்
பருணிதர் கொடுத்த பத்தி
நாவரு கிளவிச் செல்வி
நடைவரு நடைய னல்லோய். (315)

எந்நிற முரைக்கேன் மாவி
னிளநிற முதிரு மற்றைப்
பொன்னிறங் கருகு மென்றான்
மணிநிற முவமை போதா
மின்னிற நாணி யெங்கும்
வெளிப்படா தொளிக்கும் வேண்டின்
தன்னிறந் தானே யொக்கு
மலர்நிறஞ் சமழ்க்கு மன்றே. (316)

மங்கைய ரவளை யொப்பார்
மற்றுள ரில்லை யென்னுஞ்
சங்கையி லுள்ளந்தானே சான்றெனக்
கொண்டு சான்றோய்

அங்கவ ணிலைமை யெல்லா
மளந்தறிந் தருகு சார்ந்து
திங்கள்வாண் முகத்தி னாட்குச்
செப்பெனப் பின்னுஞ் செப்பும். (317)

வேறு

முன்னைநாள் முனியொடும் முதியநீர் மிதிலைவாய்ச்
சென்னிநீண் மாலையான் வேள்விகா ணியசெல
அன்னமா டுந்துறைக் கருகுநின் றாளையக்
கன்னிமா டத்திடைக் கண்டதுங் கழறுவாய். (318)

மல்லன்மா நகர்துறந் தேகுநாண் மதிதொடுங்
கல்லின்மா மதின்மணிக் கடைகடந் திடுதலும்
எல்லைதீர் வரியவெங் கானம்யா தோவெனாச்
சொல்லினா ளஃதெலா முணரநீ சொல்லுவாய். (319)

இனையவா றுரைசெயா வினிதினே குதியெனா
வனையுமா மணிநன்மோ திரமளித் தறிஞநின்
வினையெலா முடிகெனா விடைகொடுத் துதவலும்
புனையும்வார் கழலினா னருளொடும் போயினான். (320)

தென் திசைக்கு அனுமான் முதலியோர் புறப்பட்டுச் சென்றபின், மற்றைத் திசைகட்கும் சுக்கிரீவனால் ஏவப்பட்ட வானர வீரர்கள் ஒரு மாதத் தவணைக்குள் தேடி வருவதாகச் சென்றார்கள். தென் திசை சென்ற வீரர்கள் சிவபெருமானுடைய செஞ்சடை போன்ற விந்த மலையைச் சார்ந்து அம் மலையின் சிகரங்களையும், அவற்றின் உள்ளிடங்களையும், பக்கத்திடங்களையும், தாழ்வரைகளையும் ஆராய்ந்து பார்த்தனர். பிறகு நருமதை யாற்றைக் கடந்து ஏமகூடம் என்னும் பெரு மலையைச் சேர்ந்தனர். அம் மலைப்

பக்கங்களிலுள்ள மலைகளும், மரங்களும், விலங்குகளும், பறவைகளும், அருவிகளும் பொன்னிறம் பெற விளங்கின. அதனை இராவணனது இருக்கை என்றெண்ணி மாருதி முதலியோர் பிராட்டியாரைத் தேடிக் காணப் பெறாமையின் வருத்தத்துடன் மீண்டனர். மாருதி இரண்டு வெள்ளஞ் சேனை வீரரை நோக்கி, 'நீங்கள் உலகெங்குந் தேடி முடிவில் கடற் கருகே உள்ள மகேந்திர மலையை வந்து சேருங்கள்' என்று கட்டளை யிட்டனன். பிறகு,

பிலநீங்குகை

வேறு

மாருதி முதலிய வயிரத் தோள்வயப்
போர்கெழு வீரரே குழீஇப் போகின்றார்
நீரெனும் பெருமங் கெறியி னீங்கலால்
சூரியன் வெருவுமோர் சுரத்தை நண்ணினார். (321)

மாருதி முதலியோர் சென் றடைந்த பாலைவனத்தில் பறவைகள் வந்து தங்க மாட்டா, மிருகங்களும் காணக் கிடைக்கா, புற்களும், மரங்களும் இலவே இல்லை. அங்கேயுள்ள கற்களும் வெம்மையால் பொடிபடுகின்றன. இத்தகைய பாலைவனத்தை அடைந்த வானர வீரர்கள்,

ஒதுங்கலா நிழலினைக் காண்கி லாருயிர்
பிதுங்கலா முடலினார் முடிவில பீழையார்
பதங்கமடப் பருகிடப் பதைக்கின் றார்பல
விதங்களா னெடும்பில வழியின் மேவினார். (322)

பிலத்துட் புக்க வானர வீரர்கள், 'நாம் இனி இப் பிலத்தினின்றும் வெளியே செல்வது அருமை ; இறந்து

போவதல்லாமல் இனிப் பாலைவனத்தில் சென்று வருந்துவது அடாத காரியம். இப் பிலத்துட் சென்று அங்கே இருப்பது யாது என்பதனை ஆராய்வோம்' என்று பிலத்துட் சென்றனர். பிலம் முழுவதும் அந்தகாரமயமா யிருந்தமையின் எங்கே செல்வது என்பதை அறியாதவர்களாய்ப் பெருமூச் செறிந்து நின்றனர். யாது செய்வதென்று அறியாமல் திகைத்து மாருதியை விளித்து, 'எங்களை இவ் வாபத்தினின்றும் காக்க வேண்டும்' என்று இரந்து கூறினர். அதைக் கேட்ட அனுமான், 'என் வாலை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு வாருங்கள்' என்று சொல்லி கையினால் தடவிக்கொண்டே காலினால் நடந்து சென்றனன். வானர வீரர்கள் தன் வாலைப் பின்பற்றி வர, அனுமான் பன்னிரண்டு யோசனை அளவு பருத்த திருமேனியையுடையவனாய் விரைந்து செல்லுகையில் சூரிய மண்டலம் மறைந்து வந்து தங்கியதை ஒத்த ஒளி யுள்ளதும், திருமகள் முகம் போல்வதும், கற்பகச் சோலை யுள்ளதுமான ஒரு நகரத்தைக் கண்டனர். அதில்,

அமிழ்துலை யயினியை யடுத்த வுண்டியும்
தமிழ்நிகர் நறவமுந் தனித்தண் டேறலும்
இமிழ்கனிப் பிறக்கமும் பிறவு மின்னன
கமழ்வுறத் தோன்றிய கணகில் கொட்பது. (323)

வேறு

கன்னிநெடு மாநகர மன்னதெதிர் கண்டார்
இன்னகர மாமிக விராவணன தூரென்
றுன்னியுரை யாடினருவந்தனர் வியந்தார்
பொன்னினெடு வாயிலத னூடினிது புக்கார். (324)

அந் நகரத்தைக் கண்ட வானர வீரர் உள்ளே புகுந்து அங்குள்ள மக்கள் யாவரும் சித்திரமாக இருக்கக் கண்டனர். எல்லோரும், 'இது மாயையோ' என்று திகைத்தனர். சாம்பன் என்னுந் தலைவன், 'நமது பிராட்டியாரை வஞ்சனையாற் கவர்ந்து சென்ற கள்வன், நாம் எல்லோரும் அகப்பட்டு இறந்துபடச் செய்த பொறியேயோ; எல்லாம் மேலை விதியின்படியே முடிவெய்தும்' என்றனன். அதைக் கேட்ட மாருதி,

இன்றுபில னீதிடையி னேறரி தெனிற்பார்
தின்றுசக ரர்க்கதிக மாகிநனி சேறும்
அன்றதெனின் வஞ்சனை யரக்கரை யடங்கக்
கொன்றெழுது மஞ்சலென மாருதி கொதித்தான். ()

மற்றவரு மற்றது மனக்கொள வலித்தார்
உற்றனர் புரத்தினிடை யொண்சுடரி னுள்ளோர்
நற்றவ மனைத்துமுரு நண்ணியொளி பெற்ற
கற்றைவிரி பொற்சடையி னானையெதிர் கண்டார். ()

அன்னபொழு தின்கணவ் வணங்குமறி வுற்றாள்
முன்னனையர் சேறன்முறை யன்றெென முனிந்தாள்
துன்னரிய பொன்னகரி யிற்றுறைய ரல்லீர்
என்னவரவி யாவருரை செய்ம்மென விசைத்தாள். ()

வேதனை யரக்கரொரு மாயைவினை வித்தார்
சீதையை யொளித்தனர் மறைத்தபுரை தேர்வுற்
றேதமி லறத்துறை நிறுத்திய விராமன்
தூதருல கிற்றிரிது மென்றுமுரை சொன்னார்.(328)

அதைக் கேட்ட அம் மடந்தை சால மன மகிழ்ச்சி யடைந்து ஆனந்தக் கூத்தாடி, பரவசமாய் இன்பக் கண்ணீர் பொழிந்தனள். பிறகு,

எவ்வுழை யிருந்தன னிராமனென யாணர்ச்
செவ்வுழை நெடுங்கணவள் செப்பிடுத லோடும்
அவ்வுழை நிகழ்ந்ததனை யாதியினொ டந்தம்
வெவ்விழைவில் சிந்தைநெடு மாருதி விரித்தான். (329)

கேட்டவளு மென்னுடைய கேடிறவ மின்னே
காட்டியது வீடென விரும்பிநனி காணீ
ராட்டியமு தன்னசுவை யின்னடிசி லன்போ
டூட்டிமன னுள்குளிரு மின்னுரை யுரைக்கும். (330)

தன்னை உபசரித்த சுயம்பிரமை என்னும் பெண் மணியை அனுமார் வணங்கி, அவளை நோக்கி, 'இந் நகரத்தின் பெயரென்ன, நின் வரலாறு யாது' என்று வினவினான். சுயம்பிரபை தன் வரலாற்றினைப் பகர்ந்து தனக்கு இந்திரன் இட்ட சாபத்தினையும் அது நீங்கு மாறு அவன் அருளினமையையும் எடுத்துக் கூறி,

ஐயிருப தோசனை யமைந்தபில மையா
மெய்யுளது மேலுலக மேறுநெறி காணேன்
உய்யுநெறி யுண்டுதவு வீரெனி னுபாயம்
செய்யும்வகை சிந்தையி னினைத்திர்சிறி தென்றாள். ()

சுயம்பிரபை கூறியவைகளைக் கேட்ட அனுமார் மீட்டும் அவளை வணங்கி, 'நினக்கு வானவர்கள் சேரும் பொன்னுலகம் ஈகுவன்' என்று பகர்ந்தனன். பிறகு அனுமார் அருகே நின்ற வானரவீரர்கள் அவரை நோக்கி, 'எங்கள் உயிரைக் காத்த வீரனே, நாங்கள் பிலத்தினின்றும் வெளியேறும் வகையைச் செய்ய வேண்டும்' என்று இரந்துகேட்டனர். அதைக் கேட்ட மாருதி, 'அஞ்ச வேண்டா' என்று கூறித் தன்னுடைய பெரிய கைகளைத் தூக்கிக்கொண்டு ஆகாயம் முழுவதும் நிரம்பும்படி

மேலே சென்றான். அனுமானைக் கண்டோர் யாவரும் பண்டைக் காலத்திற்றோன்றிய ஆதிவாராகமே என்று வியந்தனர். இதுவேயன்றி,

மாவடி வுடைக்கமல நான்முகன் வகுக்கும்
தூவடி வுடைச்சுடர்கொள் விண்டலை தொளைக்கும்
மூவடி குறித்துமுறை யீரடி முடித்தான்
பூவடி வுடைப்பொருவில் சேவடி புரைந்தான். (332)

ஏழிருப தோசனை யிடந்துபடி யின்மேல்
ஊழுற வெழுந்ததனை யும்பரு மொடுங்கப்
பாழிநெடு வன்பிலனு ணின்றுபடர் மேல்பால்
ஆழியி லெறிந்தனுமன் மேகமென வார்த்தான். (333)

இன்றுமுள மேல்கட லியக்கில்பில தீவா
நின்றுநிலை பெற்றுளது நீணுதலி யோடுங்
குன்றுபுரை தோளவ ரெழுந்துநெறி கொண்டார்
பொன்றிணி விசும்பினிடை நன்னுதலி போனாள். (334)

பிலத்தினின்றும் வெளியே போந்த சுயம்பிரபை அனுமானைப் பலபடப் புகழ்ந்து சுவர்க்கம் புக்கனள். வானரவீரர்கள் எல்லாம் மாருதியினுடைய ஆற்றலை வியந்து கூறி, நீர்நிறைந்த பொய்கைக் கரையை அடைந்தனர். சூரியனும் அத்தமனவரையை அடைந்தான்.

ஆறுசெல்கை

கண்டார் பொய்கைக் கண்ணக
னன்னீர் கையார
உண்டார் தேனு மொண்கனி
காயு மொர்குழல்

கொண்டா ரன்றே வின்றுயில்
குன்றிற் குறியெய்தி
தண்டார் வென்றித் தானவன்
வந்தான் றகைவில்லான். (335)

மலையே போல்வான் மால்கட
லொப்பான் மறமுற்றிக்
கொலையே செய்வான் கூற்றை
நிகர்ப்பான் கொடுமைக்கோர்
நிலையே போல்வா னீர்மை
யிலாதா னிமிர்திங்கட்
கலையே போலுங் கால
வெயிற்றான் கனல்கண்ணான். (336)

பொய்கை நீரை அருந்தி அதன் கரையில் அயர்ந்து உறங்கும் வானரவீரர்களை அப்பொய்கைக் குரியவனான துமிரன் என்னும் அசுரன் அங்கே வந்து, 'இப் பொய்கை எனதென்றுணர்ந்தும் இங்கே வந்தவர் யாவர்?' என்று கருதி, அங்கே துயின்றுகொண்டிருக்கும் அங்கதப்பெருமாள் மார்பில் கையால் மோதினான். அங்கதனும் துயில் நீத்து எழுந்து தன்னேரே நின்ற அசுரனை, 'இவன் இலங்கை வேந்தனே' என்று ஐயுற்று அவனை வாரி எறிந்தனன். அவனும் பூமியில் வீழ்ந்து இறந்து பட்டனன். வானரவீரர்கள் அவ்விடத்தினின்றும் நீங்கிப் பெண்ணையாற்றைக் கடந்து, விதர்ப்ப நாட்டை யடைந்து, ஆண்டு தவவேடத்துடன் சானகியாரைத் தேடிக்காணாமல், முண்டகத்துறையை அடைந்து தேடி அங்கேயும் பிராட்டியாரைக் காணாதவராய் மனம் வாடிப் பாண்டுமலையின் சிகரத்தில் ஏறினர். பிறகு,

ஊதைபோல் விசையின் வெங்க
ணுழுவைபோல் வயவ ரோங்கல்
ஆதியை யகன்று செல்வா
ரரக்கனால் வஞ்சிப் புண்ட
சீதைபோ கின்றாள் கூந்தல்
வழீஇவந்து புவனஞ் சேர்ந்த
கோதைபோற் கிடந்த கோதா
விரியினைக் குறுகிச் சென்றார். (337)

பிறகு சுவணநதியைச்சார்ந்து, வழ்வகைக் கொங்க ணத்தையும் கடந்து, அருந்ததி என்னும் மலைக்குச் சென்று, திருவேங்கடவரையை அடைந்து அம்மலை யைத் தொழுது நீங்கி, தண்டக நாட்டுள் சென்று,

வேறு

அன்ன தண்டக நாடு கடந்தகன்
பொன்னி நாடு பொருவில ரெய்தினார்
செந்நெ லுங்கரும் புங்கமு குஞ்செறிந்
தின்னல் செய்யு நெறியரி தேகுவார். (338)

அனைய பொன்னி யகன்புன னாடொரீஇ
மனையின் மாட்சி குலாமலை மண்டலம்
வினையி னீங்கிய பண்பினர் மேயினார்
இனிய தென்றமிழ் நாடுசென் றெய்தினார். (339)

அத்தி ருத்தகு நாட்டினை யண்டர்நா
டொத்தி ருக்குமென் றாலுரை யொக்குமோ
எத்தி றத்தினு மேழுல கும்புகழ்
முத்து முத்தமி ழுந்தந்து முற்றுமே. (340)

என்ற தென்றமிழ் நாட்டினை யெங்கணுஞ்
சென்று நாடித் திரிந்து திருந்தினர்
பொன்று வாரிற் பொருந்தினர் போயினர்
துன்ற லோதியைக் கண்டிலர் துன்பினர். (341)

அமிழ்தினுமினிய தமிழ்மொழி வழங்கும் தென் தமிழ்நாடு எங்கணுஞ்சென்றுவானரவீரர்நாடி, பிராட்டியாரைக் காணப் பெறாதவர்களாய் மகேந்திரமலையிருக்கும் சமுத்திரத்தின் எல்லையை அடைந்தனர்.

சம்பாதி

மழைத்தவின் னணகமென முழங்கி வானுற
இழைத்தவெண் டிரைக்கர மெடுத்தி லங்கையாள்
உழைத்தடங் கண்ணியென் னுழையென் றோடிவந்
தழைப்பதே கடுக்குமவ் வாழி நோக்கினர். (342)

சீதாபிராட்டியார் இருக்கும் இடத்தைத் தேடி வருவதாய்ச் சென்ற வானர வீரர்கள்,

யாவரு மவ்வயி னெளிதி னெய்தினர்
பூவரு பொலங்குழற் பொருவில் சற்புடைத்
தேவியைக் காண்கிலர் செய்வ தோர்கிலர்
நாவுறக் குழறிட நவில்கின் றாரரோ. (343)

சீதாபிராட்டியாரைக் காணக் கிடைக்காமையின், 'யாது செய்வோம்' என்று கலங்கிய வானர வீரர்களிற் சிலர்,

அருந்தவம் புரிதுமோ வன்ன தன்றெனின்
மருந்தரு நெடுங்கடு வுண்டு மாய்துமோ
திருந்திய தொருவிதஞ் செய்து தீர்துமென்
றிருந்தனர் தம்முயிர்க் கிறுதி யெண்ணுவார். ()

கடற்கரையில் ஒன்றுகூடிய வானரவீரர்களை நோக்கிய அங்கதன், 'பூமி முழுவதும் பிராட்டியாரைத்தேடிக்-

கொண்டு வருவோமென்று புருடோத்தமனாகிய இராம-பிரானுக்குப் பக்தியுடையோம் போலப் பெருமிதங் கூறி வந்து பழிக்கு ஆளானோம். செய்வோம் என்று ஏற்றுவந்த கருமமும் செய்து முடித்திலோம். மெல்லெனச் சென்று நிகழ்ந்த காரியத்தைச் சொல்லவும் வலியில்லேம். தேடிக் காணக்கூடும் என்பதற்குச் சிறிது ஏதுவும் அறிகிலோம். உயிர் மாயாதிருப்போமாயின் அஃது உரிய கருமம் ஆகுமா? என் பிதாவும் கோபிப்பன். நம் இறைவனாகிய பெருமானும் மனம் வருந்துவன். இச்செயல்களைக் காணுந்திறமிலேன் ஆதலால் உயிர் மாய்வேன். பெரியோர்களே, ஆராய்ந்து சொல்லுமின்' என்று கூறி முடித்தனன். இதைக் கேட்ட சாம்பன் 'அங்கதப் பெருமானே, நாம் எல்லோரும் உயிர் மாய்வதே நன்மை என்று துணிந்தோம். ஆயினும் அது வாலிபுத்திரனாகிய நினக்குக் கூடாது,' என்றனன். அங்கதன், 'நீங்கள் யாவரும் உயிர்மாய நான் மாத்திரம் உயிருடன் செல்வேனாயின் அது நலந்தருவதோ? அறிவுடையோரால் விரும்பத்தக்கதோ?'

சான்றவர் பழியுரைக் கஞ்சித் தன்னுயிர்
போன்றவர் மடிதரப் போந்து ளானெனை
ஆன்றபே ருலகுளோ ரறைதன் முன்னம்யான்
வான்றொடர் குவன் என மறித்துங் கூறுவான். ()

வேறு

எல்லைநம் மிறுதி யாய்க்க
மெந்தைக்கும் யாவ ரேனுஞ்
சொல்லவுங் கூடுங் கேட்டாற்
றுஞ்சவு மடுக்குங் கண்ட

வில்லியு மிளைய கோவும்
வீவது திண்ண மச்சொல்
மல்லனீ ரயோத்தி புக்கால்
வாழ்வரோ பாதன் மற்றோர். (346)

பாதனும் பின்னு ளோனும்
பயங்கெடுத் தவரு மூரும்
சாதமே முடிவர் கெட்டேன்
சனகியென் றுலகஞ் சாற்றும்
விரதமா தவத்தின் மிக்க
விளக்கினு லுலகத் தியார்க்கும்
கரைதெரி விலாத துன்பம்
விளைந்தவா வெனக்க லுழ்ந்தான். (347)

இவைகளைக் கேட்ட அனுமான் திரிலோசத்திலும் ஒரு பக்கமும் தேடினேயில்லை. மேலும்,

வேறு

நாடுத லேநல மின்னு நாடியத்
தோடலர் குழலிதன் 'றுயரிற் சென்றமர்
வீடிய சடாயுவைப் போல வீடுதல்
பாடவ மல்லது பழியிற் றுமென்றான் (348)

என்றதுங் கேட்டன னெருவை வேந்தன்றன்
பின்றுணை யாகிய பிழைப்பில் வாய்மையான்
பொன்றின னென்றசொல் புலப்பு நெஞ்சினன்
குன்றென நடந்தவர்க் குறுகன் மேயினன். (349)

அனுமான் உரைத்த வாசகங்கள் செவியிற் பட்ட சம்பாதி என்னும் கழுகின்வேந்தன் புலம்பி மலையென வந்து வானர வீரர்களைக் கிட்டி, 'சடாயுவைக் கொல்ல

வல்ல பலவானாகிய ஒருவன் இப் புவியில் உளனே. இது என்ன வியப்பு !' என்று சொல்லினன். சம்பாதி வருவதைக் கண்ட வானரவீரர் யாவரும் அச்சங்கொண்டோடினர். அனுமான் ஒருவனும் துணிவோடு நின்று, 'வஞ்சகமாகிய வேடம் பூண்ட அரக்கனே, நீ என் கண் முன் வந்தும் உய்வையோ' என்று கூறி அவனை நோக்கினன்.

நோக்கின னின்றன னுணங்கு கேள்வியான்
வாக்கினு லொருமொழி வழங்க லாதமுன்
தாக்கருஞ் சடாயுவைத் தருக்கி னுயிர்
நீக்கினர் யாரது நிரப்பு வீரென்றான். (350)

உன்னைநீ யுள்ளவா றுரைப்பி னுற்றதை
பின்னையா னிரப்புதல் பிழைப்பின் றாகுமால்
என்னமா றுதியெதி ரெருவை வேந்தனும்
தன்னையாந் தன்மையைச் சாற்றன் மேயினான். ()

மின்பிறந் தாலென விளங்கெ யிற்றினாய்
என்பிறந் தார்க்கிடை யெய்த லாதவென்
பின்பிறந் தான்றனை பிரிந்த பேதையேன்
முன்பிறந் தேனென முடியக் கூறினான். (352)

கூறிய வாசகங் கேட்டுக் கோதிலான்
ஊறிய துன்பத்தி னுவரி யுட்புகா
ஏறின னுணர்த்தின னிகலி ராவணன்
வீறிய வாளிடை விளிந்த தாமென்றான். (353)

அனுமான் கூறிய வார்த்தைகளைக் கேட்ட சம்பாதி துன்பக்கடலுள் ஆழ்ந்து அனுமான் தேற்றத்தேறி 'அரக்கன் வாளை வீசுவதற்குக் காரணம் என்ன?' என்-

றனன். அனுமான், 'கொடியோனாகிய அரக்கன், இராம லக்குமணர் சானகியைப் பிரியும்படி செய்து, அப்பிராட்டியாரைத் தேரின்மேலேற்றிச் சென்றனன். அப்போது பிராட்டியார் புலம்பிய அழுகுரலைக் கேட்டு, நின் தம்பி விரைந்துசென்று போர்புரிந்து விண்ணுலகடைந்தனன்' என்று சொல்லி முடித்தனன். அதைக் கேட்ட சம்பாதி,

பைந்தா ரெங்க ளிராமன் பத்தினி
செந்தாள் வஞ்சி திறத்தி றந்தவன்
மைந்தா வெம்பி வரம்பில் சீர்த்தியோ
டுய்ந்தா னல்ல துலந்த துண்மையோ. (354)

சம்பாதி இவ்வாறு மனந்தேறி நீராடி, நீர்க்கடன் முடித்துக்கொண்டு வானரவீரரை நோக்கி,

வாழ்வித் தீரெனை மைந்தர் வந்துநீர்
ஆழ்வித் தீரலீர் துன்ப வாழிவாய்
கேள்வித் தீவினை கீறி னீரிருள்
போழ்வித் தீருரை பொய்யி னீங்கினீர். (355)

எல்லீ ரும்மவ் விராம நாமமே
சொல்லீர் சொல்லவெ னக்கோர் சோர்விலா
நல்லீ ரப்பய னண்ணு நல்லசொல்
வல்லீர் வாய்மை வளர்க்கு மாண்பினீர். (356)

என்றா னன்னது காண்டும் யாமெனா
நின்றார் நின்றுழி நீல மேனியான்
நன்றா நாம நவின்று நல்கினார்
வன்றோ ளான்சிறை வானந் தாயவே. (357)

சம்பாதிக்குப் பண்டு போல் சிறகு முளைத்து வானத்தை அளாவியது. வானரவீரர்கள் சம்பாதியை

நோக்கி, 'நின் வரலாற்றைக் கூறுக' எனலும், அவனும் கூறி முடித்தனன்.

வேறு

என்றலு மிராமன் றன்னை
யேத்தின னிறைஞ்சி யெந்தாய்
புன்றொழி லரக்கன் மற்றைத்
தேவியைக் கொண்டு போந்தான்
தென்றிசை யென்ன வுன்னித
தேடிநாம் வந்து மென்றார்
நன்றுநீர் வருந்தல் வேண்டா
நானிது நவில்வ லென்றான். (358)

பாகொன்று குதலை யாளைப்
பாதக வரக்கன் பற்றிப்
போகின்ற பொழுதுங் கண்டேன்
புக்கன னிலங்கை புக்கு
வேகின்ற வுள்ளத் தாளை
வெஞ்சிறை யகத்து வைத்தான்
ஏகுமின் காண்டி ராங்கே
யிருந்தன ளிறைவி யின்னும். (359)

எல்லீருஞ் சேற லென்ப
தெளிதன்றவ் விலங்கை மூதூர்
வல்லீரே லொருவ ரேகி
மறைந்தவ ணொழுகி வாய்மை
சொல்லீரே துயரை நீக்கித்
தோகையைத் தெருட்டி மீடிர்
அல்லீரே லென்சொற் றேறி
யுணர்த்துமி னழகற் கம்மா. (360)

காக்குந ரின்மை யாலக்
கழுகின முழுதுங் கன்றிச்
சேக்கைவிட் டிரியல் போகித்
திரிதரு மதனைத் தீர்ப்பான்
போக்கெனக் கடுத்த நண்பீர்
நல்லது புரிமி னென்று
மேக்குற விசையிற் சென்றான்
சிறையினால் விசும்பைப் போர்ப்பான். ()

மகேந்திரம்

வேறு

பொய்யுரை செய்யான் புள்ளர சென்றே புகலுற்றார்
கையுறை நெல்லித் தன்மையி னெல்லாங் கரைகண்டாம்
உய்யுரை பெற்றா நல்லவை யெல்லா முறவெண்ணிச்
செய்யுமி னென்றே செய்வகை நொய்திற் செயவல்லீர். ()

எருவைகட்கு வேந்தனாகிய சம்பாதி, பிராட்டியார் இருக்கும் இடத்தை வானர வீரர்கட்குச் சொல்லித் தன திருப்பிடம் சேர்ந்த பிறகு, வானர வீரர்கள் எல்லோரும், 'நம்முள் இக் கடலைக் கடக்க வல்லவர் யாருளர்?' என்று ஆலோசிக்கலாயினர். நீலன் முதலிய பெரிய வீரர்கள், தங்கட்குப் பாற்கடலைக் கடக்கும் ஆற்றல் இல்லை என்று சொல்லினர். அங்கதன், 'யான் கடலைக் கடந்து செல்வேன், ஆயினும் அங்கிருந்து மீளும் ஆற்றல் என்பால் இல்லை' என்று புகன்றனன். சாம்புவான், 'இலங்கையிற் சென்று பிராட்டியாரைக் கண்டு மீளும் வலி யில்லேன்' என்றனன். சாம்புவான் இவ்வாறு கூறி, 'இனிக் கடலைத் தாண்ட யாரை அனுப்புவோம்' என்று எண்ணுதல் புன்மையாம்.

ஆரியன் முன்னர்ப் போதுற வுற்ற வதனுனும்
காரிய மெண்ணிச் சோர்வற முற்றுங் கடனுனும்
மாருதி யொப்பார் வேறிலை யென்று வயன்மைந்தன்
சீரியன் பற்றே ளாண்மை தெரிப்பா னிவைசெப்பும்.()

நீதியி னின்றீர் வாய்மை யமைந்தீர் நினைவானும்
மாதர் நலம்பே ணாது வளர்ந்தீர் மறையெல்லாம்
ஓதி யுணர்ந்தீ ரூழி கடந்தீ ருலகீனும்
ஆதி யயன்றா னேயென யாரு மறைகின்றீர். (364)

ஏகுமி னேகி யெம்முயிர் நல்கி யிசைகொள்ளீர்
ஓகை கொணர்ந்தும் மன்னையு மின்னற் குறைவில்லாச்
சாகர முற்றுந் தாவிடு நீரிக் கடனூவும்
வேக மமைந்தீ ரென்று விரிஞ்சன் மகன்விட்டான். (365)

சாம்ப னியம்பத் தாழ்வத னத்தா மரைநாப்பண்
ஆம்பல் விரிந்தா லன்ன சிரிப்பா னறிவாளன்
கூம்ப லொடுஞ்சேர் கைக்கம லத்தன் குலமெல்லாம்
ஏம்பல் வரத்தன் சிந்தைதெ ரிப்பா னிவைசொன்னான்.()

வேறு

இலங்கையை யிடந்து வேரோ
டிவ்வயிற் றருகென் றாலும்
விலங்கினர் தம்மை யெல்லாம்
வேரொடும் விளிய நூறிப்
பொலங்குழை மயிலைக் கொண்டு
போதெனப் புகன்றிட் டாலும்
கலங்கலீ ருரைத்த மாற்ற
முடிக்குவல் கடிது காண்டிர். (367)

நீயிரே நினைவின் முன்னே
நெடுந்திரைப் பரவை யேழும்
தாயுல கனைத்தும் வென்று
தையலைத் தருதற் கொத்தீர்
போயிது புரிதி யென்று
புலமைதீர் புன்மை காண்டற்
கேயினி ரென்னி னென்னிற்
பிறந்தவர் யாவ ரின்னும். (368)

முற்றுநீ ருலக முற்றும்
விழுங்குவான் முழங்கி முந்நீர்
உற்றதே யெனினு மண்ட
முடைந்துபோ யுயர்ந்த தேனும்
இற்றைநும் மருளு மெங்கோ
னேவலு மிரண்டு பாலும்
கற்றைவார் சிறைக ளாகக்
கலுழனிற் கடப்பல் காண்டிர். (369)

ஈண்டினி துறையின் யானே
யெறிகட லிலங்கை யெய்தி
மீண்டிவண் வருதல் காறும்
விடைதம்மின் விரைவி னென்னு
ஆண்டவ ருவந்து வாழ்த்த
வலர்மழை யமரர் தூவச்
சேண்டொடர் சிமயத் தெய்வ
மகேந்திரத் தும்பர் சென்றான். (370)

பொருவரு வேலை தாவும்
புந்தியான் புவனந் தாய
பெருவடி வுயர்ந்த மாயோன்
மேக்குறப் பெயர்ந்த தாள்போல்

உருவறி வடிவ னும்ப
ரோங்கின னுவமை யாலும்
திருவடி யென்னுந் தன்மை
யாவர்க்குந் தெரிய நின்ருன். (371)

பின்னெடுங் கொண்ட ருளின்
வீக்கிய கழலி ஞர்ப்பத்
தன்னெடுந் தோற்றம் வானோர்
கட்புலத் தெல்லை தாவ
வன்னெடுஞ் சிகர கோடி
மகேந்திர மண்டஞ் தாங்கும்
பொன்னெடுந் தூணின் பாத
சிலையெனப் பொலிந்து நின்ருன். (372)

குறிப்புக்கள்

கம்ப ராமாயணம் :— கம்பரது ராமாயணம் அல்லது கம்பரால் செய்யப்பட்ட ராமாயணம் என விரியும். ராமாயணம் என்பது ராம + அயநம் என்னும் இரண்டு வட மொழி சேர்ந்து தீர்க்கசந்தி பெற்ற தொடர் மொழி. ராம என்பதனுக்குத் தனது நற்குண நற்செய்கைகளினாலும், திருமேனியழகினாலும் எல்லாரையும் ரமிக்கச் செய்பவன் (மகிழ்விப்பவன்) என்பதும், அயநம் என்பதனுக்கு அடைய அல்லது அறியக் கருவியா யுள்ளது என்பதும் பொருள். ஆகவே ராமனை அடைய அல்லது அறியக் கருவியாயுள்ள நூல், அல்லது ராமனுடைய குணாதிசயங்களைத் தெரிவிக்கும் நூல் என்பது திரண்ட பொருள். இதனைப் (1) பால காண்டம், (2) அயோத்தியா காண்டம், (3) ஆரணிய காண்டம், (4) கிஷ்கிந்தா காண்டம், (5) சுந்தர காண்டம், (6) யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களாக மகா கவியாகிய கம்பர் பாடி முடித்தனர். ஒட்டக்கூத்தர் பாடியதாகக் கூறும் உத்தர காண்டம் இராமாயணத்தின் பிற்பகுதியாகும்.

கம்பர் :— கவிச் சக்கரவர்த்தி என்று அறிவுடையோர் எல்லோரும் புகழ்ந்து போற்றும் கம்பர், சோழ நாட்டிலே திருவழுந்தூரிலே (a village 2 miles from Kuttalam Railway Station, Tanjore District.) உவச்சர் குலத்திலே ஆதித்தர் என்பவர்க்குப் புதல்வராகப் பிறந்தனர் என்ப. இவர் இராமாயணமேயன்றித் (1) திருக்கை வழக்கம், (2) சரஸ்வதியந்தாதி, (3) சடகோபரந்தாதி, (4) ஏரெழுபது முதலிய வேறு நூல்களும், அநேகம் தனிப்பாடல்களும் பாடி யிருப்பதாகத் தெரிகின்றது. இவர் இராமாயணம் பாடி அரங்கேற்றிய காலம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் என்று கூறுவர்

சரித்திர ஆராய்ச்சியாளர். இவருக்கு அம்பிகாபதி என்னும் புதல்வன் இருந்ததாகவும் தெரிகிறது. இவர் செல்வத்திற் சிறந்த சீமானாகிய திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளல் என்பவரால் பெரிதும் ஆதரிக்கப்பெற்றவர். கம்பர் இவ் வள்ளலைத் தாம் பாடிய இராமாயணத்தில் பத்துச் செய்யுட்களில் வியந்து கூறியிருக்கின்றனர். இவரது ராமாயணம் பெரும்பான்மையும், வடமொழியிலுள்ள வான்மீகி இராமாயணத்தைத் தழுவிய வழி நூலாகும்.

கிஷ்கிந்தா காண்டம் :— இது கிஷ்கிந்தா + காண்டம் என்னும், இரண்டு வட மொழிகளினாலாகிய ஒரு தொடர் மொழி. இது கிட்கிந்தா காண்டம் எனத் தமிழில் வழங்கும். கிட்கிந்தையில் நிகழ்ந்த செய்தியை உணர்த்தும் பாகம் என விரிதலால், உருபும் பயனும் உடன் தொக்க ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில் இரு சொல் ஒரு சந்தியாய் நின்றன. கிஷ்கிந்தையினது சம்பந்தமான காண்டம் என ஆறும் வேற்றுமையாகவும் கிஷ்கிந்தையைப் பற்றிய காண்டம் என இரண்டனுருபும் பொருளும் தொக்க தொகை யெனினும் இழுக்காது.

கிஷ்கிந்தம் என்பது ஒரு மலை. அம் மலையைச்சார்ந்த நாடு அப் பெயர் பெற்றது. அந்நாட்டின் பிரதான பட்டணத்திற்கும் கிஷ்கிந்தை என்று பெயர். இது வானர அரசர்களாய வாலி சுக்கிரீவர்கட்குத் தலைநகராய் விளங்கியது. கிட்கிந்தை என்பது பல்லாரி ஜில்லாவிலுள்ள ஹோஸ்பேட்டை (Hospet) என்னும் ரெயில்வே ஸ்டேஷனுக்கு 7 மைல் தூரத்திலுள்ள ஹம்பி (Hampi) என்று சரித்திர ஆராய்ச்சியாளர் தீர்மானித்திருக்கின்றனர். இந் நகரத்தின் விரிவை (Hampi Ruins by A. N. Longhurst) என்பவரால் எழுதப் பெற்று கவர்ன்மெண்டார் 1907-ஆம் வருடம் வெளியிட்டிருக்கும் புத்தகத்தில் பரக்கக் காணலாம். தெலுங்கு மன்னர்களாகிய விஜயநகரத்து அரசர்கட்குத் தலைநகராய் விளங்கியதும் இக் கிட்கிந்தையே.

பம்பைப் பொய்கையின் வருணனை

1. தேன்படி - தேன் தங்கிய ; வேங்கைமா - வேங்கையாகிய மிருகம் அல்லது வேங்கையும் (புலி) மாவும் (யானை) ; மீன்படி மேகமும்படிந்து-மின்னல் தங்கும் மேகங்களும் படிய ; வேலைநீர் - கடல்நீர்.

2. ஓதநீர் - கடல் ; வேதபாரகர் - வேதங்களை கண்டார் ; சீதம் - குளிர்ச்சி ; காதிகாதலன் - காதியின் மகனாகிய கோசிகன்.

3. நாகர்களது, சூரியன் ஒளியின் மேம்பட்ட இருக்கையாகிய, பாதலம் ஈது என்று கூறவல்ல தன்மையது என்பது முதலடியின் பொருள் ; காட்சி - தோற்றம்; தோன்றல் சான்றது - விளங்குதலமைந்தது ; வேண்டுவார் வேண்டுவன நல்கும் தன்மை உடைமையின் கற்பகத்தோடு கவிஞருக்கும் சொற் பொருளின் ஆழம் அறிய மாட்டாமையின் அதனைப் பொய்கையின் ஆழத்திற்கும் உவமை கூறினர்.

4. களிப்படா மனத்தவன் - மனக்களிப்பில்லாத இறைவன் ; கற்பெனும் கிளிப்படா மொழியவள் - கற்புருக் கொண்டதென்னும், கிளியின்பாலும்தோன்றாத, இன் சொல்லையுடைய சனகி ; ஒளிப்படாது - கண்ணுக்குப் புலனாகாது ; பூரியர் - கல்லாதவர் அல்லது கீழோர் ;

5. ஓர்கில கிளவிகள் - ஆராய்ந்து அறிதற்கரிய சொற்கள்.

சீராமன் பொய்கையின்கண் உள்ள அன்னம் முதலியவற்றைக் கண்டு புலம்பல்

6. கன்னி அன்னம் - இளமையாகிய அன்னம் ; தளிரியல் - தளிர்போன்ற மேனியையுடைய சீதை (அன்மொழித் தொகை).

7. பொன்பால் பொருவும்-பொன்னின் பகுதிபோலும்; விரை அல்லி - மணமிக்க அகவிதழ்; பொலந்தாது - பொன்னிறத்த மகரந்தம்; தமிழ்ப் பாட்டு - இனிமையாகிய பாட்டு, இதனைத் தமிழ் தழிய சாயலவர்தங்கு மலர்த்தூணீர் (சிந்தாமணி 2026 பாட்டு) என்னும் வரிக்கு இனிமை தழுவிய சாயலையுடையவர் என்று நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் உரையால் உணர்க; ஒளிப்பார் - கரவுடையவர்.

8. அயாவுயிர்க்கின்றவன் - வருந்தாநிற்பவன்; வாவி - குளம்; யான் பொன்ற - யான் மனம்வருந்த.

சீராமனும் இலக்குவனும் சீதையைத் தேடிச் செல்லல்

9. காலையே கடிதவா - சூரியன் உதயமாக; கடல்கவினும் சோலை-சமுத்திரம்போன்ற அழகிய சோலைகள்; அகல் நாடர் - கோசல நாட்டை யுடையவர்களான இராம லக்குவர்; மான் - சீதை.

இராமலக்குவர் வருகையைக் கண்டு சுக்கிரீவன் வெருவுதல்

10. எய்தினர் - இருசிய சிருங்க டருவதத்தை யடைந்து, சவரிநெடி தேய மால்வரை எளிதின் நொய்தின் எறினர் - சவரிசால எவிய திருமால் போலுங் குவடுகளையுடைய அம்மலையை எளிதாக விரைவின் எறினர்; கவியரசு - சுக்கிரீவன்; மலைமுழை - மலைக்குகை.

11. காலின் மாமதலை-காற்றின் பெருமையாகிய மகனே; கறுவுடைய வாலி - நம்பால் வைரமுள்ள வாலி; நீதியாய் - நீதியை நன்கறிந்தவனே; மூலமோர்கிலர் - காரணமறியாது.

அனுமான், அஞ்சிய வானரர்களைத் தேற்றல்

12. அவ்வானர வீரர்கள் மனங்கலங்கி நெஞ்சமஞ்சி யழுகின்ற அளவில், கொடிய ஆலவிடத்தினைக் கண்டு தேவரும் அசுரரும் மனமயங்க, அப் பயம் நீங்கும்படி தனியேநின்று உதவிய தாழ்ந்த சடையையுடைய சிவபெருமானே போல் 'இவ்விடத்தில் சுகமாயிருங்கள் அஞ்சவேண்டாம்' என்று தேறுதல் கூறினன் அநுமான் என்பது பொருள்.

அனுமான் மாணவப் படிவந்தாங்கி இராமலக்குவரை அணுகி அவரைப்பற்றி நுணுகி ஆராய்தல்

13. அஞ்சனைக் கொரு சிறுவன் - அஞ்சனையின் ஒப்பற்ற மகனாகிய அனுமான்; அஞ்சனக் கிரியனைய மஞ்சன் - நீலமலை யொத்த வீரனாகிய ஸ்ரீராமன்; மாணவப் படிவம் - பிரமசாரியாகிய வேடம்; நெஞ்சயிர்த்து - மனத்து ஐய மெய்தி; கற்பினில் - கல்வியறிவால்; மைந்தன் என்பது மஞ்சன் எனப் போலியாயிற்று.

14. மூரிவிற்கரர் - வலியமைந்த வில்லேந்திய கையை யுடையவர்; இவர் நிலைமை கேவலத்துத் தேர்வது எக்கிழமை கொடு - இவர் தன்மையை எளிதின் ஆராய்வது எவ்வகையால்; யாவர், யாது என்னும் வினாவினைக் குறிப்பு முற்றுக்கள் ஈண்டு இன்மை குறித்து நின்றன.

15. சிறிது துயர் சேர்வுற - சிறிது துன்பம் வந்தடைய; தெருமரலின் - அத் துன்பத்தால் வருந்துதலின்; அயிர்த்தனர் - சோர்வுற்றவர்; சிறியரலர் - எளியவர்களல்லர்; மானுடப் படிவர் - மானுட யாக்கையை யுடையவர்; மயர் - மயங்கத்தக்க.

16. தருமமும் தகையும் - அறத்தையும் ஒழுக்கத்தையும்; தனமெனுந் தகையர் - பொருளாகக் கருதுகின்ற

தன்மையை யுடையவர் ; இவர் கருமம் - இவர் வந்தெய்திய காரியம் ; அது - அக் கருமம் ; அருமருந்தனையது - கிடைப்பதரிதாகிய அமிழ்தம் ஒப்பது ; நெடிது துருவுகின்றனர் - மிகுதியும் தேடுகின்றனர்.

17. கதம் - சினம் ; இதம் - நன்மை ; சதமன் - இந்திரன் ; தருமன் - அறக்கடவுள் ; மதனன் - மன்மதன் ; மறலி- யமன் ; சதமகன் என்பது சதமன் என இடைக் குறைந்து நின்றது ; தோற்றத்தால் இந்திரனையும், ஒழுக்கத்தால் அறக்கடவுளையும், வடிவழகால் மன்மதனையும் வன்மையால் இயமனையும் நாணச் செய்யத் தக்கார் என்பது கருத்து.

அனுமான் இராமலக்குவரைக் கண்டு அன்புடன் அவர்க்கு எதிர்ப்படல்

18. என்பன பலவும் - தேவருக்கு ஒருதலை வராமுதற் றேவர் என்பன போல்வனவாகிய பலவும் ; இருவர்- இறையவனும் இளையவனும் ; எய்த நோக்கி - உற்று நோக்கி (i. e.) நன்றாகக்கண்டு ; ஆர்வத்தோரை - அன்புடையாரை ; முன் பிரிந்து - (அன்புடையாரை) முன் ஒருகாற் பிரிந்து ; முன்னிஞன் என்ன - மீண்டும் எதிர்ந்து கண்டாரேபோல் ; நின்றான் - (அன்புகொண்டு) நின்றனன்.

அனுமான் மீட்டும் எண்ணுதல்

19. மணிநிறத்து இவர்கள்-மணிபோலும் அல்லது அழகிய திருநிறத்தையுடைய இவர்கள் ; எயில் வருத்து - மதில்போல் வருத்து ; எய்துகின்ற - அடைகின்றன ; பயில்வுற - நெருங்க ; பயப்பய - மெல்லென.

20. காயெரி கனலும் கற்கள் - காய்கின்ற தீக்கனல்போற் சுடுகின்ற பருக்கைக் கற்கள் ; குழைந்து - மெலிந்து ; தாழ்வபோல் - வணங்குவனபோல் ; தருமமாவார் - அறக்கடவு ளாவார்கள்.

21. துன்பு - பிறவித்துயரம் ; தென்புலத்தன்றி - தென் திசைக் கண்ணதாகிய யமலோகத் தல்லாமல் ; மீளா நெறி - மீண்டுவருத லில்லாத மோக்ஷலோகம்; இவர் கின்றது அளவில் காதல் - அளவில்லாத ஆசை பெருகுகின்றது ; அன்பினுக் கவதியில்லை - அன்பி னுக்கு எல்லையே இல்லை. அடைவு - இவ்வாறு தோன்றுகிற நிமித்தம் அறிதல் ; தேற்றேன் - அறிய மாட்டாதவனா யிருக்கின்றேன்.

அனுமான் இராமலக்குவரைச் சந்திக்க இராமன் அவனை வினவுதல்

22. இவ்வழி எண்ணி - இவ்வாறு நினைந்து ; செவ்வழி யுள்ளத்தானும் - ஞானவொழுக்கத்தில் மனத்தினை நிறுத்தும் அனுமானும் ; தெரிவுற - (அவர்கள்) தம் மைக் காணுமாறு ; நுங்கள் வரவு கவ்வையின்றாக - நுங்கள் வருகை பழியில்லாத நல்வரவாகக் கடவது ; கருணையோன் - யாவர் மாட்டும் பேரருளுடையோ னாகிய இறைவன் (சீராமன்) ; எவ்வழி நீங்கியோய் - யாண்டிருந்து வந்தனை.

அனுமான் விடை

23. மஞ்செனத் திரண்ட - கார்மேகம்போலச் சமைந்த ; தேம்பா - வருந்துதல் செய்யாத ; காற்றின் வேந்தன்- வாயுபகவான்.

24. இம்மலை - இந்த இருசியமுக பருவதம்; எரிகதிர்ப் பரிதிச் செல்வன் செம்மல் - வெப்பமாகிய கிரணங்களையுடைய சூரியன்மகனாகிய சுக்கிரீவன்; தேவ- இறைவனே; வினவிய - விசாரிக்க.

சீராமன் அனுமானைப்பற்றி இலக்குவனிடங் கூறல்

25. வரிசிலைக் குரிசின் மைந்தன் - சக்கரவர்த்தித் திருமகனாகிய சீராமன்; தேற்றமுற்று - ஆராய்ந்து தெளிந்து; இவனினுங்குச் செவ்வியோர் - இவனைக் காட்டிலும் செம்மையாகிய குணமுடையோர்; ஆற்றலும் நிறைவுங் கல்வி யமைதியும் அறிவும்-வன்மையும் அடக்கமும் நூற்கல்வியினமைவும், மெய்யுணர்ச்சியும்; வேற்றுமை இவனோடில்லையாமென- வேறுபாடு இவனோடு மில்லையாமென்று (i. e.) இவை எல்லாம் இவன்பால் நிரம்பியுள்ளன என்பதாம்.

26. இளையவீர - இலக்குவனே; இசைகள்கூர - புகழ் அதிகப்பட; கல்லாத கலையும் - ஆராயாத கலைகளையும்; சொல்லின் செல்வன் - சொல்லும் சொல்விற் சதுரப்பாடுடையவன்; அனுமான் கல்லாத நூல்கள் தான் உலகத்தில் இல்லாதது எனவே உலகில் உள்ள நூல்களை யெல்லாம் அனுமான் ஆராய்ந் தறிந்திருக்கின்றான் என்பது கருத்து.

சீராமன அனுமானை நோக்கிச் சுக்கிரீவன் யாண்டுளன் என்று வினவுதல்

27. எவ்வழியிருந்தான் - யாண்டிருக்கின்றனன்; சொற்ற- உன்னால் கூறப்பட்ட; அவ்வழி - அங்கே; காணும் அருத்தி - காணவேண்டும் என்னும் ஆசை; இன்சொலன்ன செவ்வழி யுள்ளத்தோனை-இன்சொற்போன்ற நல்வழியிற் செல்லும் மனத்தினையுடைய சுக்கிரீவனை-

அனுமான் விடை பகர்தல்

28 இரவிதன் புதல்வன் - சுக்கிரீவன் ; இந்திரன் புதல்வன் - வாலி ; பரிவிலன் - இரக்கமில்லாதவன் ; பருவரல் - துன்பம் ; குன்று - இருசியமுக பர்வதம் ; செல்வம் வருவதோர் அமைவில் - செல்வம் வந்தடைவதாகிய தன்மையின்.

அனுமான் 'நும்மை யாரெனத் தெரிவிப்பது' என வினவ இலக்குவன் விடை பகர்தல்

29. எங்குலத்தலைவன் - எங்குலத்தரசனாகிய சுக்கிரீவனுக்கு ; மெய்ம்மையின் வேலிபோல்வான் - மெய்யாகிய பயிர்க்கு வேலியொப்பானாகிய அனுமான் ; வார்கழலிளையவீரன் - நீண்ட கழலையணிந்த இளையோன் (இலக்குவன்) ; மரபுளி - முறையால்.

30. புயல் தருமதம் - மேகம் போலும் மதம் ; புகர்மலை - புள்ளியினையுடைய மலையாகிய யானை ; இயல் தரு புலமை - இயல்பாக அமைந்த புலமையும் ; அயோத்தி வேந்தன் - தசரதன்.

31. அன்னவன் - தசரதன் ; ஆண்டகை - புருடரிற் சிறந்தோன் ; அன்னை - கைகேயி ; தகையினல்கி - அன்பினுதவி ; சிலைவலான் - இராமன் ; ஏவல் செய்யடியன் யானே என்பதை 'தம்பி என்னும்படி யன்று அடியாரின் ஏவல் செய்தி' என்னும் அயோத்தியா காண்டச் செய்யுளோடு ஒப்பிடுக. யான் - இலக்குவன் ; ஆண்டகை ஏழாவதன் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

அனுமான் இராமனை வணங்குதல்

32. அவன் தோற்றம் - அவன் திரு அவதாரம் ; புகுந்தன பொருள்கள் - நடந்த செய்திகள் ; காலின் மைந்தன் - அனுமான் ; நெடியவன் - சீராமன்.

அனுமான் பெரிய வானர வுருக்கோள்ளுதல்

33. *மின்னுருக்கொண்ட வில்லோர்-மின்னல்போற்பிரகாசிக்கும் விற்களையுடைய இராமனும் இலக்குவனும்; வேதநன்னூல் பெருமையாம் உருக்கொண்டது என்னும் பொருளும் - வேதமாகிய நன்னூற்களால்பெரிய வடிவங்கொண்டதென்று சொல்லப்படும் பொருளும் அல்லது வேதங்களும் நன்னூற்களுமே ஓர் உருக்கொண்டது என்று சொல்லப்படும் பொருளும்; தன் உருக்கொண்டு-தன்(அனுமான்) இயற்கையானபெரிய வடிவங்கொண்டு; தருமத்தின் தனிமை தீர்ப்பான் - தருமத்தின் தனிமையைத் தீர்க்கவந்த அனுமான்.*

அனுமான் கோண்ட தோற்றத்தின் சிறப்பு

34. *உலகமூன்றும் காலினாற் கடந்து கொண்ட புண்டரீகக்கண் ஆழிப் புரவலன் - உலகமூன்றினையும் காலினாற் கடந்துகொண்ட செந்தாமரைக்கண்ணையும், சக்கரத்தையும், காத்தற் றொழிலையுமுடைய இறைவன்; புண்டரீகாக்ஷன் என்பதுபற்றி புண்டரீகக் கண் என்றும், சக்கிரி என்பதுபற்றி 'ஆழியான்' என்றும், காத்தற்றொழிலுடைமையின் 'புரவலன்' என்றும் கூறினார். 'பொலங்கொள் சோதிகுண்டலம்,- பொன்னாற் சமைந்த வொளியையுடைய குண்டலம்; பண்டைநூல் - பழமையாகிய இலக்கணநூல்; கதிரோன் - ஞாயிறு; படிவம் - விஸ்வரூபம்; இது கவிக்கூற்று.*

சீராமன் அனுமானைப்பற்றி இலக்குவனிடம் வியந்து கூறல்

35. *கமலமன்ன தடங்கணான்-சீராமன்; தம்பி-இலக்குவன்; கேட்படாநின்ற - கேழ்ப்பட்ட குணங்களை; கிளர்படா*

தாகி - எஞ்ஞான்றும் கிளர்ச்சி குறையாதாகி ; நவை படா ஞானம் - விபரீத சந்தேகங்களாகிய குற்றங்கள் ஒழிந்த மெய்யுணர்ச்சி ; கோட்படாப் பதம் - கொள்ளப்படாத பரமபதம்.

சீராமன் அனுமானைப் பெற்றமைக்கு உவத்தல்

36. நிமித்தம் - உபாயம் ; நம்பி - அநுமான் ; கவிக்குலக் குரிசில் வீரன்-குரங்குக் கூட்டங்கட்கு இறைவனாகிய சுக்கிரீவன் ; சொல்லினால் ஏவல் செய்வான் - சொல் வழியே நின்று ஏவல் செய்பவன்; அவன்-சுக்கிரீவன்.

அனுமான் இராமலக்குவர் ஆற்றலைச் சுக்கிரீவனுக்குச் சொல்லுதல்

37. மண்ணுலகத்தாரினும் விண்ணுலகத்தாரினும் நாக லோகத்தாரினும் விசேடமானவராக மதிக்கப்பட்டவராகி, வாழ்பவராகிய அவரினும், நற்குணமுடையாரும் புகழுடையாருமாகிய அவர்கள் கண்ணிலிருப்பாரும் ஆயினர் ; பகைமையுடையார்பால் சாலப் புண்ணே போல் வருத்துதலை உடையார்; அருமையாகிய உயிர்கட்கு அமுதமே போல்பவராவர் என்பது பொருள்.

38. சூழி-நெற்றிப்பட்டம் ; யானையார் - யானைப்படையை யுடைய அரசர் அல்லது யானையைப் போன்ற தோற்றத்தை யுடைய அரசர் ; பாழி - வல்லமை ; ஆழியான் - சக்கரவர்த்தி.

39. நீதியார் - நீதியை யுடையவர் ; கருணையின் நெறியினர் - அருள்வழி யொழுகுபவர் ; பேதியா நிலைமையார் - மாறுபடுதல் இல்லாத நிலைமையினையுடையவர் ; போதியாது அளவிலா உணர்வினர் - இயல்பாகவே யமைந்த அளவிடப்படாத அறிவினையுடையவர் ; காதிசேய் - கோசிகமுனி ; கடவுள் வெம் படை - தெய்வப் படைகள்.

40. காவலா, காய மானுயினுன் ஆயமானுகர் தாழ் ஆழி-யானேயலால் யாவனே ; நீ அமான் ஒர்தியால் நிருத மாரீசன் நார் மாயமானுயினுன் (னுக்கு) மாய-மானுயினுன் என்று கூட்டிப் பொருளுரைக்க. அர-சனே, மானிடப் படிவங் கொண்டடைந்த இராமன் அந்தப் பெரிய தேவர்களால் வணங்கப்படுகின்ற சக்கரத்தை யணிந்தவனே யல்லது வேறியாவான். நீ அந்தப் பெரியோனை ஆராய்ந்துபார் அரக்கனுகிய மாரீசன் அன்பின்றி மான்வடிவங் கொண்டானுக்குப் பெரிய கூற்றுவனுகத் தோன்றினுன் என்பது பொருள் ; காவலன் - சுக்கிரீவன் ; காயம்மான் - மானிடப் படிவம் ; மாயமானுயினுனுக்கு மா யமான் ஆயினுன். யமான் என்பது நீட்டல் விகாரம்.

இராமலக்குவர் சுக்கிரீவனைக் காண விரும்புதலை அனுமான் அவனிடம் பகர்தல்

41. மாயையால் - வஞ்சனையால் ; நிருதர்கோன் - இரா வணன் ; மனைவி - சீதை ; நெடுமனத் தூய்மையா-வுடைமையால் - நீண்டமனம் பரிசுத்தமாக இருப்-பதனுல் ; உறவினை - உன்னோடு நட்புக்கோடலை.

சுக்கிரீவன் சீராமனைக் காணுதல்

42. கதிரவன் சிறுவன் - சுக்கிரீவன் ; கோலவதனம் - அழகிய முகம் ; குளிர்ந்த கண்ணும் - கருணை பொழியுங் கண்ணும் ; திங்கள் மண்டலம் - சந்திர மண்டலம் ; திங்கள் மண்டலம் முகத்திற்குவமை ; மரகதக்கிரி - திருமேனிக்கு உவமை.

சுக்கிரீவன் இராமலக்குவரைப்பற்றி எண்ணுதல்

43. நோக்கினுன் - பார்த்து ; நெடிது - நெடும் பொழுது ; சொடிவரும் - சொல்லுதற்கரிய ; ஆக்கிய உலகம் -

படைத்த உலகம் ; அன்றுதொட் டின்றுகாறும்-சிருஷ்டிகாலந் தொடங்கி இற்றை நாள்வரையும் ; புரிந்த பாக்கிய மெல்லாம் - பண்ணிய, நல்வினை யெல்லாம் ; வீராய் விளைந்த - வீராகத் தோன்றின ; நோக்கினுன் நின்றான் எச்சமுற்று.

44. ஆறுகொள் சடிலத்தான் - சிவன் ; மானிடம் வென்ற தன்றே தேறினன் - இம் மானிடப் பிறப்பு வென்றி கொண்ட தல்லவா என்று துணிந்தனன்.

இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் உண்டான சிநேகிதத்தின் வருணனை

45. தவாவலி - அழியாத ஆற்றல் ; தகா இருட் பகைமை-தகுதியில்லாத இருட்டாகிய பகைமை ; குவாலறம்-அறத்தின் கூட்டம் ; அனகன் - சீராமன் ; உவாவுற-அமாவாசை வர ; அரியின் வேந்து - சுக்கிரீவன் ; உடுபதி - சந்திரன், இரவி - சூரியன் ; உடுபதி இரவி-ஒத்தாரென்றமையால், ஞாயிறுபோன்ற இராமன் முன் உடுபதி போன்ற சுக்கிரீவன் அடங்கியிருத்தலைக் குறிப்பித்தா ரெனலும் ஒன்று.

சுக்கிரீவன் சீராமனை நோக்கிப் புகலுதல்

46. ஆயதோரவதி - இவ்வாறு கட்டுக்கொண்டிருந்த காலையில் ; அருக்கன்சேய் - சுக்கிரீவன் ; அரசு-சீராமன் ; தீவினைதீய - தீவினைதீர ; செல்வ - செல்வங்கட்கெல்லாந் தலைமையுடையவனே ; மேயினன்-அடைந்தேன் ; மேவலாகாது - பொருந்தாதது.

சீராமன் அங்கே வந்தமைக்குக் காரணங் கூறல்

47. மையறு-குற்றமற்ற; கையறு துயரம்-பெருந்துன்பம்; கடப்பது - நீங்குவது ; அரிக்குலத்தரசன் - சுக்கிரீவன்

சீராமன் சுக்கிரீவனுக்கு அபயமளித்தல்

48. குரக்குவேந்தன் - சுக்கிரீவன் ; உன்றனக்குரிய இன்ப துன்பங்கள் உள்ள - உனக்குரியதாகிய இன்ப துன்பங்களுள் உள்ளனவற்றுள் ; முன்னாள் - என்னொடு நட்புக்கொண்டதற்கு முன்னாளிற் ; மொழியுநேரா - உறுதிமொழியுங் கொடுத்து.

49. இனி உரைப்பது மற்றென் - இனிக் கூறத் தகுவது வேறென் ; செற்றவர் - பகைத்தவர் ; உற்றவர் - நட்புக் கொண்டவர்.

எல்லோரும் சோலையைச் சார்தல்

50. இருவர் - இராமலக்குவர் ; அரிகள் ஏறு - குரங்குகட்குள் சிங்கம் போன்ற அனுமான் ; ஊகம் - குரங்கு; நாகம்-புன்னை மரங்கள் ; நளின வாவிகள் - தாமரைத் தடாகங்கள் ; எசும் - இகழும்.

சோலையின் சிறப்பு

51. அயர்வில் கேள்வி - தளர்ச்சியில்லாத நூற்கேள்வி ; அறிஞர் வேலை - அறிவுடையார் கூட்டம் ; பயில் வில் கேள்வியார்-பழகுதல் இல்லாத கல்வியை யுடையார் ; பொலிவில் பான்மை - சிறப்படையாத தன்மை ; குயிலும்-பதித்த ; கல்வி கேள்விகளையுடைய அறிஞர் முன் கல்லாதார் பொலிவெய்தாமைபோல மணிநிறக் கூட்டத் தொளியால் வெயிலும் வெண்மதியும் மேம்படாமை உணர்த்திற்று.

சீராமனும் சுக்கிரீவனும் பூஞ்சேக்கையிலிருந்து அளவளாவல்

52. எய - பொருந்திய ; மைந்தர் - இராமலக்குவர் ; கவியின் வேந்தன் - வானர அரசன் ; பூவணை-பூக்களாலாய படுக்கை ; அளவளாவுவார் - மனங்கலந்து உசாவுவாராயினர்.

சீராமன் நீராடி விருந்துண்ணல்

53. கந்தம் - கிழங்கு ; புனிதன் - பரிசுத்தனாகிய சீராமன் ; மஞ்சனத் தொழில் புரிந்து - நீராடல் செய்து.

சுக்கிரீவனுக்கும், வாலிக்கும் நேர்ந்த பகைமையை அனுமான் கூறுதல்

54. வணங்கி - அடி வணங்கி ; உணங்கி-மனவாட்டமுற்று; உன் வழி - நீ சென்ற வழியிலே ; படர - செல்ல ; இணங்க ரின்மைபால் - இணங்குதல் இல்லாமையால் (சம்மத மில்லாமையால்) இணங்கல் என்பதனுக்கு இணங்கர் என்பது போலி.

55. ஆணை அஞ்சி - கட்டளைக்குப் பயந்து ; நவை-குற்றம்; நல்குவாய் - பொறுத்தருள்க ; கோணினன் - மனங் கோணிய வாலி.

56. அடல் கடந்த - பகைவரை வெற்றி கொண்ட ; உடல் கடைந்தனன் - உடலைக் குத்தினன் ; உலைந்தனன் - வருந்தினன்.

57. எயில் - அண்டச் சுவர் ; கவலையொன்றிலான் - கவலையே சிறிதும் இல்லாதவனாகிய வாலி ; கால்கள் தாயென - காற்றுச் சென்றாற்போல ; அவனி வேலை-பூமியைச் சூழ்ந்த கடல்; அரியின் - நிலங் கடந்த நெடுமுடி யண்ணலைப் போல.

58. உரிமை-சுக்கிரீவன் மனைவி; இருமை-இரண்டு, ஈண்டு செல்வமும், மனைவியும் ; கருமம் - நடந்த செய்தி ; கடவுள் - எப் பொருளையுங் கடந்து நின்றவன்.

சீராமன் சினங்கொள்ளல்

59. பொய் யிலாதவன் - பொய் மொழி பேசாத சுக்கிரீவன் ; ஐயன் - எவர்க்குந் தந்தை; ஆயிரம் பெயருடை

அமலர்க்கு அமலன் - ஆயிரம் பெயரை யுடைய, பரி சுத்தர்க்கெல்லாம் பரிசுத்தனான இறைவன்; வையம் நுங்கிய வாய் - உலகமுண்ட வாய்.

60. ஈரம் நீங்கிய - அன்பு இல்லாத; ஆரம் வீங்கு தோள் - சந்தன மணிந்த பருத்த தோள்; பரிவிலன் - அன் பில்லாதவன்; தரிக்குமாறு - பொறுக்குமாறு.

61. விலகுமென்னினும் - விலக்கும் (தடுக்கும்) என்னி னும்; விலக்கும் என்னும் பிறவினை தன்வினை போல் நின்றது; வில்லிடை வாளி-வில்லிற் பூட்டிய அம்பு; தலைமை - அரசாட்சி; புலமையோய் - மெய்யறி வுடையவனே.

இராமன் கூறியதைக்கேட்ட சுக்கிரீவன் மகிழ்ச்சியும் ஆலோசனையும்

62. பேர் உவகைக் கடல் எழுந்து பெருந் திரை யிரைப்ப எனவும் இயைக்க; இனி வாலி தன் வலி விழுந்ததே யென விரும்பா என இயைக்க; மொழிந்த வீரன் - இராமன்; யாம் எண்ணுவது - யாம் எண்ணத் தக்கது. (*i-e.*) இவன் வெல்லுவனோ வெல்லானோ என்பது; மொழிந்தான் - சுக்கிரீவன் பகர்ந்தனன்.

சீராமன் ஆற்றலை அனுமானித்த சுக்கிரீவனுக்கு அனுமான் கூறல்

63. தடக்கையில் தாளில் சங்கு சக்கரக் குறியுள இத்தனை யிலக்கணம் எங்கும் யாவர்க்கும் இல்லை என இயைக்க. எங்கும் - எவ்விடத்தும்; ஏகாரம் - தேற்றம், உம்மை யிரண்டும் முற்றுப் பொருளன.

64. செறுக்கும் - வருத்தும்; சினவிக் கறுக்கும் - மிகவும் கோபிக்கும்; வெஞ் சினக் காலன் - கடிய கோபத்தை யுடைய யமன்; காலால் அறுக்கும்-காலால் ஒழித்த; புங்கவன் - உருத்திரன்; ஆடகத்தனிவில் - பொன் மயமான ஒப்பற்ற வில்; இறுக்கும் தன்மை-முறிக்குந் தன்மை.

65. என்னை யீன்றவன் - என்னைப் பெற்ற காற்றுக் கடவுள்; இவ்வுலகு யாவையும் ஈன்றான் தன்னை ஈன்றவற்கு - பிரமனைப் படைத்த விஷ்ணுமூர்த்திக்கு; அடிமை செய் - குற்றேவலைச் செய் என்று (எனக்குக் கட்டளையிட்டான்); தவம் அஃதே - அதுவே நற்றவமாகும்; ஐயா - (குழந்தையாகிய) அனுமானே (இவ்வாறு செய்தால்); உன்னை ஈன்ற எற்கு உறுபதம் உளது - உன்னைப் பெற்றெடுத்த எனக்கு அதனாற் சிறந்த கதி கிடைக்கும்; இன்ன தோன்றலே அவன் - இவ் விராமனே அப் பரம்பொருள்; ஏது - காரணம்.

66. முன்பு தோன்றலை அறிதற்கு முடிவென் என் றியம்ப எவர்க்கும் துன்புதோன்றிய பொழுதுடன் தோன்றுவன் அன்பு சான்றென உரைத்தனன் என இயைத்துப் பொருள் கொள்க; முன்பு தோன்றலை-முற்காலத்துத் தோன்றிய பரம்பொருளை; முடிவு-உபாயம்,என்-யாது; எவர்க்கும் - அறிவினிற் கீழானோர்க்கும்; அன்பு சான்றென உரைத்தனன் - (அவனைக் காண்டலும்) உனக்கன்பு மீதூரும் அதுவே சாக்ஷி எனச் கூறினன்; எனிற் பிறிதெவனோ - என்று கூறின் வேறு சாக்ஷி அதற்கு என்னையோ. இன்ன பருவம், சாதி, மரபு முதலியன நாடாது தன்பால் அன்புடையார் யாவரேனும் அவர்க்கு அருளுதற்குத் தோன்றுகின்றமையின் 'துன்புதோன்றிய பொழுதுடன் தோன்றுவன்' என்றார். இதனைப் பருவத்

தாற் துருவன்பாலும் சாதியாற் கயேந்திரன்பாலும் மரபால் பிரகலாதனன்பாலும் துன்பு தோன்றிய பொழுது உடன் தோன்றினமை காட்டப்பட்டது.

சுக்கிரீவன், மராமரம் எய்யச் சீராமனை வேண்டுதல்

67. இந்நெறி ஏகவேண்டும் என என்று இயைக்க, மாக நீண்டன - வானளாவி உயர்ந்தனவும், குறுகிட நிமிர்ந்தன - அது (ஆகாயம்) தான் சிறிதாம்படி வளர்ந்தனவும்; இடர்போம் - துயரொழியும்.

சீராமன் மராமரங்களை எய்ய இயைதல்

68. மறுவிலான் - சுக்கிரீவன்; வானவர்க் கிறைவன் - தேவர்கட் கிறைவனாகிய சீராமன்; முன்னிய முயற்சி- எண்ணிய காரியம்; எறுழ்வலி - மிக்க வலிமையுள்ள.

மராமரங்களின் வருணனை

69. ஊழி-உகங்கள்; உலைந்து-அழிந்து; ஆண்டு சென்று- அங்குச் சென்று.

70. கலை கொண்டு - பதினாறு கலைகளையுங் கொண்டு; தலை - உச்சி; இலை - மரத்தின் நுனியில் உள்ள இலை; தெரிப்பருந் தரத்தன - சொல்லற்கரிய தன்மைய.

71. இந்திரன் மகன் - இந்திரன் மகனாகிய வாலி; தம்பி- சுக்கிரீவன்; வயிர்த்த - வயிரங் கொண்ட; நீரிடைக் கிடந்த பார் - நீரினிடைத் தங்கிய நிலம்; குடைந்து - கிழிந்து; வெள்ளி வெண்படம் - சால வெள்ளிய படம்; வெள்ளி வெண் என்பது சின்னஞ்சிறு என் பது போல் வந்த ஒரு பொருட்பன்மொழி.

சீராமன் மராமரங்களை எய்ய நாணொலி எழுப்புதல்

72. வார் கணை - நீண்ட அம்பு ; ஆதாம் - விருப்பம் ; எய்வு இலாததோர் பயம் - என்றும் வந்து எய்தாத பயம் ; நாண் - நாணி.

சீராமன் எய்த அம்பின் செய்கை

73. பின் உடன் அடுத்தியன்ற ஏழ் - பின்னும் நெருங்கி வந்த ஏழென்னுந் தொகைப் பொருள் ; இன்னும் ஏழு கண்டபின் ஒழிவதன்று உருவும் - இன்னும் ஏழ் என்னும் எண்ணைப் பெற்ற பொருள்களைக் கண்ட பிறகு உருவிச் செல்லாது இராது ; இராகவன் - இரகு குலத்திற் றோன்றினோன், தத்திதாந்த பதம் ; ஏழ் - ஆகுபெயர் ; கண்டபின் பின்னிற்று எச்சம்.

சீராமன் எய்த அம்பைக் கண்டு பல பொருளும் அஞ்சுதல்

74. இக்கணைக்கு இலக்கம் ஏழு பெற்றதோ என்று எண்ணி - இக் கணைக்குக் குறி ஏழென்னும் எண்ணைப் பெற்ற பொருள்களோ என்று கருதி.

75. அன்னதாயினும் - அவ்வாறு அச்சம் எய்தினும் ; யாவரு நோக்கினர் - யாவரும் நோக்கி அச்சமொழிந் தனர் ; அருக்கன் சேய் - சுக்கிரீவன் ; இவையிவை - பின்பு வருவனவற்றை.

சுக்கிரீவன் சீராமனைத் துதித்தல்

76. உய்ய - உயிர் பிழைக்க.

77. இத்தலை - இவ்விடம்.

78. புயல் - மேக மண்டலம்; இரவிதன் புவி - சூரிய மண்டலம்; ஏனையவும் - மற்றைய மண்டலங்களும்; அவன் - வாலி; அன்று - அப்பொழுது.

துந்துபி இறந்துபட்டதைப் புகறல்

79. முடை உடல் - முடை நாற்றத்த தாகிய உடம்பு; மால் வரை - இருசியமுக மலை; கருணையான் - மதங்க முனிவர்.

சீராமன் துந்துபியினுடலை எறியுமாறு இலக்குவற்குக் கட்டளையிடலும், அவன் எறிதலும்

80. அமலன் - சீராமன்; இளவல் - இலக்குவன்; மைந்த - வீரனே; ஒட்டு - அப்பால் தள்ளு; அவன் - இலக்குவன்; விரிஞ்சன் நாடு - பிரமனுலகம்.

சுக்கிரீவன் சீதை கழித்தெறிந்த கலன்களைக் காண்பித்தல்

81. இவ்வழி - இங்கே; இயைந்ததோ ரிடை - பொருந்தி வாழ்ந்துகொண் டிருந்ததோ ரிடத்து; வெவ்வழி - தீ நெறி; கொணர - கொண்டு செல்ல; செவ்வழி நோக்கின் - செவ்வனே ஆராயின்; கவ்வை - துன்பம்; கழிந்த சேண் - நெடுந் தூரம்.

82. உழையர் - தூதர்; கண்ணியது - கருதியது; ஓர்ந்திலம் - அறியகில்லேம்; தன் இழை - தன் அணிகளை; பொதிந்து-முடிந்து; எற்றனம்-வந்திக்கொண்டோம்.

83. நேயத்தான் - நட்பினையுடையவன்.

சீராமன் கலன்களைப் பார்த்தல்

84. தெரிவை மெய்யணி தெரிவுற நோக்கினன் என இயைக்க; எரிகனலெய்த மெழுகின் யாக்கை போல்- எரியுந் தீயால் வெதும்பப்பட்ட மெழுகின் லாய உடம்பு போல; உயிருக்கு ஊற்றம் - உயிருக்கு வலிமை.

85. நறுமலராய - மணங் கமழும் மலரை யொப்பன; மொய்ம்பினில் - தோளினில்; சாந்தமுமாய் - சந்தனப்பூச்சாகி; பூவை பூண்கள் - பூவையை ஒப்பாளது அணிகலன்கள்.

சுக்கிரீவன் சீராமனைத் தேற்றுதல்

86. தெய்வக் கற்பினள் - அறக் கற்பினையுடைய சீதை; வெய்யவன் - இராவணன்.

87. பெருமையோர் - செயல் குணம் முதலிய பெருமையினை யுடையவர்; தம் பெருமை பேசலார் - தம் பெருமைகளை எடுத்து உரைத்தல் செய்யார்; கருமமே யல்லது பிறிதென் கண்டது - தாஞ்செய்யக் கடவனவாகிய காரியங்களை நோக்குவார்களல்லது அவர்கள் நோக்குவது வேறு யாது; அருமையே துனக்கு - உனக்கு அருமையாய பொருள் எப்பொருள்; அவலங் கூர்தியோ - வருந்துவதேயோ.

88. முளரிமேல் வைகுவான் - தாமரைத் தவிசில் தங்கும் பிரமன்; முருகற்றந்த அத்தளிரியல் பாகத்தான் - முருகனைப் பெற்றுதவிய அத் தளிர் போலும் இயலை யுடைய உமை யொருபா லுடைய உருத்திரன்; தடக்கையாழியான் - தடங்கையிற் சக்கரப் படையை யுடைய திருமால்; அளவியொன்றுவரேயன்றி - மூவ

ருங்கலந்து ஒன்றுவரேயல்லது ; தனித்தனி கிடைப்பரோதுணை - தனித் தனியாக நினக்கு ஒப்புமை கூறப்படுவரோ (இல்லை என்றபடி) ; தனிரியல் - அன்மொழித்தொகை ; தடக்கையாழியான் - உபேந்திரன் எனினும் ஒக்கும்; முத் தொழிற்கும் மூவராய் நின்ற பரம் பொருள் மூவரும் ஒன்று கூடி நின்னைப்ப தன்றிப் பிறிதோ ராற்றால் நின் னைப்பவர் ஆகார்கள் என்பார், 'அளவி யொன் றுவரே யன்றித் தனித் தனி கிடைப்பரோ துணை' என்று கூறினர்.

89. என்னுடைச் சிறுகுறை - தனக்கு (சுக்கிரீவனுக்கு) நேர்ந்த பகைமை ; ஒரீஇ - ஒழித்து ; பின் னுடைத் தாயினுமாக - அது பின் முடிப்பதாயினுமாகுக ; மீட்டு மீடும்-சிறையினின்று மீட்டு நாம் மீள்வோம் ; பொன் னுடைச் சிலையினுய் - பொற்கட் டமைந்த வில்லை யுடையவனே ; ஒரீஇ - சொல் லிசை யளபெடை ; மீடும் - தும், உளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

சுக்கிரீவன் புகன்றவைகளைக் கேட்டு, சீராமன் மறுமொழி புகறல்

90. விலங்கு எழிற்றோளினுய் - (தீமையை) விலக்கா நிற்கும் அழகிய தோளை யுடையவனே, சுக்கிரீவன் ; இலங்கு நற்புவியினின் இருக்க-விளங்காநிற்கும் இந்த நன்மையாகிய நிலத்திடை உயிருடன் கூடியிருக்க.

91. வாணெடுங் கண்ணி - வாட்படை போலும் நீண்ட கண்ணையுடைய சீதை ; தாள் நெடுங்கிரி - அடியை யுடைய நீண்ட மலை ; பூண்-அணிகலன் ; நாணெடுஞ் சிலை - நாண் கொண்ட நீண்ட வில் ; நாணிலேன் - நாணமில்லேன்.

92. ஆறுடன் செல்பவர் - வழியின்கண் செல்பவர் ; வலி செயின் - துயரைச் செய்வாராயின் ; வெஞ் சமத்து ஊறுற - கொடிய போரிடை இடையூறு எய்த ; உயிருதவுப்பர் - உயிரையேனும் உதவி நிற்பர் ; தேறினள் - நம்பி நின்றவள்.

93. கருங்கடல் தொட்டனர் - கடலினைத் தோண்டினர். (சகரர்); கங்கை தந்தனர் - கங்கையினைப் பூவுலகிற்குக் கொணர்ந்தனர் (பகீரதன்) ; பொரும்புலி மானொடு புனலும் ஊட்டினர்-போர் செய்யும் இயல்புள்ள புலியையும் மானையும் ஒரு துறையில் நீருண்ணச் செய்தனர் ; * இச் சக்கரவர்த்தி - மாதாந்தா என்னப்படுவர். இதனை 'பொருதுறைசேர் வேலினாய் புலிப்போத்தும் புல்வாயும் ஒருதுறையின் நீருண்ண உலகாண்டோன் உளனொருவன்' என்னும் பால காண்டச்செய்யுளோடு ஒப்பிடுக. † 'ஒரு துறைப் புனல்சினப் புலியுமானு முடனே - உண்ணவைத்த வுரவோ னுலகில் வைத்த அருளும்' என்றும், குலோத்துங்க சோழன் உலாவில் 'பழக்கத்தாற் போந்த புலியுடனே புல்வா யொரு துறைநீர் - மாந்த உலகாண்ட மாந்தாதா' என்றும் புகழ்ந்து கூறியிருக்கிறது நோக்கற்பாலது.

94. இந்திரற்கு உரியதோர் இடுக்கண் - இந்திரனுக்கு (சம்பராசுரனால்) உண்டான துயரம் ; இகல் அந்தகன் - வலிமையை யுடைய யமன் ; தேய்த்தனன்- அழித்தனன் ; வெந்துயர்க் கொடும்பழி - கொடிய துன்பமாகிய பழி.

95. எந்தையார்-தசரதன் ; கரும்பழி சொல்லியை-கரும்பு வருந்துஞ் சொல்லை யுடையாளை (சீதை) ; பகைவன்- இராவணன்.

---

* பால காண்டம் குலமுறை கிளத்து படலம் செய்யுள் (5)
† கலிங்கத்துப்பரணி இராசபாரம்பரியம் கண்ணி (12)

96. இன்னன பன்னி - இவை போல்வன எடுத்துக்கூறி ; ஈடழிந்து - பெருமை யழிந்து ; உன்னருந் துயரம் - எண்ணுதற்கரிய துன்பம் ; கதிரவன் புதல்வன் - சுக்கிரீவன் ; பையுள் பார்த்து - வருத்தம் நோக்கி ; அன்ன வெந்துயர் - அக் கொடிய துன்பம் ; அளக்கர் - கடல்.

முதனூலாகிய வான்மீகத்தில் சீராமன், சுக்கிரீவன் தந்த அணிகளை, இலக்குவற்குக் காட்டி, 'இவை சீதையின் ஆபரணங்களா பார்த்துச் சொல்,' என்ற போது அவன் கண்கள் நீர் சொரியக் கலன்களைப் பார்க்க இயலாது வருந்திப் பிறகு, 'அண்ணு, இந்த வங்கிகளையும் குண்டலங்களையும் அறியேன். இந்தப் பாதச் சிலம்புகளும், கொலுசுகளும் சீதை தரித்திருந்தவை என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு நாளும் நான் பிராட்டியாரின் பாதங்களில் பணியும் பொழுது அவைகளைப் பார்த்திருக்கின்றேன்' என்றனன். இதைக் கம்பர் சொல்லவில்லை.

சுக்கிரீவன் முதலியோர் சீராமனுடன் வாலிபாற் சேறல்

97. வெங்கண் ஆளி ஏறு - கோபக் கண்ணை யுடைய ஆண் யாளி ; மீளிமா - வேங்கை ; வேக நாகம் - யானை ; சிங்க ஏறு - இரண்டு - இரண்டு ஆண் சிங்கங்கள் ; சாலம் - ஆச்சாமரம் ; மூலம் - கிழங்கு ; தமாலம் - ஓர்வகை மரம் ; நாகம் - சுரபுன்னை ; துவன்று - நெருங்கிய.

மலை வழியின் வருணனை

98. வாவிதோறும் வான யாறு பாயும், ஆர்தடங்கள் மீனின் ஏறு இருவி பாயும், அருவி ஆறுபோல் பாயும்,

ஆனை ஒன்றின் ஒன்று பாயும், குருவி ஏனலில் பாயும், மந்தி ஓடி கோடு பாயும் என இயைத்துப் பொருள் கொள்க. இருவி - தினைத்தாள்.

சீராமன் முதலியோர் கிட்கிந்தை மலையைச் சார்தல்

99. ஐந்தோடைந்து - பத்து ; வாலிவாழ் பொருப்பு - கிஷ்கிந்தை மலை ; துன்னினர்கள் - அடைந்தார்கள்.

சீராமன் தன் கருத்தை வெளியிடல்

100. அவ் விடத்து - அச்சமயத்தில் ; நீ - சுக்கிரீவன் ; வாலியானதோர் வெவ் விடத்தை வந்து - வாலி யெனப்படும் கொடிய விடம் போல்வானோடு எதிர்ந்து ; போர் விளைக்கும் எல்லை - போர் செய்கையில் ; வேறு நின்று - தனியே நின்று ; எவ்விட - அம்புவிட ; ஏ என்றது எ எனக் குறுக்கல் பெற்றது ; துணிந்தமைந்தது என் கருத்து என்றனன் - துணிந்தமைந்ததாகிய (நிச்சயித்ததாகிய) என் எண்ணம் இதுவாகும் என்றனன் ; தெவ்வடக்கும் வெற்றி-யான் - பகைவரை யடக்கும் வெற்றியையுடைய சுக்கிரீவன் ; விடம் தெவ் - ஆகுபெயர்.

சுக்கிரீவன் வாலியைப் போர்க் கழைத்தல்

101. இடித்து உரப்பி - இடியைப்போல் ஆரவாரித்து ; போர் எதிர்த்தியேல் - போர் செய்வையேல் ; அடர்ப்பல் - ஒறுப்பேன், இது அல் ஈற்றுத் தன்மை யொருமை முற்று ; உளைத்த பூசல் - இரைந்த குரலோசை ; இடந் துடித்தல் - கெடுகுறி.

வாலி போர்க்கு எழுதல்

102. வந்தனென் வந்தனென் என்னும் அடுக்கு துணிவுப் பொருட்டு; இந்திரன் முதற் றிசை எட்டும் - கீழ்த் திசை முதலிய எட்டும்; தாரகைக் குழாம் - நக்ஷத் திரக்கூட்டங்கள்; மணிமுடிச் சிகரம் தீண்ட தாரகைக் குழாம் சிந்தின என இயைக்க.

போர்க்கெழுந்த வாலியைத் தாரை தடுத்தல்

103. ஆயிடை-அப்போது; அமிழ்திற் றோன்றிய-அமுதத் துடன் பிறந்த;இடை விலக்கினள்-நடுவே தடுத்தனள்.

சீராமன், சுக்கிரீவற்குத் துணையா யமைந்தனன் என்று தாரை வாலிக்குக் கூறுதல்

104. அன்னது கேட்டு - வாலி கூறிய வாசகத்தைக் கேட்டு; அவள் - தாரை; ஆயவற்கு - சுக்கிரீவனுக்கு; உன் உயிர் கோடலுக்கு-உன்னைக் கொல்லுதற்கு; உடன் வந்தான் - துணையாக வந்திருக்கின்றான்; துன்னிய அன்பினர் - என்பால் நெருங்கிய அன்பினை யுடையவர்.

வாலி தாரைக்கு மறுமொழி சொல்லல்

105. உழைத்தவல் இருவினைக்கு ஊறு காண்கிலாது - தம்மை வருத்திய வலிய இருவினைக்கு இடையூறு காணாது; அழைத்தயர் உலகினுக்கு அறத்தினாறெலாம்-கூவி யழைத்து வருந்தும் உலகத்தினுக்குத் தருமத்தின் வழி யனைத்தும்; இழைத்தவற்கு-காட்டி நின்ற சீராமனுக்கு; உன் பெண்மையால் - உன் பேதைமைக் குணத்தால்.

106. இருமை - இம்மை மறுமை என்னும் இரண்டனையும்; அருமையின் நின்று - அருமையாக நின்று; தன்னைத் தான் தருமமே தவிர்க்குமோ - தன்னைத் தான் தருமமே தவிர்ந்து நிற்குமோ (இல்லை என்றபடி.)

107. ஈன்றவள் மாற்றவள் - மாற்றாந் தாய் (கைகேயி) - அவள் தன் மைந்தனுக்கு - அவள் மைந்தனுக்கு (பரதன்) ஆற்றரும் உவகையால் - அடைதற்கரிய மகிழ்ச்சியால்; போற்றலை - துதியாமல்; இன்னன - இத்தகைய பழமொழிகளை.

108. நின்ற பேர் உலகெலாம் - நிலைபெற்ற பெரிய உலகங்கள் எல்லாம்; நெருக்கி நேரினும் - நெருக்கி எதிர்ந்தாலும்; வேறு வேண்டுமோ - வேறு துணை வேண்டி நிற்பனோ; தன் துணை - தனக்குத் துணையாக; தன்னில் வேறிலான் - தன்னிலும் வேறில்லாதவன்.

109. இம்பர் - இவ்வுலகம்; அருளின் ஆழியான் - அருளிற் கடல் போல்பவன்.

போர்க்களங் குறுகிய வாலி ஆரவாரஞ் செய்தல்

110. ஆர்க்கின்ற - ஆரவாரிக்கின்ற; பின்னோன் - தம்பியாகிய சுக்கிரீவன்; நோக்கினன் - பார்த்து; வேர்க்கின்ற வானத்து உருமேறு - வியர்க்கின்ற மேகங்களினின்று உண்டாகும் பேர் இடிகள்; பொதிர் வுற்ற - மிகுதி கொண்ட; பூசல் - பேரொளி; கார்க்குன்ற மன்னன் - பெரிய மலை போல்பவனாய திருமால்.

சீராமன் போர்க்கெழுந்த வாலியை நோக்கி அதிசயித்தல்

111. அன்புடைத் தம்பி - இலக்குவன்; செவ்வே செல நோக்குதி - நன்றாகக் கண் பார்வை செல்லுமாறு பார்;

எவ்வேளை-எச்சமயத்தில் ; எம் மேரு, எக் காலொடு, எக்கால வெந்தீ-எந்த மேருவரை, எந்தக் காற்றோடு, எந்த யுகாந்த காலத் தீ ; வெவ்வேறு உலகத்தில் - வேறு வேறாகிய உலகத்தின்கண் ; இவன் - வாலி.

இலக்குவன் உத்தரம்

112. வள்ளற்கிளையான் - இலக்குவன், இவன் - சுக்கிரீவன்; தம்முன் - தன் தமையனாகிய வாலி ; கொடுங்கூற்று வன் - வாலி காலனாகிய சீராமன் ; குரங்கின் எள்ளற் கரும் போர் - குரங்கினது பழிப்பில்லாத போர்.

113. பின்னும் ஆற்றாது பகர்வான் - பின்னும் சகியாது சொல்வான் ; அறத்தாறு அழுங்க - அறத்தின் வழி கெட ; தேற்றாது செய்வார்களை - தெளிய மாட்டாது செய்பவரை ; தேறுதல் - தெளிதல் (நம்புதல்); செவ்விதன்று-நடுவு நிலைமையன்று ; மாற்றானெனத் தம்முனைக் கொல்லிய வந்து நின்றான் - பகைவன் போலத் தம் முன்னோனைக் கொல்லச் சமைந்து நின்றனன் ; வேற்றார்கள் திறத்து - அயலாரிடத்து ; இவன் தஞ்சம் என் - இவன் அடைக்கலம் என்பது (துணை) எப்படி.

சீராமன் மறுமொழி பகர்தல்

114. அத்தா - ஐயனே (இலக்குவன்) ; ஆரியன் - சீராமன்; பேசலாமோ - பேசக் கடவதேயோ ; 'பாதன் உத்தம னாதலை 'ஆயிரமிராமர் நினகேளாவரோ தெரியில் அம்மா? என்னும் அயோத்தியா காண்டச் செய்யு- ளோடு ஒப்பிடுக. (குகப் படலம் - செய்யுள் 35).

115. விற்றாங்கு வெற்பன்ன - வில்லைத் தாங்கிய மலையை யொத்த ; மெய்மையுற்றார் சிலர் - தவறாத நல்லொ ழுக்கமுடையவர் சிலரே யாவர் ; அல்லவரே பலர்-

நல்லொழுக்க முடையவர் அல்லாதவரே பலர் ; பெற்ருருழை-தாம் நண்பாகப் பெற்றவ ரிடத்தில்; பெற்ற பயன் - நாம் பெற வேண்டிய நன்மைகளை ; அற்ருர் நவை என்றலுக்கு - குற்றமற்றவர்கள் என்று சொல்வதற்கு ; ஆகுநர் ஆர் - சொல்லுதற் குரியவர் யாவர்.

வாலி சுக்கிரீவனைக் குமைத்தல்

116. ஆற்றவின் - பராக்கிரமத்தால் ; தம்பி-சுக்கிரீவன் ; தும்பியை அரி தொலைத்தென்ன - யானையைச் சிங்கம் கிழித்தாற்போல ; கொன்னகங்களில் - கொலைத்தொழிலையுடைய நகத்தால் ; குலைந்து உக-வருந்திச் சிந்த.

சுக்கிரீவன் தோற்று சீராமனையடைதல்

117. மலைந்தபோது - போர் செய்த காலத்தில் ; இரவி சேய் - சூரியன் மகனுகிய சுக்கிரீவன் ; ஐயன் - சீராமன் ; உலைந்த சிந்தை - வருந்திய மனம் ; உள்ளங் குலைந்திடேல் - மனம் வருந்தேல்.

சீராமன் வாலிமேல் அம்பெய்தல்

118. பாரிடை எடுத்துப் பற்றி எற்றுவென் என்று என இயைத்துப் பொருள் கூறுக ; இளவல் - சுக்கிரீவன் ; கடித்தலம் - மார்பு ; மீக்கொண்ட - உயரக்கொண்ட ; கோலொன்று வாங்கி - அம்பொன்று வாங்கி ; தூரந்தான் - விடுத்தான்.

இராம சரம் வாலியின் மார்பைத் துளைத்தல்

119. காரும் வார்சுவை - நீண்ட சுவை யொழுகுகின்ற ; கதலியின் கனி - வாழைப் பழம் ; கழியச் சேருஞ் சூசியின் - சாலச் செல்லும் ஊசியைப் போல ; கீழ் நிமிர்ந்த பாரும் - கீழோங்கிக் கிடந்த நிலவுலகம் ; வலி படைத்தவன் - ஆற்ற லமைந்த வாலி.

வாலியின் சங்கை

120. தேவரோ என அயிர்க்கும் - (அம்பு விட்டவர்) வானவரேயோ என ஐயமடைவான்; ஆற்றல் - வல்லமை; இறைவர் மூவரோடும் ஒப்பான் ஒருவன் செயலாம் என இயைக்க.

121. நேமி - (திருமாலின்) சக்கரப் படை; நீலகண்டன்- நீலம்போலும் கண்டத்தை யுடைய உருத்திரன்; அயில் - வேற் படை; நாமம் - அச்சம்; என் நடுவண் - என் மார்பிடை; புழுங்கும் - வருந்துவான்.

வாலி சீராமன் அம்பை வியத்தல்

122. இவ் வெஞ்சரம் வில்லினால் தூரப்பரிது என வியக்கும் என்று இயைக்க; சொல்லினால் நெடுமுனிவரோ தூண்டினா ரென்னும் - நிறை மொழியால் முற்றத் துறந்த முனிவர்கள் தூண்டினரோ என்னும்; தன்னாரத்தைக் கல்வி - தன் மார்பைத் தோண்டி. இரண்டாவது அடியை * 'சொல்லொக்குங் கடிய வேகச்சுடுசரம்' என்னும் பால காண்டச் செய்யுளோடு ஒப்பிடுக.

வாலி அம்பை மார்பினின்றும் பறித்தல்

123. பெருந் திறல் - பெரிய வன்மை; யாளி போல் வாலி- சிங்கம் போன்ற வாலி; வீங்கினார்-உடலம் பூரித்தனர்; தோள் வீரரை - தோளாற்றலை யுடைய வீரர்களை.

வாலியின் மார்பினின்றும் பெருகிய உதிரத்தைக் கண்டு சுக்கிரீவன் வருந்துதல்

124. வாசத்தாரவன்-மணங் கமழ்கின்ற மாலையை யணிந்த வாலி; ஓசைச் சோரி-ஓசையுடன் செல்லுகின்ற உதிரம்; உடற் பிறப்பென்னும் பாசத்தால்-உடன் தோன்-

---

* தாடகை வதைப் படலம் - செய்யுள் - 72.

றினமை என்னும் பற்றினால்; பிணிப்புண்ட - பற்றப் பட்ட; நேசத்தாரை-அன்பு நீர்த்தாரை; நெடு நிலஞ் சேர்ந்தான் - நீண்ட நிலத்தில் விழுந்தனன்.

வாலி, அம்பிற் பொறித்துள்ள இராம நாமத்தைப் பார்த்தல்

125. மும்மை சால் உலகு - மூன்றாகிய நிறைந்த உலகம்; மூல மந்திரம் - முக்கிய மந்திரம்; இம்மை - இப் பிறப்பு.

வாலி சீராமனை இகழ்தல்

126. இல்லறந் துறந்த நம்பி - அரசு துறந்து காடு போந்த இறைவனாகிய சீராமன்; தங்கள் வில்லறம் - தங்கட்கு உரிய விற்றொழிற் குரிமை; வேத நூலிற் சொல் அறந் துறந்திலாத - வேத நூலின்கட் கூறிய அறம் திறம்புதல் இல்லாத; தொல்லை நல் அறம் - பழமை யாகிய நல்ல அறம்.

127. வெள்கிடும் - நாணமடைவான்; உள்கிடும் - நினையா - நிற்பன்; முள்கிடும் குழி - தோண்டிய குழி; தொள் கொடும் - வருத்தத்தோடும்.

128. இறை - எப்பொருட்கும் இறைவனாகிய சீராமன்; திறம்பினன் - நீதி தவறினான்; இழிந்துளோர் இயற்கை என்னே - தாழ்ந்துளோரது தன்மையை யாதென் றுரைப்பது; முறை திறம்பினன் - முறை மையினின்றும் மாறுபட்டனன்; மறை திறம்பாத- மறை யொழுக்கம் மாறுபடுதல் இல்லாத.

வாலி தன்னெதிரே போந்த சீராமனைக்கண்டு ஏசுதல்

129. நீலக் கார்முகில் கமலம் பூத்து மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதேபோலும் (மாலை) வாலி கண்ணுற்றான்

என இயைத்துப் பொருள் கொள்க; கண்ணுற்றான்-கண் எதிரிற் கண்டனன்; எண்ணுற்றாய்-யாவராலும் மதிக்கத்தக்கவனே; ஏசுவான் - பழிப்பான்.

130. மன்னுயிர் துறந்த வள்ளல் - தசரதச் சக்கரவர்த்தி; பரதன் முன் தோன்றினையே (சகல நற்குணங்களும் வாய்ந்த) பரதனுக்கு முன் பிறந்தனையே; தீமைதான் பிறரைக் காத்து - தீய செயல் பிறர் செய்யாமற் றடுத்து; தாய்மையும் அன்றி நட்புந் தருமமும் தழுவி நின்றாய் - தாயாந் தன்மையு மன்றி நட்பின் தன்மை யையும் தருமத்தோடும் தழுவி நின்றவனே.

131. குலமிது-குலத்தினது சிறப்பு இது; கல்வியீது-கல்விச் சிறப்பு இது; கொற்ற மீது - வெற்றியாவது இது; உற்று நின்ற நலமிது - அடைந்து நின்ற பெருமை இது; புவன மூன்று நாயகம் உன்னதன்றோ - மூன்று உலகங்கட்குந் தலைமை உன்னுடையதல்லவா; வலம்-வல்லமை; அலமரச் செய்யலாமோ - நிலை கலங்கும் படி செய்யலாமோ; அயர்ந்துளார் - மறந்தவர்.

132. கோவியற்றருமம் - அரசியலாகிய தருமம்; ஓவியத் தெழுத வொண்ணா உருவத்தாய் - சித்திரத்திற் றீட்டி எழுத முடியாத வடிவ முடையவனே; ஆவியை - உயிரினுஞ் சிறந்தாளை; அமிழ்தின் வந்த தேவியை - அமிழ்தொடு உடன்றோன்றிய திருமகள்போல்வாளை; திகைத்தனை - திறம்பினை அல்லது தடுமாற்ற முற்றாய்.

133. அழிவு செய்து கழிவரேல் - கேடு செய்து நீங்குவா ராயின்; அதற்கு - அதற்குப் பரிகாரமாக; இரக்கம் எங்கு உகுத்தாய் - இரக்கம் எங்குச் சிந்தினை; பரக்க அழி நீ பூண்டால் - விசாலமாகத் தீமையாகிய இதனை நீ மேற்கொள்வையேல், பரக்க என்பது ஈறுகெட்டு

'பரக்' என நின்றது; புகழை யார் பரிக்கற் பாலார் - புகழினைத் தாங்கற்பாலார் யார்; அழி - தீமை; முதனிலைத் தொழிற் பெயர்.

134. மெலியவர் பாலதேயோ ஒழுக்கமும் விழுப்பந்தானும் - கீழானோ ரிடத்தேயோ ஒழுக்க முடைமையும் சிறப் புடைமையும்; வலியவர் இளிவு செய்தால் - வலிமை யுடையவர் தீமை செய்வாராயின்.

135. கூட்டு - துணை; பெற்ற தாதை - தயரதன்; பூட்டிய- அளித்த; தம்பி - பரதன்; எம்பி - சுக்கிரீவன்; நாட் டொரு கருமம் - தயரதனுக்கு ஈமக் கடன்; காட் டொரு கருமம் - வாலிக்கு ஈமக்கடன்; செய்தாய்- செய்வித்தாய்.

136. அறைகழல் அலங்கல் வீரராயவர் - ஒலிக்கின்ற கழ லினையும் மாலையையு மணிந்த வீரரானோர்; புரிவது- ஆண்மைத் துறையென லாயிற்றன்றே - செய்வது ஆண்டன்மைத் தொழில் என்ப தல்லவா; என்னைச் செய்தது ஈதெனில் - எனக்குச் செய்தமை இது வெனில் (இருவர் நிகழ்த்திய போரிடை, செயற் குரியது அல்லாததாகிய நடுவே அம்பெய்து கொன்ற மையை) முறையல - முறைமை யல்லாத காரியம் (சீதையைக் கவர்ந்து சென்றது.)

137. இருவரு நல்லுற்றாரே - இருவரும் நமக்கு நல்ல உற வினரெனவே கருத வேண்டும்; வாயம்பு - கூர்மையை யுடைய அம்பு; மருமம் - மார்பு; தருமமோ - தரும மாகுமோ; தக்கில தென்னும் - இது தக்க செய்தி யன்று என்னும்; இருவர் - வாலி சுக்கிரீவர்.

138. இருமை நோக்கி - இம்மை மறுமையைக் கருதி; அருமை யாற்றலன்றே - அருமையாகி ஆற்றலுடை மையேயன்றே; அறங்காக்கின்ற பெருந்தன்மை என்பது.

அறத்தினைப் பாதுகாக்கின்ற பெருமை எனப்படுவது ; ஒருமை நீக்கி ஒருவற் குதவலே - ஒருபால் நீங்கி ஒருவனைக் காத்து நிற்பதேயோ.

139. செயலைச் செற்ற பகை தெறுவான் - தனக்குக் கொடுமை செய்த பகையை வருத்துவான் கருதி ; புயலைப் பற்றும் பொங்கு அரி - களிற்றியானையைப் பிடிக்கும் சிங்கம் ; போக்கி - விடுத்து ; என்ன முயற்சியோ - எவ்வகையாகிய முயற்சியேயோ.

140. ஊர் இயன்ற மதிக்கு - ஊர்கோளாற் சூழப்பட்ட சந்திரனுக்கு ; மறு - களங்கம் ; ஆரியன் - சீராமன்.

141. நூலியற்கை - சாத்திரங்களின் முறைமையும் ; நுங் குலத்துந்தையர் - நுங் குலமுதல்வர் ; மன் அற வேலியை - நிலைபேறுடைய தரும வேலியை.

142. அன்று தாரம் மற்றொருவன் கொள - அற்றை ஞான்று மனைவியை வேறொருவன் கைக்கொண்டு போக ; தன் கையின் பாரவெஞ்சிலைதானும் பழுதுற மறைந்து நிராயுதன் மார்பின் எய்யவோ - தன்கைப் பிடித்த சுமையாகிய கொடிய வில்லும் பழுதுபட மறைந்து நிராயுதன் மார்பின் எய்யும்படியேயோ ; வில்லிகல் வல்லது - (நீ) விற்றொழிலின் ஆண்மை காட்டியது.

143. என்று இனைய விளம்பினன் - என்று இன்னோன்ன மொழிகளைச் சொல்லி நின்றான் ; வென்றி வாலி - வெற்றியினையுடைய வாலி ; நின்றவீரன் - எதிரே நின்ற வீரனாகிய சீராமன்.

வாலி புகன்றவைகளைக் கேட்ட சீராமன் மறுமொழி புகறல்

144. ஈரமாவதும் - அன்புடைமையாவதும் ; இற்பிறப்பாவதும் - குடிப் பிறப்புடைமையாவதும் ; வீரமாவதும்-

வீரத்தன்மை யுடைமையாவதும்; கல்வியின் மெய்க் நெறிவாராமாவது - கல்வியினுலாகிய உண்மை மார்க் கத்தினுரிமையாவதும்; மற்ருெருவன் புணர் தாரமா வதை - வேருெருவன் மணந்த மனைக்கிழத்தியை; தாங்குந் தருக்கதோ - தாங்கா நிற்குஞ் செருக்கு உடைமையே.

145. தெளிவுடையோர்க்கெலாம் மறந்திறம்பல், வலிய மெஞ மனம் புறந்திறம்பல், எளியவர்ப் பொங்குதல் அருங்கடி மங்கையர் திறந்திறம்பல் ஆகிய இவை அறந் திறம்பலாகும் என இயைத்துப் பொருள் கொள்க; அறந்திறம்பல் - தருமத்தினின்றும் தவறுதல்.

146. தருமம் இன்னதெனுந் தகைத்தன்மையும் - தருமம் இன்னதென்று சிறப்பித்துக் கூறப்படுந் தகைமையை யுடைய இயல்பும், உம்பி - தம்பியாகிய சுக்கிரீவன்; தேவி - உருமை; பெருமை நீக்கினை - பெருமையை விட்டவனுய்; எய்தப் பெறுதியோ - அடையப்பெறு வையோ.

147. நிற்கட்டனென்-நின்னை அழித்தேன்; கட்டல் - அழித் தல்; என் சிந்தைக் கருத்து - என் மனத் துணிபு.

வாலியின் உத்தரம்

148. பிழைத்த தன்மையிது - நீ பிழைபாடு செய்தமை இது- வேயாமென்று; வீரன்-சீராமன்; தக்கிலாது இழைத்த தகுதி யில்லாத காரியத்தைப் புரிந்த; இத்துணை விழைத் திறத் தொழில் இயல்பெனக் கென்ன விளம்- புவான் - இவ்வளவாக யாங்கள் விரும்பியபடி தொழில் செய்தல் வானரமாகிய எங்கட்கு இயல்பென்று வாலி சொல்லினுன்; மிருகங்கட்கு அறமும் முறையும் இல்லை என்றபடி.

149. *நிணமும் நெய்யும் இணங்கிய நேமியாய் குலமுதற்கு ஒத்தன உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கலால் மணமும் இல்லை மறை நெறி வந்தன குணமும் இல்லை என்று கூட்டிப் பொரு ளுரைக்க; உணர்வு சென்றுழி - அறிவு சென்றவழி.*

150. *வெற்றி யுற்றதோர் வெற்றியினுய் பெற்றிமற்றிது பெற்றதோர் பெற்றியின் குற்றமுற்றிலென் நீயது கோடி எனுச் சொற்ற சொற்றுறைக்கு என்று இயைத்துப் பொருள் கொள்க; பெற்றிமற்றிது - இது எங்கள் (வானரம்) ஒழுக்கத்தின் தன்மையாகும்; பெற்றதோர் பெற்றியின் - இவ்வாறு அமைந்ததொரு தன்மையால்.*

சீராமன் உத்தரம்

151. *நலங்கொள் தேவரிற் றோன்றி - நன்மை யமைந்த தேவர்யாற் பிறந்து; நவையற - குற்ற மொழிய; கலங்கலாவற நன்னெறி காண்டலின் - கலங்குதல் இல்லாத அறமாகிய நன்மையாகிய மார்க்கங் காண்டலான்; விலங்கலாமை விளங்கிய தாதலான் - அறத்தின் பகுதியினின்றும் விலங்குதல் இல்லாமை விளங்கித் தோன்றலால்; தேவரிற் றோன்றல் - இந்திரன் பால் வாலியும், சூரியன்பால் சுக்கிரீவனும், வாயுவின் பால் அநுமான் தோன்றினமையும்.*

152. *பொறியின் யாக்கையதோ - ஐம்பொறிகட்கு இடமாய உடம்பைப் பற்றியதோ; புலனுகிய அறிவின்மேலதன்றோ - ஐம்புலன்களினுல் விஷயங்களை ஆராய்ந்தறிகின்ற அறிவைப் பற்றியதன்றோ; அறத்தாறு - தரும மார்க்கம்; நெறியின் - தரும மார்க்கத்தின்; நேர்நின்றுணர்ந்த நீ-நன்றாக அறிந்து நின்ற நீ; பிழையுற்றுறு பெற்றிதான் பெறுதியோ என இயைக்க.*

153. சிந்தை - மனம்; பைந்தொடித்திரு - சீதை; பரிவு - துன்பம்; வெந் தொழிற் றிறல் - கொடிய போர்த் தொழில் வகையால்; எருவைக்காசு - கழுகுக்காசு.

154. நன்று தீதென்று இயல் தெரி நல்லறிவு - நன்மை யிது தீமையிது எனப்படுகின்ற இயல்பினை உணர்த் தும் நல் உணர்ச்சி; நின்ற நன்னெறி நீயறியா நெறி நிலைபெற்ற நல்லொழுக்க நெறியின்கண் நீ அறியாத மார்க்கம்; உன் வாய்மை - உன் வாய்ச் சொற்கள்.

155. இன்னவை தக்கவென்றும் இன்னவை தகாதனவென் றும் ஒருவர் உணரமாட்டாராயின் கல்வி கேள்விகளிற் சிறந்த மக்களாவாரும் தாழ்ந்த விலங்கேயெனப்படு வர், மனுநெறி வழிச்சென்று ஒழுகுமாயின் விலங்கின் யாக்கையுடைய உயிரும் தேவரோடொப்பாகும் என்- பது பொருள்.

156. இனையது - இத் தன்மையது; வினையினுல் வரும் மேன்மையுங் கீழ்மையும் - அவ்வவர் செய்த நல்வினை தீவினைகளால் மேன்மையும் தாழ்வும் உண்டாம்; மனையின் மாட்சி - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள்.

வாலிக்கு இலக்குவன் விடை கூறல்

157. அமைய - பொருந்த; அரிக்குலத்தரசு - குரங்கினத் தரசனுய வாலி; மாண்ட செவ்வியோய் அனையதாக - மாட்சிமைப்பட்ட நடுவு நிலைமையை உடையானே அவ்வாருக; புளிஞர் - வேடர்; விலங்கினை மறைந்து- விலங்கி நின்று மறைந்து; எவ்வியதென்னை - எவி நின்றது என்ன காரணம்.

158. நின்தம்பி - சுக்கிரீவன்; முறையிலோயை - முறை பிறழ்ந்த நின்னை; தென்புலத்துய்ப்பன் என்று - கொல்

வேன் என்று ; அடைக்கலம் யானும் என்பாய் என்பது கருதி - அடைக்கலம் யானும் என்று சொல்வை என்றதனை எண்ணி ; அண்ணல் - இறைவன்.

வாலி சீராமனை வேண்டிக்கோடல்

159. தாயென உயிர்க்கு நல்கி - தாய்போல உயிர்கள் மாட்டு அன்பு செய்து ; தகையும் - எல்லா நற்குண நற்செயலும்; சால்பு - நிறை யுடைமையும்; நம்பி - இறைவன் ; நெறியினில் நோக்கு நேர்மை - சன்மார்க்கப் படி பார்க்கும் நேர் வழியில் ; நவையற உணரலாமே - குற்றமில்லாமல் பார்க்க முடியுமோ.

160. பின்னும் இரங்தனன் - மற்றும் இரங்து பேசி ; அரந்தை - துன்பம் ; மறித்தும் - மீட்டும்.

வாலி சீராமனைத் துதித்தல்

161. ஏவுகூர் வாளியால் - ஏவிய கூரிய அம்பினல் ; அறிவு- மெய்யுணர்ச்சி ; முற்று நீ - யாவு நீ.

162. புரமெலாம் எரி செய்தோன் - திரிபுரம் எரித்த விரி சடைக் கடவுளாம் உருத்திரன் ; உரமெலாம் உருவி - ஆற்றலை அழித்து.

163. வானினும் உயர்ந்த மானக் கொற்றவ - வானினு முயர்ந்த பெருமையை யுடைய இறைவனே ; எம்பி - சுக்கிரீவன் ; மற்றினி யுதவி உண்டோ - வேறுதவி எனக்குளதேயோ.

வாலி சீராமனை வரம் வேண்டல்

164. ஓவிய உருவ-சித்திரிக்கப்பட்ட வடிவமுடையவனே ; உன்பால் காயேன் பெறுவ தொன்றுளது எனக் கூட்டுக. நறவம் - மது ; ஏவல் - ஏவுதலொழி.

165. எம்பி - சுக்கிரீவன் ; உம்பிமார்கள் - உனக்கு இளையவர்கள்.

வாலி சீராமனுக்கு அனுமானைப்பற்றிக் கூறல்

166. மற்றிலன் எனினும்-மற்றும் தவமில்லேன் ஆயினும் ; மாய அரக்கனை - வஞ்சனையை யுடைய இராவணனை ; நின்கட்டந்து - நின்பாற் கொடுவந்து நிறுத்தி ; கடந்-முற்காரியத்தை ; உற்றது - நடக்க வேண்டுவதை.

167. ஆழியைய - சக்கரமுடைய இறையவனே ; வனிதை-சீதை.

வாலி சுக்கிரீவனைத் தழுவிக்கொண்டு சிற்சில கூறல்

168. அவற்கு - இறைவனுக்கு ; இளவல் - சுக்கிரீவன்.

169. மற்றைத் துறைகளின் முடிவுஞ் சொல்லுந் துணி பொருள் - ஏனைச் சமயங்களின் முடிவுந் துணிந்து கூறும் பரம்பொருள் ; ஒரு சங்கை யின்றி - ஐயஞ் சிறிதும் இல்லாமல்.

170. நிற்கின்ற செல்வம் - எஞ்ஞான்றும் அழியாததாய பேரின்பச் செல்வம் ; நெறிநின்ற - நன்மையாகிய நெறியினின்ற ; கருதுவது - எண்ணுவது.

171. அரசியற்பாரம் பூரித்து - அரசாகிய இலக்கணமுடைய சுமையைத்தாங்கி ; எண்ணம் யாவும் சிற்றடிமைபுரிதி கருத்தனைத்தையும் குற்றேவல் செய்வதிற்செலுத்து.

172. பின்னவன் - சுக்கிரீவன் ; நின்ற பேரெழிலான் - தன் எதிரே நின்ற பேரழகனாகிய சீராமன் ; இவன் - சுக்கிரீவன்.

வாலி அங்கதனைத் தேற்றல்

173. தோன்றலும் இறத்தலுனும் - பிறப்பும் இறப்பும்; மூலத்தே முடிந்த - அனாதியிலே முடிந்தன, இவ் விழுதி - இத்தன்மையதான மரணம்.

174. பாலமை - சிறுபிள்ளைத்தன்மை; மேலொருபொருளு மில்லா மெய்ப்பொருள் - மிக்கார் ஒருவரும் இல்லாத உண்மைப் பொருள்; மைந்த மால்தரும் பிறவி- நோய்க்கு இவன் மருந்து வணங்கு என இயைத்துப் பொருள் கொள்க.

175. என்னுயிர்க் கிறுதி செய்தான் - என் னுயிரைவாங்கி னன்; இறையும் எண்ணுது - சிறிதும் எண்ணுது; உன்னுயிர்க் குறுதி செய்தி - உன் உயிர்க்கு உறு தியை நாடு; நிலைமை நோக்கிப் போதுதி - நன்னிலை மையை நாடிச் செல்; மன்னுயிர்க்கு உறுதி செய் தான் - நிலைபேறுடைய உயிர்கட்கு உறுதி செய்பவ னாகிய இறைவன்.

வாலி அங்கதனைச் சீராமன்பால் ஒப்பித்தல்

176. நெய்பூசிய நீண்ட வேலாயுதத்தை எந்திய சேனைகளை யுடைய கருநிறமுள்ள அரக்கர்களாகிய பஞ்சின் மூட்டைக்கு நெருப்புப் போன்றவன், தோளையுடை யவன், குற்றமற்ற செயல்களையுடையவன், என்பது முதல் இரண்டடிக்குப் பொருள்; புலவ - சீராம (அண்மைவிளி); மற்றுன் கையடையாகும் - இவன் (அங்கதன்) நின் அடைக்கலப் பொருளாகும்.

அங்கதன் சீராமனை வணங்கலும் வாலி உயிர் துறத்தலும்

177. தன்னடி-சீராமனது திருவடிகளில்; தாமரைத்தடங்க- ணன்-சீராமன்; அக்கிலை துறந்து-அவ்வுடம்பைவிட்டு.

பாணம் சீராமனிடம் மீளுதல்

178. *கையவன் நெகிழ்த்தலோடும் - வாலி சீராமபாணத்தைப் பிடித்திருந்த கையைத் தளரவிடுதலும் ; ஆவம் - அம்பறாத்தூணி.*

சுக்கிரீவனுக்கு முடிசூட்டச் சீராமன் இலக்குவனை ஏவுதல்

179. *அது காலத்தில் - அப்பொழுது ; அருட்கு நாயகன் - அருளுக்கு இடனாகிய சீராமன் ; மதிசால் தம்பியை - அறிவு நிரம்பிய தம்பியான இலக்குவனை ; வல்லை ஏவினான் - விரைவால் ஏவினின்றனன்.*

இலக்குவன் சுக்கிரீவனுக்கு முடி சூட்டல்

180. *ஆசிவழங்க - ஆசிகூற ; வானுளோர் - தேவர் ; நறைதோய் நாண்மலர் - தேன் தங்கிய அன்றலர்ந்த மலர்கள் ; நன்னெறிக் கிறையோன் - சீராமன் ; இளையோன் - இலக்குவன் ; ஏந்தல் - சுக்கிரீவன் ; மௌலி சூட்டினான் - மகுடம் புனைந்தனன்.*

மகுடம் சூடிய சுக்கிரீவன் சீராமனை வணங்குதல்

181. *பொன்மா மௌலி - பொன்மகுடம் ; பொய்யிலான் - வாய்மையையுடைய இறைவனாகிய சீராமன் ; தாழும் வேலை - வணங்கு மளவில் ; நாயகன் - இறைவன் ; முதிர்ந்த வேதங்கட்கு எல்லையாகிய சொற்களாற் சொல்லி யருளினான் என்பது நான்கா மடியின் பொருள்.*

சுக்கிரீவனுக்குச் சீராமன் நற்புத்தி கூறல்

182. *ஈண்டுநின்றேகி - இங்கிருந்து சென்று; போரின் மாண்டவன் மைந்தன் - வாலியின் புதல்வனாய அங்கதன் ;*

183. தூய்மைசால் புணர்ச்சி பேணி - தூய்மை யமைந்த நட்பெய்தி; சேய்மையோ டணிமையின்றி - தூரமுஞ் சமீபமும் ஒழிந்து.

184. புகை யுடைத்து என்னின் - (மேலே காணப்படும்) புகையை யுடையதா யிருந்தால்; அங்கு பொங்கு அனல் உண்டு என்று உன்னும் மிகையுடைத்து என்று கூட்டிப் பொரு ளுரைக்க; உலக நூலோர் வினைய மும் - உலகநூல் வல்லார் நட்பும்; பயனுறு பண்பிற் றீரா - பயனமைந்த பண்பின் நீங்காத: பின்வரும் இரண்டடிகளை, 'பகை நட்பாக்கொண் டொழுகும் பண்புடை யாளன் - தகைமைக் கட்டங்கிற்றுலகு' என்னும் குறட்பாவோடு ஒப்பிடுக.

185. செய்வன செய்தல்-செய்தற்குரியனவற்றைச் செய்க; யாண்டுந் தீயன சிந்தியாமல் - வறுமைவந் தெய்திய ஞான்றும் தீயவற்றைச் சிந்தை செய்யாமல்; வைவன வந்தபோதும்-நிந்தையாவன வந்த ஞான்றும்; வசை யில் இனிய கூறல் - வசையில்லாதனவாகிய இனிய மொழிகளைக் கூறுக; மெய்சொலல் வழங்கல்-வாய்மை கூறல்; யாவும் மேவின வெஃகலின்மை-யாவும் விரும் பினவற்றை விரும்பலின்மை; உய்வனவாக்கி - உய் வனவாகச் செய்து.

186. சிறியரொன்று இகழ்ந்து - கீழோரொன் றிகழ்ச்சி செய்து; நோவு செய்வன செய்யல் - துன்பம் விளைப் பனவற்றைச் செய்யாதை; முற்றும் நெறியிகந்து- செய்யும் முறைமை தவறி; வெறியன வெய்தி - வெறுக்கத் தக்கன அடைந்து.

187. மாந்தர் - ஆடவர்; அங்கவர் - அம் மாதர்; இச் செய்- யுளை 'தாமகேது புவிக்கெனத் தோன்றிய, வாமமே கலை மங்கையால் வரும், காமமில்லை யெனிற்கடுங்

கேடெனும், நாமமில்லை, நரகமு மில்லையால்; என்னும் அயோத்தியா காண்டச் செய்யுளோடு ஒப்பிடுக. (மந்தரை சூழ்ச்சி - செய்யுள் - 21.)

188. நாயகனல்லன் - அரசன் அல்லன் ; நம்மை நனிபயந்தெடுக்கும் - நம்மைச் சாலப் பெற்றெடுத்த ; தாயென இனிது பேணி - தாயே என்று சொல்லும்வண்ணம் தாங்கி ; தாங்குவாரைத் தாங்குதி - காக்கவேண்டியவர்களைக் காப்பாற்று ; ஆயது தன்மை யேனும் - அதுவே தக்கதேனும் ; தீமையோரை - தீமை செய்து உழல்பவரை ; அறம் வரம்பிகவா வண்ணம் - அறத்தின் எல்லையினின்றும் வழுவாத வண்ணம் ; தீயன வந்தபோது - தீத்தொழில் நிகழ்த்திய வழி.

189. செய்த வினைதரத் தெரிந்த - முற்செய்த கன்மந் தரவந்தன ; பூவின் மேற் புனிதன் - பிரமதேவன்.

சீராமன் சுக்கிரீவனை நான்கு மாதங்கட்குள் வரும்படி வேண்டல்

190. ஆற்றுழி யாற்றி - நடத்து முறைமையி னடத்தி ; என்பால் விரசுக - என்பால் வந்தணுக ; வீர - சுக்கிரீவன் (அண்மை விளி).

சுக்கிரீவன் அரசாண்டமை கூறல்

191. ஆரிய னருளிற் போய் - இறைவன் ஆணையிற் சென்று ; அகன்மலை - கிஷ்கிந்தை ; சூரியன்மகன் - சுக்கிரீவன் ; மானத் துணைவரும் - பெருமையை யுடைய துணையாயினரும் ; அன்னாள் தாயென - (தாரை) அவளே தாய் போலவும் ; தந்தை - தந்தையாவான் ; முந்தை சீரியன் சொல்லே யென்ன - பழமையாகிய இறைவன் (சீராமன்) ஆணை என்னலாம்படி ; செவ்விதின் அரசு செய்தான் - செம்மையாக அரசு நடத்தி

னன். (மகா கவியாகிய கம்பர் தாரையைத் தாயெனச் சுக்கிரீவன் நினைத்ததாகக் கூறுகின்றனர். வால்மீகி சுக்கிரீவன் தன் தமையன் மனைவியாகிய தாரை-யைத் தன் மனைவியாகக் கொண்டனன் என்று கூறுகின்றனர்.)

சீராமன் இருசியமுக மலைக்குச் செல்லல்

192. வள்ளல் - இறைவனாகிய சீராமன்; வெள்ள வான் குடுமிக்குன்றம் - வெள்ளத்தை யுடைய வானின் ஓங்கிய சிகரத்தை யுடைய இருசியமுக மலை; மெய்ம்மை உள்ளுறு காதற் றம்பி - வாய்மை நிரம்பிய அன்பினை யுடைய இளையவன் (இலக்குவன்.)

சூரியன் தென்புறமாக ஒதுங்கல்

193. வானவன் ஒவியமே என ஒளிக் கவின்குலாம் தேவியை நாடிய முந்தி ஏவிய தூதென இரவி மாவியல் வட-திசை நின்று தென் திசைக்கு ஏகினன் என்று இயைத்துப் பொருள் கொள்க. தக்ஷிணாயனம் வந்தது என்பது கருத்து. முந்தி - வானர வீரர்களைத் தூதாக அனுப்புதற்கு முன்னமே; சூரியன் இயல்பாகவே தென்புறமாக ஒதுங்கத் தொடங்கியதைக் கவி சூரியன் தெற்கு முகமாகச் சென்றது இராவணன் எடுத்துச் சென்ற சீதையைத் தேட அனுப்பப்பட்ட தூதென உவமை முகத்தாற் கூறுகின்றனர்.

மேக வருணனை

194. நிலம் தகளி (அகல்) யாகவும், கடல் நீர் நெய்யாகவும், பொன் மலை திரியாகவும் சூரியன் விளக்கமாகவும் எரியும் தீபத்தினின்றும், பிடித்த புகை (Soot) போன்றிருக்கின்றது மழைத்த வானம் என்று இச்

செய்யுளில் உருவகஞ் செய்யப்பட் டிருக்கின்றது. பையணைப் பல்தலைப் பாந்தள் - படம் அமைந்த பல தலைகளை யுடைய நாகம் (ஆதிசேடன்); மையெடுத் தது - மையை அப்பியது.

மழையின் வருணனை

195. தீர்த்தன் - சீராமன்; துள்ளி வெள்ளம் - மழைத் துளியாகிய வெள்ளம்; மேகமார்த்தமையை தேவர் களும் சீராமனுங் கூடித் தம் பகைமையைப் பேசி ஆரவாரித்தற்கும், அது மழை பெய்தமையைத் தேவர் கள் ஆய்மலர் தூர்த்தமைக்கும் உவமை.

உலர்ந்த மரங்கள் தளிர்த்தல்

196. யாவராலும் விரும்பப்படும் பொருளைத் தேடப் பிரிந்து சென்ற தலைவர் வந்து அருகேயுற, உயிர் பொருந்த உயிர்க்கும் மாதரேபோல் மழையின்மையால் உலர்ந்த கொம்புகள் எல்லாம் மழைபெய்தலால் தளிருடன் விளங்கின என்பது பொருள்; குழை - தளிர்.

வெண்காந்தள் மலர்தல்

197. பாடலம் - பாதிரி மரங்கள்; வறுமை கூர - (மலர்க ளில்லாமல்) பூவாமலிருக்கவும்; பகலவன் பசுமை கூர - சூரியன் குளிர்ச்சி யடையவும்; கோடல்கள் - வெண்காந்தள்; பெருமை கூர - சிறப் பெய்தவும் (புஷ்பிக்கவும்), குவலயம் - குவளை, மயில்கள் திரு வுறக் கிளர்ந்தார் போன்று ஆடின எனவும், குயில்கள் கேடுறத் தளர்ந்தார் போன்று அடங்கின எனவும் இயைக்க; பாதிரி மரம் இளவேனிற் காலத்தில் பூப்பது.

செங்காந்தள் மலர்தல்

198. *நானிறச் சுரும்பு* - பல நிறங்களையுடைய வண்டு ; *நவமணி யணியிற் சார* - நவமணிகள் பதித்த அணிகளிற் பொருந்த ; கார்காலத்தில் செங்காந்தள் மலர்கள் மலர்ந்து சாய்ந்திருத்தல், பூமிதேவி கார்காலத்தைப் பார்த்து இது (கார்காலம்) வசந்த காலத்தினும் சிறந்ததாயிருக்கின்றது என்று வியந்து அவ் வசந்த காலத்தை நோக்கி 'இனி நீ வேண்டா' என்று தடுப்பதுபோன் றிருக்கின்றது என்பது பின்னிரண்டடியின் பொருள்.

199. செங்காந்தள் மலரில் கொன்றை மலரும் இந்திரகோபமும் தங்கி யிருத்தல் வண்டுகள் இசை பாடுவதைக் கேட்டுப் பூமிதேவி தன் கைகளை உயரவெடுத்து அவற்றில் பொன்னையும் மாணிக்கத்தையும் ஏந்திக்கொண்டு அவ்வண்டுகட்குப் பரிசு கொடுத்தலை ஒத்திருக்கின்றது என்று உவமை கூறப்பட்டிருக்கின்றது. கொன்றை - பொன்னுக்கும், இந்திரகோபம் மாணிக்கத்திற்கும் உவமை.

சீராமன் சீதையை நினைத்து இரங்கல்

200. *பொருவானவன்* - ஒத்த திருமேனியை யுடைய சீராமன் ; *தூவியன்னமன்னாள்* - சீதை ; *அயிர்த்து* - ஐயங்கொண்டு ; *புலம்பினன்*, அயிர்த்தான் எச்சமுற்று.

மயிலை நோக்கி இரங்கல்

201. *அயிலே விழியார்* - வேலே யன்ன கண்ணையுடையவர்; *விளையாரமிழ்து* - சுவை விளைகின்ற அருமையாகிய அமுது; *குயிலே மொழியார்*-குயிலையொத்த சொல்லை யுடைய சானகி ; *ஒருவேன்* - தன்னந் தனியேனாகிய யான் (சீராமன்) ; *வலியாடுதியோ* - வருத்தாநிற்பையோ.

கோன்றையை நோக்கி இரங்கல்

202. ஒன்றைப் பகராய் - ஒன்றனையுஞ் சொல்லாய்; குழலுக்குடைவாய் - (சீதையின்) கூந்தலுக்குத் தோல்வியெய்துவாய்; வன்றைப்புறு நீள் வயிரத்தினையோ - வன்மையாகப் பொருந்தியிருக்கின்ற மனவயிரமுடையாய்; கொன்றைக் கொடியாய் - கொன்றையாகிய கொடியாய்; கொணர்கிற்றிலையோ - சானகியைக் கொணரும் வன்மையுடையை யல்லையோ.

வாடைக்காற்றுக்கு இரங்கல்

203. ஒடைவாள் நுதலினாள் - பட்டமணிந்த நெற்றியையுடைய சீதை; ஆடக நவ்வி - பொன் மான்; வாடையாய்க் கூற்றினரும் உருவினை மாற்றிவந்தார் - நமனரும் வாடைக் காற்றாகித் தம் உருவினை மாறுபடுத்து வந்தனர்; கூற்றுவன் வாடைக்காற் றுருவமாய் வந்து வருத்துகின்றான் என்பது கருத்து.

இலக்குவன் சீராமனைத் தேற்றல்

204. என்ன இத்தகைய பன்னி - என்று இன்னவற்றை எடுத்துச் சொல்லி; ஈடழிந்து - பெருமைகெட்டு; தன்னை யொப்பானை - தன்னையே நிகர்த்த சீராமனை; தகையழிந்து-பெருமை கெட்டு; தம்பி - இளையோன்; தேற்றுவான் - தேற்றுவானாய்.

205. காலநீளிது - காலம் நீடித்திருக்கின்றது; காருமாரியும் - துளிக்கும் மழையும்; மடந்தை - சானகி; சால நல்லுணர் கேள்வி வீர - நிரம்பிய நல்லுணர்ச்சியோடு கூடிய கேள்வியில் சமைந்த வீரனே.

206. காது கொற்றம் - வருத்துகின்ற வெற்றி; கலக்கும் - சேரும்; வேதனைக்கிடமாதல் - துன்பத்துக்கிடமாதல்; போது பிற்படல் உண்டு - பொழுது பிற்பட நிகழ்-

வது உண்டு ; யாதுனக்கு இயலாதது - நினக்கு முடியாத காரியம் யாது ; வருந்தல் - வருந்தாதே.

சீராமன் உத்தரம்

207. தூநிறச் சுடுசரம் - ஊன் தங்கிய ஒள்ளிய சுடுகின்ற பாணங்கள் ; வானுறப் பிறங்கிய - வானளாவி விளங்குகின்ற; யான் உறக்கடவதே-யான் வருந்தக்கடவதோ; வேல் நிறத்துற்றது-வேற்படை மார்பில் ஊன்றியது.

208. ஈண்டு நின்று - இங்கு நின்று ; வேண்டுவதன்றிது-இவ்வாழ்க்கை விரும்பத்தக்கதன்று ; தெற - வருத்த.

209. தெருமருகின்றது - வருந்துகின்றது ; செறுநர் - பகைவர் ; உய்கலார் - பிழையார் ; உருமென வொலிபடும்-இடியென ஒலிக்கும் ; விலோய் - வில்லை யுடைய இலக்குவனே.

இலக்குவன் கூற்று

210. ஆகுநர் யாரையும் - சார்பாயினோர் யாவரையும் ; ஏகுறு நாளிடை யெய்தி - போகத் தக்க நாளில் அடைந்து ; எண்ணுவ - எண்ணத் தக்கவற்றை ; சேகற - குற்றமற ; தெருட்டி - தேற்றி ; வழுவற்பாலதோ - தவிரற்பான்மையதோ.

211. பைந்தொடி-பசுமையாகிய பொன் வளையலை யணிந்த சானகி ; சுந்தரத் தனுவலாய் - சீராமனே.

மேகம் வெளுத்தமை கூறல்

212. மன்கவில்-கெடுதல் இல்லாத ; அற்றபோது-பொருள் இல்லாத காலத்து ; என்கவில் இரவலர் - நிந்தனை இல்லாத யாசகர்.

213. பேர்வினைப் பொருள்தனையறிந்து - பெயர்தலையுடைய வினையெனப்படும் பொருளினைத் தெரிந்து ; பெற்ற-

தோர் ஆய்வினை - பெற்றதாகிய ஓர் ஆராய்ச்சியை ; ஆசுறு - குற்றமுடைய.

அன்னப் பறவை பறந்தமை கூறல்

214. மன்னவன் தலைமகன் - சக்கரவர்த்தித் திருமகன் ; பொன்னினை - சீதாபிராட்டியாரை ; நாடிய போதும்- தேடிப் போவோம்.

நீர் தெளிதலும் மீன் பிறழ்தலும்

215. மாதவர் - பெருந் தவமுடையார் ; நெஞ்சென நீர் தெளிந்தன என இயைக்க ; ஆடன்மீன் பேதையர் அஞ்செனக் கண்ணெனப் பிறழ்ந்த என இயையும்.

சீராமன் இலக்குவனை நோக்கிப் பகர்தல்

216. முன்னை வீரன் - சீராமன் ; இளவல் - இலக்குவன் ; மொய்ம்பினோய் - வலிமையை யுடையவனே (இலக்குவன்) ; தாங்கிய மன்னன் - சுக்கிரீவன்.

217. நன்றி கொன்று -செய்த நன்றியை மறந்து ; ஒன்றும் மெய்ம்மை - பொருந்திய சத்தியத்தை ; உரை பொய்த்துளான் - பேச்சுத் தவறிய சுக்கிரீவன் ; அவன் - சுக்கிரீவன்.

218. கணடகர் - பாவிகள் ; உங்கள் அம்பு - உங்கள் தலைவனாகிய வாலியைக் கொன்ற அம்பு ; இதனை 'எம்பி. மேற் சீறி யென்மேல் ஏவிய பகழி யென்னுங் கூற்றினை யேவலென்றான்' என்னும் 164-ஆம்செய்யுளோடு ஒப்பிடுக. (பார் பக்கம் 63) ; ஆணை-கட்டளை.

219. நஞ்ச மன்னவர் - விடம் போன்ற கொடிய பகைவர் ; வஞ்சமன்று - கொடுமை யன்று ; அஞ்சி யல்லது - பயந் தல்லாமல் ; ஒன்று ஆர் அறிவார்-அறம் முதலியவற்றை யாவரால் அறியக் கூடும் ; நிலாவ - அவர்கள் மனத்தில் நிலைபெற.

220. *நீதி யாதி - நீ (இலக்குவன்) நீதியையுடையவனுயிரு; நிகழ்த்திளே நின்று - நீதியை எடுத்துக் கூறியிருந்து; அது - நீதிச் சொற்கள்; வேதியாத பொழுது - (அவர்கள் மன நிலையை) மாற்றாதபோது; சாதியாது - சண்டை சாதிக்காமல்; அவர் சொற்றரத் தக்களே - அவர் (வானரர்கள்) சொல்லுவதை (என்றும் வந்து) சொல்லத் தகுந்தவனுகின்றாய்; போதியாதி - செல்; புகழ்ப் பூணினுன் - சீராமன்.*

சீராமன் கட்டளேப்படி இலக்குவன் செல்லுதல்

221. *ஆணே சூடி - சீராமனது கட்டளையை மேற்கொண்டு; இறை பாணியாது - சிறிதும் தாமதியாமல்; பாழ் படாத் தூணி - அம்புகள் நிறைந்த அம்பறாத் தூணி; தொட்டு - பிடித்து.*

இலக்குவன் வருகையை வானரங்கள் அங்கதற்குச் செப்பல்

222. *கண்ட - இலக்குவன் வருகையைப் பார்த்த; மண்டி ஓடினர் - நெருங்கியோடினர்; வாலி மகன் - அங்கதன்.*

அங்கதன் இலக்குவன் வருகையைச் சுக்கிரீவனுக்கு அறிவிக்கச் செல்லல்

223. *தோன்றல் - அங்கதன்; ஆண் டொழிலான் - இலக்குவன்; அறிவான்-அறிய; மருங்கெய்தினுன்-இலக்குவனருகே சார்ந்தனன்; மன்னன் மைந்தன் - தசரதன் மைந்தனுகிய இலக்குவன்; தாதை - சுக்கிரீவன்.*

அங்கதன் சுக்கிரீவனிடம் செப்பல்

224. *எந்தை - சுக்கிரீவனே; அவ்விராமன் - வாலியை வதைத்த சீராமன்; திருமுகம் தந்தளிப்ப - திருமுகம் குறிப்பிக்க; உன் மனக் கருத்து - உனது எண்ணம்.*

தாரையின் கூற்றுக்கள்

225. எய்தி-(அங்கதன் முதலியோர் தாரையை) அடைந்து ; செய்தற்கு அருநெடுந் தீயன செய்திர் அன்னவை நொய்தின் நீக்கவு நோக்குதிர் உதவிகொன்றீர் உய்திர் போலும் என்று இயைத்துப் பொருள் கொள்க.

226. உமை படை கூட்டும் என்று கொற்றவன் கூறிய நாள் திறம்பின் என்று இயைத்துப் பொருள் கொள்க. நும் நாள்-(ஆயுள்), திறம்பும் (அழியும்), என (என்று சொல்லக்), கேட்டிலீர் ; இனி கிடைத்திர் - (அகப்-பட்டுக்கொண்டீர்) காண்டிர் காண்பீர்கள்).

227. விற்கோலி - வில்லை வளைத்து ; வாலிய - மேன்மையான ; நும் புறத்திருப்பார் - நும்மால் (புறக்கணிக்கப்பட்டவர்); வாலிய செல்வம் கொடுத்தவர் போலும் நுங்கள் தன்மையினோர்க்கெலாம் இது சாலுமாக (அமையாதென்றபடி) என்று இயைக்க.

228. தேவி - சீதை ; தேவரிற் சீரியோன் - சீராமன் ; பாவியாது - கருதாமல் ; நும் காவி நாண்மலர்க் கண்ணியர் காதல் நீர் பருகுதிர் போலும் என்று கூட்டுக.

229. மெய் திறம்பினீர், உதவியைச் சிதைத்தீர் உங்கள் தீவினை நேர்ந்ததால் நிறம்பொலீர் (புகழாற் பிரகாசிக்க மாட்டீர்) என்று இயைத்துப் பொருள் கொள்க ; மறஞ் செய்வான் - போர்வீரனுய சீராமன்.

இலக்குவன் வருகையைக் கண்ட அங்கதன் முதலியோர் தாரையைச் சூழ்ந்துகொள்ளல்

230. ஆண்டகை யாளி - இலக்குவன் ; எய்தினன் என்ன செய்குவது என்றனர் என இயைக்க.

தாரை இலக்குவன் எதிரே செல்லல்

231. அயல் நீங்குமின் - அப்பாற் செல்லுங்கள்; யான் நேர்ந்து - யான் எதிர் சென்று; வீரனுள்ளம் விளக்குவல் - இலக்குவன் மனத்தை அறிந்து வருவல்; பேர நின்றனர்-ஒதுங்கி நின்றனர்; பேர்கலா-நிலையினின்றும் நீங்காத.

இலக்குவனை நோக்கித் தாரை கூறல்

232. மைந்தன் - இலக்குவன்; அணங்கனார்தம் பொது - வானர மகளிரது கூட்டம்.

233. அந்தமில் கால நோற்ற ஆற்றல் - அளவற்ற காலம தவஞ்செய்த மகிமை; வாழ்ந்தேம் - மேம்பட்டேம்; உறுதி - நற்பயன்.

234. வீர! நீ வெய்தின் வருதல் நோக்கி, செய்திதான் உணர்கிலாது சேனை வெருவுறும் திருவுளம் தெரித்தி என்றாள் என இயைக்க; ஆழி வேந்தன் - சீராமன்.

இலக்குவன் தாரையை நோக்குதல்

235. அருள்வர - கருணையுண்டாக; இறை - சிறிது; தார்குலா மலங்கன் மார்பன் - இலக்குவன்; தாயரை - சுமித்திரை முதலியோரை.

இலக்குவன் தாரைக்கு உத்தரம் கூறல்

236. இருவர் - சுமித்திரையும் கோசலையும்; தன் திருத்தமையனைக் கான் ஏவிய கைகேயியை இலக்குவன் தாயென நினையாமையின் இங்கே இருவர் என்றார்; வினவினன், புனை குழலாள் - தாரை.

237. தேவி - சீதை; மானவன் - மனு குலத் துதித்தோனாகிய சீராமன்; அருக்கன் மைந்தன் - சுக்கிரீவன்;

அமைதி - உள்ளக் கருத்து; அறியென - அறிந்து வா வென்று இறைவன் கட்டளையிட; மேனிலையனை யான்-அரசச் செல்வத்தில் ஆழ்ந்திருக்கும் சுக்கிரீவன்.

தாரையின் மறுமொழி

238. அயர்ந்தா னல்லன் - மறந்தவனல்லன்; ஊறுமா நோக்கி - வந்து சேர்தலை எதிர்பார்த்து; உதவிமா-றுதவி யுண்டோ - நீங்கள் செய்த பேருபகாரத்திற்கு அவன் செய்யும் வேறு உதவி யுண்டோ (இல்லை என்றபடி)

239. உள்ளத்தீர்கள் - இராமலக்குவர்; பகை - வாலியாகிய பகைவனை

240. தேவியைத் தேண்டுவார்த் தேடுகின்றீர் என இயைக்க. தேவி - சீதை; தேண்டுவார் என்பதில் ணகரம் விரித்தல்.

அநுமான் இலக்குவனருகே சார்தல்

241. அவன் - தாரை; நன்றுணர் கேள்வியாளன் - இலக்குவன்.

இலக்குவன் அநுமானை வினவுதல்

242. அந்தமில் கேள்வி - எண்ணிறந்த கலைகளைக் கற்றுணர்ந்த அறிவு; முந்திய - முற்பட்ட; எந்தை - இலக்குவன். (அண்மை விளி).

அநுமான் மறுமொழி

243. சிதைவு அகல் - கெடுதல் இல்லாத; இச் செய்யுளை 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை-செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்னும் குறட்பாவோடு ஒப்பிடுக.

244. உதவாமல் - (தான்) ஒரு உபகாரமும் செய்யாமலிருக்கையில்; மற்று - வேறு உபகாரம்; செறுநர் - பகைவர்; இச் செய்புளின் முதலடியை 'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் - வானகமு மாற்றலரிது' என்னும் குறட்பாவோடு ஒப்பிடுக.

245. வேண்டலர் - பகைவர்; கேண்மை - நட்பு; ஆண்டகை யருளின் மொய்ம்பின் ஐய - இலக்குவனே; நீர் - இராமலக்குவர்; அளித்த - வாலி வதஞ் செய்து கொடுத்த; உன் முன்வந்த கவி - உனக்குத் தமையன் என்று சொல்லும் முறைமையினையுடைய சுக்கிரீவன்.

இலக்குவன் கூற்று

246. முனியாதான் - சாந்த மூர்த்தியாகிய ஸ்ரீராமன்; முடிதிர் - அழிந்து விடுவீர்கள்.

அநுமான் இலக்குவனைச் சுக்கிரீவனிடம் வரும்படி வேண்டல்

247. தோன்றல் - இலக்குவன்; ஆன்ற நூலறிஞ - இலக்குவனே; என்றது - எற்றுக்கொண்டது; உன் தம் முன் - சுக்கிரீவன்.

இலக்குவன் வருகையை அங்கதன் சுக்கிரீவனுக்கு உணர்த்தல்

248. தாதை - சுக்கிரீவன்; தடக்கை வீர - சுக்கிரீவன்; மானவற்கு இளையோன் - இலக்குவன்.

அங்கதன் மறு மொழி

249. நீ - சுக்கிரீவன்; உணர்வு இற்றிருந்தாய் - மதி மயங்கியிருந்தனை; புணர்ப்பது - ஆராயத்தக்கது; அவனை - இலக்குவனை.

கள்ளுண்டலால் வரும் கேடு

250. உறவுண்ட சிந்தையான் - சுக்கிரீவன்; நீர்வான் தீர; எச்சமுற்று.

251. தீவினை ஐந்து - பஞ்சமா பாதகம்; திருக்கு - குற்றம்; மயக்கின்மேல் மயக்கு - பெரு மயக்கத் திற்குக் காரணமான மதுபானம்.

252. ஒருவன் தன் சொரூபத்தை அறிந்து கொண்ட அள-வில் அவனுக்குப் பிறவி நீங்கும் என்று வேதங்களும் ஏனைய சாஸ்திரங்களும் கூறும் என்பது முதலிரண்டு அடியின் பொருள்; நறவு உண்டு - கள்ளுண்டு.

253. அளித்தவர் - அடயம் என்று அடைந்தவரைக் காத்த வர்; அஞ்சு நெஞ்சின் உடைத்தவர் - பஞ்சேந்திரி யங்களை அடக்கினவர்; அறிவு மூழ்கிக் குளித்தவர் - அறிவு விசாலப்பட்டவர்; இன்ப துன்பம் குடைந் தவர் - இன்ப துன்பங்களை ஒரு நிகரனவாகத் துருவி ஒதுக்கியவர்.

254. மரபில் கொட்பும் - முறைமைக்கு மாறான வலியும்; கஞ்ச மெல்லணங்கு - தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமி; நஞ்சைவிடக் கள் கொடிது என்றல் நான்கா மடியின் பொருள்.

255. நறவால் கேடுவரும் எனச் சொல்லக் கேட்டனன்; அதுகாட்டியது (அனுபவத்தில் வந்தது) என்று இயைத்துப் பொருள் கூறுக. விரைவில் வந்தடைந்த வீரன் - இலக்குவன்.

சுக்கிரீவன் இலக்குவனை எதிர் கொள்ள அரண்மனை வாயிலில் நிற்றல்

256. அண்ணற்கு இலக்குவற்கு; அவன் - அங்கதனை; நிறைந்த சீரான் (சுக்கிரீவன்) நெடிய வாயிற் கடைத்

தலை தன் துணைத் தேவிமாரும், தமரொடுந் தழுவ, நின்றனன் என இயைக்க.

இலக்குவன் வரக் கண்ட கிட்கிந்தை நகரின் நிலைமை

257. *உரைத்த செஞ்சாந்து - அரைத்த சந்தனம் ; சுண்ணம் - வாசனைப் பொடி ; ஊழின் - வரிசையாக ; தீபசாலம்-விளக்கின் கூட்டம் ; இயங்கின-நிறைந்தன.*

சுக்கிரீவனும், இலக்குவனும் சந்தித்தல்

258. *அரிக்குலத் தரசு - சுக்கிரீவன் ; தோன்றல் - இலக்குவன் ; தருமத்தின் அமைதி உன்னுவான் - தருமத்தின் நிலையைக் கருதுபவனாகிய இலக்குவன்.*

சுக்கிரீவன் இலக்குவனைச் சிங்காதனத்தமர வேண்ட அவன் உடன்படாமை

259. *கல்லணை மனம் - கல் போன்ற மனம் அல்லது கல் தன் இனம் என்று சாரும் மனம் ; எம்பிரான் - சீராமன் ; புல் அணை - புற் படுக்கை ; பொன் செய் பூத்தொடர் மெல்லணை - பொன்னாற் செய்து மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஆதனம்.*

சுக்கிரீவன் இலக்குவனை நீராடி உணவு கொள்ள வேண்ட அதற்கு அவன் மறுமொழி கூறல்.

260. *வயிறு மீக்கொள - வயிறு நிரம்பியிருக்க ; இருத்தும் - நாம் உயிரோ டிருக்கின்றோம் ; அருத்தி - ஆசை ; அவலம் - வருத்தம் ; கருத்து வேறு உற்றபின் - துன்பம் அடைந்து மனம் வேறுபட்டபோது.*

261. *முருங்கு தீ - பற்றி யெரியும் நெருப்பு ; அரசன் தேவி - சீதாபிராட்டி.*

262. பரமன் - சீராமன் ; நச்சிலேன் - விரும்பமாட்டேன்.

263. நன்றுணைக் கோமகன் - சீராமன் ; இறை - சிறிதும்.

சுக்கிரீவன் அநுமாரிடம் சொல்லல்

264. இரவி கான்முளை பொருக்கென எழுந்தனன் என இயைக்க ; இரவி கான்முளை - சுக்கிரீவன் ; போதன் முன்னுவான் - சீராமனிடஞ் செல்ல எண்ணினவனாகிய சுக்கிரீவன்.

சுக்கிரீவன் சீராமனிடஞ் சார்தல்

265. நெறிவலோய் - நீதி மார்க்கத்தில் வல்லவனாய அநுமானே ; நாயகன் - சீராமன்.

266. கோன்கழல் ஐயவிற்குமரனும் தானும், சேனை பின்பு ஒழிய, அங்கதன் கைதொடர்ந்து அயல் செல, காதல் முன் செல நொய்தினில் மானவன் இருந்த மால் வரை எய்தினன் எனக் கூட்டிப் பொருள் உரைக்க. மானவன் - சீராமன் ; விற்குமரன் - இலக்குவன் ; தான் - சுக்கிரீவன்.

சுக்கிரீவன் சீராமனை வணங்கல்

267. பிறிவருந் தம்பி - இலக்குவன் ; எந்தல் - சீராமன்.

வணங்கிய சுக்கிரீவனைச் சீராமன தழுவிக்கொள்ளுதல்

268. பொற்றடக் கையான் - அழகிய பெரிய கைகளினை, சீராமன் என்று பொருள் கொள்ளலு மாகும்.

சீராமன் சுக்கிரீவனை க்ஷேமம் வினுதல்

269. இயல்பினின் இயைந்தவே - இடையூறின்றிச் செவ்வனே நடைபெறுகின்றதோ ; வெயிலிலதே - பகைவரில்லையோ ; குடை - அரசாட்சி.

சுக்கிரீவன் உத்தரம்

270. நினதின்னருள் உதவிய செல்வம் - உன் கிருபையால் யான் பெற்ற செல்வம்; மன்னவ - சீராமனே.

சீராமன் கூற்று

271. திருவுறை மார்பன் - சீராமன்; ஒருவருங் காலம் - நீங்குதற்கரிய கார் காலம்; தீர்ந்ததேயும் வந்து - வந்து முடிந்ததாயினும்; உன் உரிமையோர் உரை - நீ சுதந்தரத்துடன் சொல்லுஞ் சொற்கள்; தாழ்வு - தாமதம்; பரதனீ - பரதன் போல்பவனாகிய நீ; இறைவன்பால் பரதனே போல் சுக்கிரீவனும் பரி வுடையவ னாதலின் அவனைப் பரதன் என விசேடித்துக் கூறினார்.

சீராமன் சுக்கிரீவனைச் சேனையுடன் வரச் சொல்லல்

272. நிற்கதோர் - நிற்கு அது ஓர்; அமைதி - அமைந்திருத்தல்; பெரும்பகல் இறந்தது - வெகு காலமாய் விட்டது; நின்படை பொருந்துழி - உன் சேனைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்த காலத்து.

சேனையின் சிறப்பு

273. மண்ணின்மேல்வந்த வானர சேனையின் வரம்பு, எண்ணின் (கணக்கிடத் தொடங்கின்) நான்முகர் எழுபதி னுயிரர்க்கு இயலா, உண்ணின் (உண்ணத் தொடங் கின்) அண்டங்கள் ஓர் பிடி உண்ணவும் உதவா. கண் ணினால் நோக்குறின் கண்ணுதலானையும் (சிவபெரு மானையும்) கடக்கும் என்று இயைக்க - நாற்றிசை களிலும் பரந்தெழுந்த சேனையின் பெருக்கைக் குறிப்பிப்பான் நான்கு திசைகளையும் நோக்கியிரா நின்ற நான்கு முகங்களையுடைய பிரமதேவனைக் கூறினார்.

274. ஒடிக்குமேன் - ஒடிக்க வேண்டும் என்று விரும்பின்.

275. குப்புறல் - தாண்டிக் குதித்தல்; கொற்றவன் - சுக்கிரீவன்; ஊறும் - மேன்மேல் பெருகுகின்ற.

சுக்கிரீவன் சீராமனுக்குச் சேனைத் தலைவனைக் காட்டல்

276. மீண்டு - திரும்பி வந்து; வீர - சீராமனே; ஆர்த்து உளைத்து - ஆரவாரஞ் செய்து.

சுக்கிரீவனது சேனையின் சிறப்பு

277. அத்தி - சமுத்திரம்; வித்தகர் - அறிவுடையார்; பத்திரட்டி நன்பகல் - இருபது நாள்.

278. நாம் - இராமலக்குவர்; அலங்கலாய் - மாலையையுடை இலக்குவனே.

279. ஈசன் - திருநெடுமால்; வாச மாலையாய் - இலக்குவனே; 'சமயங்கள் பிணங்குறும் பிணக்கை' என்பதனை 'ஊழ்கொண்ட சமயத்தன்னான் உருவுகண்டாரை ஒத்தார்' என்னும் அடியோடு ஒப்பிடுக. பால காண்டம் உலாவியற்படலம் - செய்யுள் (19).

280. எந்த உலகத்தில் எந்தக் காரியம் செய்ய வேண்டுமெனினும் அக் காரியம் இவர்கட்கு எளிதில் முடியும் என்பது முன்னிரண்டடியின் பொருள்.

281. தரங்க நீரெழும் - அலைகளையுடைய நீரில் தோன்றும்; உறையிட - உறையிட்டுக் கணக்குப் பார்க்க.

சீராமன் சுக்கிரீவனை வினைதல்

282. வகை - அணி வகுப்பு; நிரைந்து - பெருங் கூட்டமாக; அறுதி சமைந்ததோர் தொகை - அளவாக ஏற்பட்டதொரு கணக்கு.

சுக்கிரீவன் உத்தரம்

283. ஏற்ற வெள்ளம் - பொருந்திய சேனை சமுத்திரம்; எழுபதினிற்ற - எழுபது வெள்ளம் என்னும் தொகையினுல் முடிந்தது; ஆற்றலாளர்-கணிதத்தில் வல்லவர்.

சீராமன் மேல் நடக்க வேண்டுவதைப் பற்றிச் சொல்லல்

284. எரி கதிர் மைந்தன் --சுக்கிரீவன்; நெறி சென்றிழைப்பன - வழியின்கண் சென்று தேடுவனவற்றை.

சுக்கிரீவன் கட்டளையிடல்

285. அவன் - சுக்கிரீவன்; நின் தாதை - வாயு; தவன வேகம் - மிகுந்த வேகம்; தாழ்த்தனை - தாமதித்திருக்கின்ருய்.

286. குட திசை - மேற்குத் திக்கு; வாசவன் இடதிசை - இந்திரனுக்குரிய இடமாகிய கிழக்குத் திக்கு; விறல்- வலிமை.

287. ஒருமதி முற்றுறுதமுன் - ஒரு மாதம் முடிவதற்குள்; இவ்விடை முற்றுதிர் - இவ்விடம் வந்து சேருங்கள்.

சுக்கிரீவன் சேனைகட்குச் சீதையைத் தேட வேண்டிய இடங்களைக் குறிப்பித்தல்

288. மான் - மிருகங்கள்; புத்தீர்த்திட்டலையாமல் - புத் என்னும் நரகத்தில் இழுக்கப்பட்டு (போய்), அலையாமல்; புலவர் நாடு - தேவலோகம்.

289. அரன் - சிவபெருமான்; அதிகன் - சிறந்தவன்; பரகதி - நற்கதி; அரன் அதிகனு யிருக்க உலகளந்த அரியதிகன் என்று உரைக்கும் அறிவிலார் என்பது மற்ருேர் உரை; சுரநதி - ஆகாய கங்கை.

290. நல்லறத்துக் கீருய் - சிறந்த தருமங்கட்கு வரம்பாகி ; வேறுபுடை சுற்றுந் துணையின்றி - தனக்குச் சமமாகக் கூறும் பொருள் வேறு இல்லாமல் ; உடை - வேல மரம்.

291. எவ்வினையும் - எத் தொழிலும் ; இமையோர் ஏத்தும் திரு - தேவர்கள் புகழும் பெருஞ் செல்வம் ; இடுபதம் தேர் சிறுமை - (பிறர் பிச்சையாக) இடும் சோற்றை எதிர்நோக்கும் தாழ்வான தரித்திரம் ; கருவினையது - அஞ்ஞானத்தது ; அது - பிறவி ; கடையில் ஞானம் - முடிவில்லாத அறிவு.

292. கோடுறு மால்வரை - சிகரங்களையுடைய திருவேங்கட மலை ; உம் நெடிய கொடுமை - உம்முடைய கொடிய பாவங்கள் ; சேடுறு - பெருமை தங்கிய ; பொன்னி - காவிரி.

293. துறக்கமுற்ருர் மனம் என்ன - சுவர்க்க மடைந்தவர் மனம் தூயவாதல் போல ; தொல்லை மறக்கமுற்ருர் - பழவினையை மறந்தவர்.

294. பொதியத் திருமுனிவன் - அகத்தியன் ; நாகக் கன்று - யானைக் கன்று.

295. அவதி-எல்லை ; தேண்டி-தேடி ; நீண்டவன்-சீராமன்.

சீதாபிராட்டியின் கால் விரல்களின் வருணனை

296. பவளம் - கால் விரல்கட்கு உவமை ; மதியம் - நகங்கட்கு உவமை ; ஏற்பில - உவமை யாகமாட்டா.

புறவடிகள்

297. மதியறிபுலவர் - நூலறிந்த புலவர் ; அல்லன - ஆமையல்லாத வேறு பொருள்கள் ; யாம யாழ் - சாமத்தில் வாசிக்கும் யாழ் ; இழுக்கும் - ஒப்பாக மாட்டாது.

தோள்கள்

298. மாலை - ஒழுங்கான ; காம்பு-மூங்கில் ; அழுங்குவேன்-தோள்கட்கு ஒவ்வா வென வருந்துவேன் ; ஆலும் - ஆரவாரிக்கும்.

முன் கை

299. என்கை - என்று சொல்லுதல் ; இழுக்கம் - குறைவு.

300. ஏலக் கொண்டு-பொருந்த எண்ணி ; பிண்டி-அசோகு; குழை - தளிர்.

கை நகங்கள்

301. வெள்ளிய முறுவல்-வெண்மையான பற்கள் ; பொற் கொம்பு - அழகிய பூங்கொம்பு போன்ற சீதை ; நீரே மூக்கை என்னுதிர் என்று கொண்டு என இயைக்க ; இவறி - பகைத்து ; முருக்கின் பூ - பலாச மலர்.

கழுத்து

302. மங்கை - சீதை ; வாரிச் சங்கம் - நீரில் உண்டாகும் சங்கு.

வாய்

303. கிடை - செஞ்சடை (red pith) ; இலவம் - இலவ மலர் ; இத் தொடக்கம் - இவை முதலான பொருள் கள் ; சாலத் தவளம் - இவைகள் (பிராட்டியாரின் வாயை நோக்க) மிகவும் வெண்மை நிற முடையன ; குவளையொண் கண்ணி - சீதாபிராட்டியார்.

பற்கள்

304. முருந்து-மயிலிறகினடி ; அல்லது ஒன்று ஆவதில்லை வேறொரு பொருள் உவமையாவதில்லை ; சான்றோய்-அறமானே.

மூக்கு

305. ஓதி - பச்சோந்தி; எள் - எள்ளின் பூ; தொள்ளைக் குமிழ் - தொளையுள்ள குமிழம் பூ; எழுதுவார் - சித்திரம் எழுத வல்லவர்.

காது

306. வள்ளை-வள்ளைக்கொடி; கத்திரிகை-கத்திரிக்கோல்; மயிர்வினைக் கருவி - மயிர்த் தொழிலுக்குரிய கத்தி; வாம மயிர்வினைக் கருவியாகிய கத்திரிகை என்று கூட்டி உரைத்தலும் ஒன்று; பிள்ளைகள் - அறிவு நிரம்பாதவர்கள்.

கண்

307. பெரியவாய் - விலாசம் உடையனவாய்; பரவை யொவ்வா - கடலையும் உவமையாகப் பெருவாம்; இதனை 'கஞ்சத்தினளவிற் றேனும் கடலினும் பெரிய கண்கள்' என்னும் ஆரணியகாண்டச் செய்யுளோடு ஒப்பிடுக (மாரீசன் வதைப் படலம் செய்யுள். 70) தேவர்க்குந் தேவன் - திருமால்.

புருவம்

308. நோக்கினன்றி - தமக்குள் ஒன்றை யொன்று ஒத்தாலல்லாமல்; ஒன்று - வேறொரு பொருளை; கோள் மனக்கொள்கை; இச்செய்யுளின் இரண்டா மடியை 'சொல்லொக்கும் பொருள் ஒவ்வாவால் சொல்லலாம் உவமையுண்டோ' என்னும் ஆரணிய காண்டச் செய்யுளோடு ஒப்பிடுக (மாரீசன் வதைப் படலம். செய்யுள் 74.)

நெற்றி

309. சுக்கில பட்சத்துப் பிரதமையன்று தோன்றும் ஒரு பிறைச் சந்திரன் சீதா பிராட்டியாரின் நெற்றி

மழகை நினைந்து மனந்தாளாதவனாய்த் தான் அந் நெற்றிக்கு ஒப்பாகவேண்டுமென்று கருதிப் பல நாள் சிந்தித்துப் பதினாறு கலைகளும் நிரம்பவேண்டிய பௌர்ணமியன்றும் நிரம்பாது ஒரு கலையோ டிருப்-பின் அப்போது அச்சந்திரன் சீதையின் நெற்றிக்குச் சிறிது ஒப்பாகும் என்பது கருத்து.

முகம்

310. கொண்டலின் குழவி - கரிய மேகத்தின் குழவி (கூந்தல்); ஆம்பல்-வாய்; குனிசிலை-புருவம்; வள்ளை-காது; கெண்டை - கண்; தாளம் - பல்; இக்கேண்-மைய - இத்தன்மையனவாகிய பொருள்கள்; விதி-பிரமன்.

கூந்தல்

311. கார் - கருமேகம்; கழித்துக்கட்டி - வெட்டிக்கட்டி; கள் - தேன்; ஆவி - அகிற்புகை முதலியன; இருட் பிழம்பு - இருட் குழம்பு; நெறிவுறீஇ - நெறித்தலைப் பொருந்தி (பளபளப்பாக இருத்தல்); சும்மை-சுமை; இச் செய்யுளை 'இருள் சுடர் எதிராது எழிலியோர் இயல்பினி னிராது தண்டலை முடி கூடா-கருமணல் ஒழுக்கு நீவ நில்லாது கதித்த சைவலம் புழுகு அளையா - உருவளர் கமுகு கொன்றை மெல்லென்று என இவை ஒழித்து இயன்மணமே-மருவி மெய்யடி யார் மல இருட்செறிவு மடிக்குநின் பூங்குழல்போற்றி' என்னுஞ் செய்யுளோடு ஒப்பிடுக.

சீதையின் நல் இலக்கணம்

312. புல்லிதழ் - புறவிதழ்; பிறிது - வேறாகிய குற்றம்; சீதைக்குக் குற்றமேயில்லை என்பது கருத்து.

பேச்சு

313. வடித்த கைம்மலர் - பழகித் தேர்ந்த கை ; இன்னும் பெறுங்கொல் - இனியேனும் படைப்பனோ ; இதனை 'சிறை படுபூவை கிள்ளையும் ஒருவர் தேமொழி பயிற்றிடப் பயில்வ, அறைகுயில் எழுத்தின் ஆம்மொழி யறியாது அருஞ்சுவையாழ் சுதந்திரமன்று, உறை செய்தேன் செழும்பால் அமிழ்தமுஞ் செவியின்புறு என இவையெலாமொழித்து, நிறை சுவையினதாய்த் தன்னையே நிகர்த்து நிகழுநின் குளிர்மொழி போற்றி' என்னும் செய்யுளோடு ஒப்பிடுக.

314. மீன் நின்ற கண்ணி - சீதை ; நாநின்ற சுவை நாவிற்கு உரிய சுவை.

நடை

315. பூவரு-தாமரை மலரில் பழகுகின்ற ; புனைமடப்பிடி- அழகிய இளமையாகிய பெண் யானை ; தேறேன் - (உவமை சொல்லத்) தெளியமாட்டேன் ; தொன்மைப் பருணிதர் - பழைய புலவர்கள் ; நாவரும் கிளவிச் செவ்வி நடை - நாவிற்கு இனிமையாக வருகின்ற சொற்களை யுடைய காவியங்களின் அழகிய நடை; இச் செய்யுளை 'பயிலிய உலகம் படைப்பவன் ஊர்தியாகிய படர் சிறை யனமும், அயில் நுதி நெடுவேல் அண்ணலார் ஊர்தியாகிய மயிலும் நிற்சுமந்து, செயிரறு மயிராவணமும் நேர் பணிந்து திகழ் நடை திருந்த எசறப்பல் - உயிர்களும் வேத நெறியுளி ஒதுங்க ஒதுங்கு நின்னடை எழில் போற்றி' என்னும் செய்யுளோடு ஒப்பிடுக.

நிறம்

316. கருகும் - கறுத்துத் தோன்றும் ; மணி - இரத்தினம் ; சமழ்க்கும் - தாழ்வடையும்.

சீதையினிடம் கூறும்படி அடையாளங்கள் செப்பல்

317. சங்கை - சந்தேகம்; சான்றோய் - நற்குணங்கள் நிறைந்த அநுமனே; அவள் - சீதை.

318. முனி - கோசிக முனிவரர்; முதிய நீர் மிதிலை - பழமையான நீர்வளமுள்ள மிதிலா நகரம்; சென்னி நீண் மாலையான் - சனகன்; துறை - அகழி.

319. மாநகர் - அயோத்தி; நீ - அனுமன்.

சீராமன் கணையாழி கொடுத்தல்

320. மாமணி வனையும் நன்மோதிரம் - சிறந்த இரத்தினம் இழைத்துச் செய்யப்பட்ட மோதிரம்; அறிஞ - அறிவுடையோனே (அநுமான்); புனையும் வார்கழலி னான் - அநுமான்.

அநுமான் முதலியோர் பாலைவனத்தைச் சார்தல்

321. குழுமிப் போகின்றார் - திரண்டு செல்கின்றார்; நீங்கலால் - இல்லை யாதலால்; இச் செய்யுளின் நான்காமடியைச் 'சூரியன் தேருமோடாது மாமாகமீ தேரினோர்' என்னும் பால காண்டச் செய்யுளோடு (தாடகை வதை, செய். 9) ஒப்பிடுக.

வாநரர் பிலவழியிற் சேர்தல்

322. முடிவில் பீழையார் - முடிவில்லாத துன்ப முடையவர்; பதங்கள் - கால்கள்.

பிலத்துட்புக்கு வாநரர் நகரமொன்றைக் காண்டல்

323. அமிழ்துலே - தேவாமிர்தத்தை வருத்துகின்ற (மேம்பட்ட); அயினியை அடுத்த உண்டியுமே - சோறு முதலிய உணவுப் பொருள்களையும்; தமிழ் - தமிழ் மொழியை ஒத்து இனிமையுள்ள; தேறல் - கள்; இமிழ் கனிப் பிறக்கம் - இனிய பழங்களின் திரள்; கமழ்வுற - நறுமணம் வீச; கொட்பது-பெருமையை யுடையது.

வாநரவீரர் நகரத்துட் போதல்

324. கன்னிகெடு மாநகரம் - அழிவில்லாத பட்டணம்.

அநுமார் சாம்புவானைத் தேற்றல்

325. சகரர்க் கதிகமாகி பார் தின்று நனிசேறும் - சகரர் புத்திரர்களைப்போலப் பூமியைத் தோண்டி வெளியே செல்வோம்; அன்று அது எனின் - அவ்வாறு செல்வது கூடாதாயின்; மாருதி - அநுமான்.

சுயம்பிரபையைக் காணுதல்

326. மற்றவர் - ஏனைய வாநரவீரர்கள்; அது - அநுமான் சொல்லிய வார்த்தை; வலித்தார் - நிச்சயித்தார்; சுடரினுள்ளோர் - பிரகாசத்தோடு கூடியவர் பொற்சடையினள் - சுயம்பிரபை.

சுயம்பிரபை வாநரவீரர்களை வினுதல்

327. அணங்கு - சுயம்பிரபை; முன் - என்முன்; அனையர் - வாநரர்; சேறல் - வருதல்; வரவு என்ன யாவர் உரை செய்மின் என இசைத்தான் என்று இயைக்க.

வாநர வீரர்களின் உத்தரம்

328. *மறைத்த புரை - மறைத்த இடம்.*

சுயம்பிரபை வினுதல்

329. *யாணர்ச் செவ்வுழை நெடுங் கணவள்-புதுமையாகிய அழகிய மான்போன்ற நீண்ட கண்களை யுடைய சுயம்பிரபை; வெவ்விழைவில் சிந்தை - கொடிய ஆசையில்லாத மனம்.*

சுயம்பிரபை வாநர வீரர்களை உபசரித்தல்

330. *அவள் - சுயம்பிரபை; கான் நீர் - நறுமணமுள்ள ஜலம்; ஆட்டி - ஆடச் செய்து.*

331. *மெய்யுளது - வடிவ முள்ளது; உபாயம் செய்யும் வகை சிந்தையில் சிறிது நினைத்திர் என்று இயைக்க.*

அநுமான் கொண்ட தோற்ற வருணனை

332. *மாவடி - சிறந்த வடிவையுடைய; சுடர்கொள் விண் - சந்திர சூரியர் சஞ்சரிக்கும் ஆகாயம்; புரைந் தான் - ஒத்தான்.*

அநுமான் பிலத்திலுள்ள நகரத்தைக் கடலில் எறிதல்

333. *ஊழ் உற - முறையாக; மேல பால் ஆழி - மேற் றிசைக் கடல்.*

பிலத்தினின்று அநுமார் முதலியோர் வெளியேறல்

334. *இயக்கில் - அசைதல் இல்லாத; நீள் நுதலி, நல் நுதலி - சுயம்பிரபை; குன்று புரை தோளவர் - வாநர வீரர்; விசும்பினிடை - தேவ லோகத்திற்கு.*

போய்கைக் கரையை அடைந்து உறங்கும்போது அசுரன் வருதல்

335. குறி - குறித்த இடம்; தகைவு இல்லான் - நற்குணம் இல்லாதவன்.

அசுரன் வருணனை

336. மலையே போல்வான் - மலைபோலப் பெருந் தோற்ற முடையவன்; நிலை - இருப்பிடம்; நீர்மை - தன்மை (நற்குணம்); கால எயிற்றான் - (கொலைத்தொழில் புரிவதில்) யமனைப்போன்ற பற்களை யுடையவன்.

வானர வீரர் கோதாவரியைச் சார்தல்

337. ஊதைப் போல் விசை - காற்றைப் போன்ற வேகம்; வயவர் - வானர வீரர்; ஓங்கலாதி - பாண்டுமலையின் அடிவாரம், அரக்கன் - இராவணன்; அரக்கன் கவர்ந்து சென்ற சீதாபிராட்டியாரின் கூந்தலினின் றும் சோர்ந்து வீழ்ந்த மலர் மாலைக்கு ஒப்பாகக் கோதாவரியை வர்ணித் திருக்கின்றது. இச்செய்யு ளின் நான்காமடியை 'சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்' என்னும் ஆரணிய காண்டச் செய்யுளோடு (சூர்ப்பணகைப் படலம் செய்யுள் 1) ஒப்பிடுக.

வானர வீரர் சோழநாடு சார்தல்

338. பொன்னி நாடு - சோழ நாடு.

வானர வீரர் பாண்டிநாடு சார்தல்

339. மலை மண்டலம் - சேர நாடு; தமிழ் நாடு - தமிழ் வழங்கும் பாண்டி நாடு.

பாண்டி நாட்டின் சிறப்பு

340. முத்தும் முத்தமிழும் தந்து சிறந்து விளங்கும் பாண்டி நாட்டைத் தேவலோகம் ஒவ்வாது என்பது பொருள்.

பாண்டி நாட்டில் சீதையைக் காணுமல் வானர வீரர் வருந்தல்

341. திருந்தினர் - திருத்த மடைந்தனர்; துன்றலோதி - செறிந்த கூந்தலை யுடைய சீதை.

வானர வீரர் தென் கடலைக் காண்டல்

342. மழைத்த விண்ணகம் - நீருண்ட மேகம்; உழைத் தடங் கண்ணி - மான் போன்ற கண்ணை யுடைய சீதை; ஆழி - தென்கடல்.

சீதாபிராட்டியாரைக் காணுமல் வானர வீரர் வருந்தல்

343. யாவரும் - வானர வீரர் எல்லோரும்; தேவி - சீதா பிராட்டி; நா உறக் குழறிட - நாக்கு மிகவும் கலங்க.

344. மருந்தரு கடு - மாற்றுவதற்கு மருந்தில்லா விஷம்; திருந்தியது - தகுதியானது; இறுதி எண்ணுவார் - இறக்கும்படி எண்ணுபவர்.

அங்கதன் கூற்று

345. சான்றவர் - பெரியோர்; உயிர் போன்றவர் - உயிர் போன்ற நண்பர்கள்; வான்தொடர்குவன் - இறந்து படுவேன்.

346. நம் இறுதி - நாம் இறந்துபடுவதை; ஆய் - தாரை; எந்தை - சுக்கிரீவன்; வில்லி - ஸ்ராமன்; இளையகோ - இலக்குவன்.

347. பின்னுளோன் - சத்துருக்கன் ; பயந்தெடுத்தவர் தாய்மார்.

அநுமான் வார்த்தை

348. தோடலர் குழலி - சீதை ; பாடவம் - பெருமை.

சம்பாதி வருகை

349. எருவை வேந்தன் - சம்பாதி ; பின் துணை - சடாயு ; பிழைப்பில் வாய்மையான் - தவறாத சத்தியத்தை யுடையவன் (சடாயு) ; பொன்றினன் - இறந்து பட்டனன்.

சம்பாதி 'சடாயுவைக் கொன்றவன் யார் ?' என வினுதல்

350. நுணங்கு கேள்வியான் (அநுமான்) நோக்கினன் நின்றனன் என இயைக்க ; நிரப்புவீர் - விவரமாகக் கூறுவீர்.

அநுமான் உத்தரம்

351. உற்றதை - நடந்த விஷயத்தை ; நிரப்புதல் - சொல்லி முடித்தல் ; எருவை வேந்தன் - சம்பாதி.

சம்பாதியின் கூற்று

352. மின் பிறந்தாலென விளங்கு எயிற்றினாய் - அநுமானே ; முன்பிறந்தேன் - தமையன்.

அநுமான் பதில் கூறல்

353. கோதிலான் - குற்றமற்ற அநுமன் ; எறினன் - எறி.

சம்பாதி இரங்கல்

354. இராமன் பத்தினி, செந்தாள் வஞ்சி - சீதை ; உலந்தது - இறந்தது ; மைந்தா - அநுமானே.

சம்பாதி வானர வீரர்களைக் கொண்டாடல்

355. மைந்தர் - வீரர்களே ; நீர் வந்து எனை வாழ்வித்தீர், துன்ப ஆழிவாய் ஆழ்வித்திரலீர் என இயைக்க.

சம்பாதி வானர வீரர்களை இராமநாமம் செப்ப வேண்டல்

356. சோர்விலா - கெடுதலில்லாத ; பயன் - நன்மை.

வானர வீரர் இராமநாமம் செப்பல்

357. நீலமேனியான் நாமம் - சீராமபிரானது நாமம் ; வன் தோளான்-சம்பாதி ; சிறை - இறகு ; வானந்தாயது - (முளைத்து) வானத்தை எட்டியது.

வானர வீரர் சீதையைத் தேடி வந்தமை கூறல்

358. எந்தாய் - சம்பாதி ; அரக்கன் - இராவணன் ; தேவி- சீதை ; வந்தும் - வந்தோம்.

சம்பாதி கூற்று

359. பாகொன்று குதலையாளை, வேகின்ற வுள்ளத்தான்' இறைவி - சீதை ; அரக்கன் - இராவணன்.

360. வாய்மை - சீராமன் கூறிய வார்த்தைகள் ; தோகை - சீதை ; மீடிர் - மீளுங்கள் (திரும்புங்கள்) ; அழகன்- இராமன்.

சம்பாதி வானரரிடம் விடை பெற்றுச் செல்லல்

361. கன்றி - வருந்தி ; சேக்கை - இருப்பிடம் ; இரியல் போகி - நிலை கெட்டுத் தடுமாறி ; அக் கழுகினம் - முன்பு சடாயுவினாற் காக்கப்பட்ட கழுகுக் கூட்டம்.

வாகர வீரர் செய்ய வேண்டியதை ஆலோசித்தல்

362. புள்ளரசு - சம்பாதி; கையுறை நெல்லி - உள்ளங்கை நெல்லிக்கனி; உய் உரை - பிழைத்துப் போதற்குரிய வார்த்தை; நொய்தில் - விரைவாக.

சாம்புவான் அநுமானே கடலைத் தாண்டற்குரியவன் என்றல்

363. ஆரியன் முன்னர் - சீராமன் எதிரில்; சோர்வு அற - சோம்பலில்லாமல்; மாருதி-அநுமான்; அயன் மைந்தன் - பிரமனது புதல்வனாகிய சாம்புவான்; சீரியன்- சிறந்தவனாகிய அநுமான்.

சாம்புவான் அநுமானைப் புகழ்தல்

364. நினைவானும் மாதர் நலம் பேணாது வளர்ந்தீர் - நித்திய பிரமசாரியாக மனத்தினாலும் மாதரை எண்ணாமல் இருக்கின்றீர்; ஊழி கடந்தீர் - பிரமனையுளினும் மேம்பட்ட ஆயுளை யுடையீர்; அயன் - பிரமன்.

சாம்புவான் அநுமானைக் கடலைக் கடக்க வேண்டல்

365. இசை கொள்ளீர்-பெரும்புகழைப் பெறுவீர்; அன்னை- சீதை; இன்னல்-துன்பம்; விட்டான்-கூறிமுடித்தான்.

அநுமான் உடன்பட்டுக் கூறல்

366. அறிவாளன்-பேரறிவுடையோனாகிய அநுமான்; ஆல்மெல்லாம் எம்பல் வர - வாநரக் கூட்டங்கள் யாவும சந்தோஷமடைய; சிந்தை - கருத்து.

367. விலங்கினர் - அரக்கர்; மயில் - சீதை; முடிக்குவல் - முடிப்பேன்.

368. நீயிர் - நீங்கள்; தாய் - தாண்டி; தையல் - சீதை; எயினிர் - கட்டளையிட்டீர்.

369. நீர் முற்றும் - கடல் சூழ்ந்த; முந்நீர் உற்றது - கடல் மேலே பொங்கி எழுந்தது; அண்டம் - உலகம்; எங்கோன் - சீராமன்; கற்றை - கூட்டம்.

370. ஈண்டு - இங்கே; விடை தம்மின் - விடை கொடுங்கள்; சேண் தொடர் - ஆகாயம் வரையும் அளாவிய.

371. மேக்குற - மேலே பொருந்த; உருவறி வடிவன் - உருவாக அறியப்பட்ட பெரிய வடிவத்தினால்; திருவடி என்னுந் தன்மை - சிறிய திருவடி என்று சொல்லும் சம்பிரதாயத்தை.

அநுமான் பேருருவங் கொள்ளல்

372. மகேந்திர மலையின்மீது ஏறி அண்டத்தின்மேல் முகடு வரையிலும் வளர்ந்த பேர் உருவங் கொண்ட அநுமான் அண்டத்தைத் தாங்கும் பெருந்தூணாகவும், மகேந்திர மலை தூணின்கீழ் வைக்கும் கல்லாகவும் அமையும் என்று வருணிக்கப்பட்டிருக்கின்றது.